வடக்கின் முதல் நாளிதழ் - Estd 1959 Reg. No.: P.1632

ஈழநாடு
Eelanadu வாரமலர்

விலை ரூ. 30/=




மாருதி
Money Exchange (Pvt) Ltd.
இல.285, காலி வீதி, வெள்ளவத்தை, கொழும்பு 06
T.P: 011 236 2086
இல.390, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.
T.P: 021 221 4433
076 284 4443
MoneyGram. மணிகிராம் பணப்பரிமாற்றம்
Ria MONEY TRANSFER ரியா பணப்பரிமாற்றம்
WESTERN UNION MONEY TRANSFER வெஸ்ரேன் யூனியன் பணப்பரிவர்த்தனை
இவ் அனைத்து சேவைகளையும் இங்கு பெற்றுக் கொள்ளலாம்.

Email : news@eelanadu.lk மலர் : 05 11.08.2024 ஞாயிற்றுக்கிழமை இதழ் : 224 பக்கங்கள் : 16

# தேர்தல் அரசியலில் இனி நான் ஈடுபடவே மாட்டேன்!

## தமிழ் பொது வேட்பாளர் அரியநேத்திரன் உறுதி

• முன்னணியினதும் எங்களினதும் கொள்கை ஒன்றே!



யாழ்ப்பாணம், ஓகஸ்ட் 11

இனிவருகின்ற பொதுத் தேர்தலிலோ அல்லது வேறு தேர்தலிலோ நான் ஒருபோதும் போட்டியிடவேமாட்டேன் - இவ்வாறு தமிழ் பொது வேட்பாளராக தமிழ்த் தேசியப் பொதுக் கட்டமைப்பால் அறிவிக்கப்பட்ட பா. அரியநேத்திரன் தெரிவித்துள்ளார்.

அத்துடன், தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியினதும் தமிழ்த் தேசியப் பொதுக் கட்டமைப்பினதும் கொள்கை ஒன்றே. அது தென்னிலங்கையின் ஜனாதிபதி வேட்பாளர்களை புறக் கணிப்பது என்றும் அவர் கூறியுள்ளார்.

15



# வாகனத்தில் நல்லூருக்கு வந்த பிக்குகளால் சர்ச்சை!

யாழ்ப்பாணம், ஓக. 11

நல்லூர் கந்தசுவாமி ஆலய சுற்று வீதியில் பிக்குகள் சிலர் வாகனத்தில் வந்ததால் சர்ச்சை ஏற்பட்டது.

நல்லூர் கந்தசுவாமி ஆலய பெருந்திருவிழா நடைபெறுகிறது. இதனால், ஆலய சுற்றுவீதியில் வாகனங்கள் நுழையத் தடை விதிக்கப்பட்டுள்ளது.

இந்த நிலையில், நேற்றைய தினம் பிக்குகள் சிலர் வாகனத்தில் சென்றிருந்தனர். பிக்குகளின் வாகனத்துக்கு பொலிஸார் அனுமதி அளித்தமை பெரும் சர்ச்சையை ஏற்படுத்தியுள்ளது. (ஐ- 01)

# சோழர்கால பழமைமிக்க தாலி திருகோணேஸ்வரத்தில் களவு!

## பொலிஸ் விசாரணைகள் ஆரம்பம்

திருகோணமலை, ஓக. 11

திருக்கோணேஸ்வரம் ஆலயத்தில் சோழர் காலம் தொட்டு பாதுகாக்கப் பட்டுவந்த அம்மன் தாலி களவாடப் பட்டுள்ளதென பக்தர்கள் அளித்த முறைப்பாட்டின் அடிப்படையில் பொலிஸார் விசாரணைகளை ஆரம்பித்துள்ளனர்.

இரத்தின, வைர கற்கள் பதிக்கப்பட்டதும் 5 பவுண் உடையதுமான அந்தத் தாலி பல நூறு வருடங்கள் தொன்மம் மிக்கது. பல கோடி ரூபாய் மதிப்புமிக்க இந்தத் தாலி கடந்த வாரம் திருடப்பட்டுள்ளது என்று

15

# வடக்கு, கிழக்கு மக்களின் பிரச்னை தொடர்பில் பேசித் தீர்வு காண்போம்!

## நாமல் ராஜபக்ஷ உறுதியளித்தாராம்

கொழும்பு, ஓக. 11

வடக்கு, கிழக்கில் மக்கள் எதிர்கொள்ளும் பிரச்னைகள், மாவட்டங்களின் அபிவிருத்தி என்பன குறித்து கலந்துரையாடி தீர்வு காண்போம் என்று நாமல் ராஜபக்ஷ உறுதியளித்தார் என்று தெரிவிக்கப்பட்டது.

சிறீலங்கா பொதுஜன பெரமுன கட்சியின் ஜனாதிபதி வேட்பாளர் நாமல் ராஜபக்ஷ இலங்கை தமிழ் அரசுக் கட்சியின் சுமந்திரன் எம்.பியை நேற்று சனிக் கிழமை சந்தித்து பேசினார். இதன்போதே நாமல் ராஜபக்ஷ இந்த உறுதியை அளித்தார் என்று பெரமுனவை சேர்ந்த கீதநாத் காசி லிங்கம் கூறினார்.

இந்த சந்திப் பில், "வடக்கு, கிழக்கில் உள்ள தமிழ்

15

# தேர்தலில் யாருக்கு ஆதரவு தமிழ் அரசின் முடிவு இன்று

யாழ்ப்பாணம், ஓக. 11

ஜனாதிபதித் தேர்தல் தொடர்பில் இலங்கை தமிழ் அரசு கட்சியின் முடிவு இன்று ஞாயிற்றுக்கிழமை அறிவிக்கப்படும் என்று அந்தக் கட்சியின் தலைவர் மாவை சோ. சேனாதிராசா தெரிவித்துள்ளார்.

இலங்கை தமிழ் அரசுக் கட்சியின் மத்திய

15

# த. தே. பொதுக்கட்டமைப்பை சந்திப்புக்கு அழைத்த ரணில்!

கொழும்பு, ஓக. 11

நடைபெறவுள்ள ஜனாதிபதித் தேர்தலில் தமிழ் பொது வேட்பாளரை களமிறக்கும் தமிழ்த் தேசிய பொதுக்கட்டமைப்பினரை சந்திப்புக்கு அழைத்துள்ளார் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க.

எதிர்வரும் 15ஆம் திகதி மாலை 5 மணிக்கு ஜனாதிபதி செயலத்தில் இந்த சந்திப்புக்கு அழைப்பு விடுக்கப்பட்டுள்ளதாகத் தெரிய வருகின்றது.

15

பெருந்தோட்டத் தொழிலாளர் சம்பளம்:

# ரூ. 1,700 வழங்குவதற்கு கம்பனிகள் இணக்கம்

## ஜனாதிபதி ரணில் தெரிவிப்பு

கண்டி, ஓகஸ்ட் 11

பெருந்தோட்டத் தொழிலாளர்களின் ஒருநாள் சம்பளத்தை ஆயிரத்து 700 ரூபாயாக அதிகரிக்க அரசாங்கம் எடுத்த முடிவுக்கு 7 கம்பனிகள் இணக்கம் தெரிவித்துள்ளன என்று ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தெரிவித்துள்ளார்.

நாளை திங்கட்கிழமை சம்பள நிர்ணய

15

# நாகபட்டினத்திலிருந்து கப்பல் நேற்று காங்கேசனுக்கு வந்தது!



யாழ்ப்பாணம், ஓக. 11

தமிழ்நாடு - நாகபட்டினத்திலிருந்து பயணிகள் கப்பல் நேற்று சனிக்கிழமை பரீட்சார்த்த பயணமாக காங்கேசன்துறை துறைமுகத்துக்கு வந்தது.

நேற்று நண்பகல் 12 மணியளவில் சிவகங்கை என்று பெயரிடப்பட்ட இந்தக் கப்பல்

15

# தலைநகரில் தமிழர் மர்ம மரணம்!

கொழும்பு, ஓக. 11

கொழும்பு - பம்பலப்பிட்டியில் நிறுத்தப் பட்டிருந்த ஓட்டோவின் பின் இருக்கையிலிருந்து ஒருவரின் சடலம் மீட்கப் பட்டது.

இவ்வாறு சடலமாக மீட்கப்பட்டவர் செல்வநாயகம் பொனிபஸ் சிட்னி

15

# ரணிலை ஆதரிக்கும் பெரமுன எம். பிக்கள் சேர்ந்து தனிக்கட்சி!

கொழும்பு, ஓக. 11

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவுக்கு ஆதரவளிக்கும் சிறீ லங்கா பொதுஜன பெரமுன கட்சியின் எம். பிக்கள் சேர்ந்து சொந்தமாக கட்சி ஒன்றை உருவாக்கவுள்ளனர்.

இந்தக் கட்சி அடுத்த வாரம் நிறுவப்படும் என்றும் அதற்கான ஏற்பாடுகள் ஏற்கனவே ஆரம்பமாகி நடைபெற்று வருகின்றன எனவும் பெரமுனவை சேர்ந்த வரும் ஜனாதிபதித் தேர்தலில் ரணில் விக்கிரமசிங்கவை ஆதரிப்பவருமான பாராளுமன்ற உறுப்பினர் மகிந்தானந்த அளுத்கமகே தெரிவித்துள்ளார்.

கண்டியில் நேற்று பொதுஜன பெரமுன கட்சியினரை ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவுடன் பொதுஜன பெரமுனவின் எம். பிக்களான மகிந்தானந்த, பிரசன்ன ரணதுங்க, லொஹான் ரத்வத்த, அநுராத


15



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஒவ்வொரு வேட்பாளரும் ரூ. 200 மில்லியன் செலவு

## தேர்தல்கள் ஆணையாளர் ரத்நாயக்க



கொழும்பு, ஓக. 11

**ஜனாதிபதித் தேர்தலில் போட்டியிடும் வேட்பாளர்களின் எண்ணிக்கை தொடர்ந்து அதிகரித்தால், ஒவ்வொருவரும் 200 மில்லியன் ரூபாய் செலவு செய்ய நேரிடும் என தான் நம்புவதாக தேர்தல்கள் ஆணையாளர் நாயகம் சமன் சிறீ ரத்நாயக்க தெரிவித்தார்.**

கொழும்பில் நேற்று முன்தினம் நடைபெற்ற செய்தியாளர் சந்திப்பில் அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

"ஒரு வேட்பாளர் அதிகரித்தால், எமது செலவு குறைந்த பட்சம் 200 மில்லியன் ரூபாய் அதிகரிக்கும். அது இந்த நாட்டு மக்களின் பணம். கருத்தியல் ரீதியாக பலர் வருகிறார்கள். அது எங்களுக்கு பிரச்னை இல்லை. அநேகமானோர் ஊடக வெளிச்சத்தை பெறுவதற்காக வருகின்றனர்"- என்றார். (எ)


# திருகோணமலையில் இறந்து கரையொதுங்கும் நண்டுகள்!

திருகோணமலை, ஓக. 11

திருகோணமலை நகரில் உள்ள கடற்கரையில் நேற்றுச் சனிக்கிழமை அதிகாலை முதல் இலட்சக்கணக்கான சிறு சிகப்பு நண்டுகள் இறந்த நிலையில் கரையொதுங்கின.


சனி மற்றும் ஞாயிற்றுக் கிழமைகளில் இந்தப் பிரதேசத்துக்கு கூடுதலான சுற்றுலாப் பயணிகள் வருகின்ற நிலையில் இலட்சக் கணக்கான நண்டுகள் இறந்த நிலையில் கரை யொதுங்கியுள்ளமை மக்கள் மத்தியில் ஒரு விதமான அச்சத்தை ஏற்படுத்தியுள்ளது.

சுமார் ஐந்து தொடக்கம் ஆறு கிலோ மீட்டர் நீளமுள்ள இந்த கடற்கரையில் மூன்று தொடக்கம் 4 கிலோ மீற்றர் தூரம் வரை இவ்வாறான சிகப்பு நிற நண்டுகள் இறந்த நிலையில் கரையொதுங்கியுள்ளன.(எ)



# குடியிருப்பு காணிகளை அபகரிக்க வேண்டாம்!

## கப்பல்துறை மக்கள் கவனவீர்ப்பு



திருகோணமலை, ஓக. 11

திருகோணமலை, மாவட்டம் பட்டினமும் சூழலும் பிரதேச செயலகப் பிரிவுக்குட்பட்ட கப்பல் துறை பகுதியில் உள்ள மக்கள் தங்கள் காணிகளை அபகரிக்க வேண்டாம் எனக் கோரி நேற்றுச் சனிக்கிழமை கவனவீர்ப்புப் போராட்டத்தில் ஈடுபட்டனர்.

"வேண்டாம் வேண்டாம் காற்றாலை மின் உற்பத்தி நிலையம் வேண்டாம், எங்களுடைய விவசாய காணிகள் எங்களுக்கு வேண்டும் போன்ற வாசகங்களை ஏந்தியவாறும் கவனவீர்ப்பில் ஈடுபட்டனர்.

இலங்கை துறைமுக அதிகார சபையினர் தங்கள் பகுதிக்குள் வந்து விவசாயம் செய்ய விடாது தடுத்து நிறுத்துவதுடன் எந்தவிதமான கட்டடமோ குடியிருப்புகளோ இருக்கக்கூடாது என்றும் அவற்றை அகற்றுமாறும் வற்புறுத்துவதாகவும் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்ட மக்கள் தெரிவித்தனர்.

குறித்த கப்பல் துறை கிராமத்தில் சுமார் 1200இற்கும் மேற்பட்ட குடும்பங்கள் அன்றாட ஜீவனோபாயமாக மீன்பிடி, விவசாயத்தை கொண்டு வாழ்ந்துவருகின்றனர்.

சுமார் 150 ஏக்கர் அளவில் விவசாய காணிகள் காணப்படுகின்றன. இங்கு 1977இல் மீள் குடியேறிய மக்களை தற்போது வெளியேறுமாறு துறைமுக அதிகார சபையினர் கூறிவருகின்றனர்.

அப்போதைய கப்பல் துறை, துறைமுகங்கள், புனர்வாழ்வு, புனரமைப்பு அமைச்சராக செயல்பட்ட மறைந்த எம். எச். எம்.அஷ்ரப்பினால் மக்கள் மீள் குடியேற்றப்பட்டனர் என்றும் போராட்டத்தில் ஈடுபட்டவர்கள் கூறினர்.

நாங்கள் பெரும் சிரமங்களை எதிர்நோக்கி வாழ்ந்து வருகிறோம். துறைமுக அதிகார சபையினர் எங்களை வெளியேறுமாறு அடிக்கடி தொல்லை கொடுக்கின்றனர். எங்களை நிம்மதியாக வாழ விடுங்கள் எனவும் கவனவீர்ப்பில் ஈடுபட்ட மக்கள் கோரிக்கை விடுத்தனர்.

எனவே, இப் பிரதேச மக்களின் காணிகளுக்கான உறுதிப் பத்திரங்களை வழங்கி வாழ வைக்குமாறும் வலியுறுத்தினர். (எ)

# வீடுடைத்து திருடிய இளம் பெண் கைது!

மிரிஹான, ஓக. 11

மிரிஹான பொலிஸ் பிரிவுக்கு உட்பட்ட பகுதியில் உள்ள வீடொன்றை உடைத்து பெறுமதியான பொருட்களைத் திருடிய சம்பவத்துடன் தொடர்புடைய இளம் பெண் ஒருவர் நுகேகொடை பொலிஸ் குற்றத் தடுப்புப் பிரிவினரால் நேற்று முன்தினம் கைது செய்யப்பட்டுள்ளார்.

நுகேகொடை பொலிஸ் குற்றத் தடுப்புப் பிரிவினருக்குக் கிடைத்த தகவலின் பேரில் மேற்கொள்ளப்பட்ட சுற்றிவளைப்பில் இந்த சந்தேக நபர் கைது செய்யப்பட்டுள்ளார்.

29 வயதுடைய பெண்ணொருவரே இவ்வாறு கைது செய்யப்பட்டுள்ளார்.

கைதுசெய்யப்பட்ட பெண்ணிடமிருந்து தங்க நகைகள் மற்றும் மோட்டார் சைக்கிள் ஒன்று என்பன கைப்பற்றப்பட்டுள்ளன.

# சீன பிரஜைகளை தாக்கிய 2 நேபாள பிரஜைகள் கைது

களுத்துறை, ஓக. 11

சீன பிரஜைகள் இருவரை ஹோட்டல் ஒன்றில் வைத்து தாக்கி, அங்குள்ள சொத்துகளுக்கு சேதம் விளைவித்த இரு நேபாள பிரஜைகளை வாதுவ பொலிஸார் கைது செய்துள்ளனர்.

இந்தச் சம்பவம் களுத்துறை - வாதுவ பிரதேசத்திலுள்ள ஹோட்டலில் இடம்பெற்றுள்ளது.

தாக்குதலை மேற்கொண்ட நேபாள நாட்டுப் பிரஜைகள் இருவரும் சீனப் பிரஜைகளுடன் உரையாடிக் கொண்டிருந்ததாகவும் பின்னர் தாக்குதலை மேற்கொண்டுள்ளதுடன் சொத்துகளுக்கு சேதமேற்படுத்தியுள்ளதாகவும் பொலிஸார் தெரிவித்தனர்.

கைதுசெய்யப்பட்ட நேபாள பிரஜைகள் இருவரையும் பாணந்துறை நீதிவான் நீதிமன்றத்தில் முற்படுத்த பொலிஸார் நடவடிக்கை மேற்கொண்டுள்ளனர். (எ)

# 365 உயிருள்ள மீன்கள், ஆமைகளுடன் விமான நிலையத்தில் வர்த்தகர் கைது

கொழும்பு, ஓக. 11

365 உயிருள்ள மீன்கள் மற்றும் ஆமைகளுடன் விமான நிலையத்தில் ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார்.

இவர் சுங்க உயிரப் பல்வகைமை பாதுகாப்புப் பிரிவினரால் நேற்று அதிகாலை கட்டுநாயக்கா சர்வதேச விமான நிலையத்தில் வைத்து கைது செய்யப்பட்டுள்ளார்.

தலவத்துகொடையைச் சேர்ந்த 50 வயதுடைய வர்த்தகரே இவ்வாறு கைது செய்யப்பட்டுள்ளார்.

சிங்கப்பூரில் இருந்து வந்த குறித்த வர்த்தகர் தனது நண்பர் ஒருவருக்காக மீன் மற்றும் ஆமைகளை கொண்டு வந்ததாக விசாரணையில் தெரிய வந்துள்ளது.

இவ்வாறு கொண்டுவரப்பட்ட விலங்குகளில் ஆசிய அரோவானா, சைக்காட், கெட்பிஷ் மற்றும் ஆமைகள் உள்ளடங்குவதாக சுங்கத் திணைக்களம் தெரிவித்துள்ளது.



இலங்கை சுங்க பல்லுயிர் பாதுகாப்புப் பிரிவின் அதிகாரிகளுக்கு கிடைத்த இரகசிய தகவலையடுத்து இந்த கைது நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டதுடன், சம்பவம் தொடர்பான மேலதிக விசாரணைகளை அதிகாரிகள் முன்னெடுத்து வருகின்றனர்.

# நல்லூர் பெருந்திருவிழா சிறப்பு நிகழ்வுகள்!

யாழ்ப்பாணம், ஓக. 11

நல்லூர் கந்தசுவாமி ஆலய பெருந்திருவிழாவை முன்னிட்டு இந்து சமய கலாசார அலுவல்கள் திணைக்களம் சிறப்பு நிகழ்வுகளை ஒழுங்கு செய்து நடத்தி வருகின்றது.

நல்லை திருஞானசம்பந்தர் ஆதீன கலா மண்டபத்தில் நடத்தப்படும் இந்த நிகழ்வில் இன்று ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 4 மணி தொடக்கம் சிறப்பு நிகழ்வுகள் நடைபெறவுள்ளன.

நல்லை திருஞானசம்பந்தர் ஆதீன முதல்வர் இரண்டாவது குருமகா சந்நிதானம் சிறீலசிறீ சோமசுந்தர தேசிக ஞானசம்பந்த பரமாசார்ய சுவாமிகள், அமெரிக்கா ஹவாய் சைவ ஆதீன சிவாய சுப்பிரமணிய சுவாமிகளின் சீடர் தொண்டு நாதன் சுவாமிகள் ஆகியோர் திருமுன்னிலை வகிக்க நிகழ்வு ஆரம்பமாகும்.

யாழ். பல்கலைக்கழக இந்துக் கற்கைகள்பீட, சமஸ்கிருதத் துறைத் தலைவர் கலாநிதி மகேஸ்வரக் குருக்கள் பால கைலாசநாத சர்மா தலைமையில் நடைபெறும் இந்த நிகழ்வில் யாழ்ப்பாணம் பிரதேச செயலாளர் சா. சுதர்சன் பிரதம அதிதியாகவும் யாழ். மாவட்ட செயலக நிர்வாக உத்தியோகத்தர் ஆ. சத்திய மூர்த்தி, யாழ்ப்பாணம் செந்தில் கதிர்வேலாயுதசுவாமி தேவஸ்தான செயலாளர் விநாயகமூர்த்தி சிறீசக்திவேல் சிறப்பு அதிதியாகவும் கலந்து கொள்ளவுள்ளனர்.

இதில், கொழும்புத்துறை வதிரிபீட விநாயகர் அறநெறி பாடசாலை, இலக்கணை சுவாமிகள் அறநெறி பாடசாலை, சிறீ சந்திரசேகர பிள்ளையார் அறநெறி பாடசாலை , நல்லூர் தெற்கு சிறீ கற்பக விநாயகர் அறநெறி பாடசாலை மாணவர்கள் கலை நிகழ்வுகளை வழங்க வுள்ளனர். விசேட நிகழ்வாக திருமதி விஜிந்தன் நெறியாள்கையில் கீதவாஹினி இசைக் கல்லூரி வழங்கும் வாத்திய சங்கமம் நடைபெறவுள்ளது என்று இந்து சமய கலாசார அலுவல்கள் திணைக்கள பணிப்பாளர் ய. அநிருந்தனன் தெரிவித்துள்ளார். (ஐ)

# சிறீலங்கா மக்கள் கட்சி ரணிலுக்கு ஆதரவு

கொழும்பு, ஓக. 11

சிறீ லங்கா மக்கள் கட்சி இம்முறை ஜனாதிபதித் தேர்தலில் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவுக்கு ஆதரவளிக்க தீர்மானித்துள்ளது.

அந்தக் கட்சியின் தலைவரும் பாராளுமன்ற உறுப்பினருமான அசங்க நவரத்ன இதனைத் தெரிவித்தார். (எ)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# 3 வெளிநாட்டு பெண்களை என்னால் மறக்க முடியாது!

ஜனாதிபதி ரணில் தெரிவிப்பு

கொழும்பு, ஒக. 11

**இந்திய நிதியமைச்சர் நிர்மலா சீதாராமன் உள்ளிட்ட மூன்று வெளிநாட்டுப் பெண்களின் உதவியுடன்தான் நாட்டை முன்னேற்றினேன். அவர்களின் உதவியை நாம் ஒருபோதும் மறந்துவிட முடியாது என்று ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தெரிவித்தார்.**



"பெண்கள் எமது பலம்" எனும் தொனிப்பொருளில் கொழும்பு இலங்கை கண்காட்சி மற்றும் மண்டபத்தில் நடைபெற்ற பெண்கள் மாநாட்டில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே ஜனாதிபதி மேற்கண்டவாறு குறிப்பிட்டார். அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு,

எனக்கு மூன்று பெண்கள் ஆதரவு வழங்கினர். இந்திய நிதியமைச்சர் நிர்மலா சீதாராமன், அமெரிக்க திறைசேரியின் செயலாளர் ஜெனட் யெலன், சர்வதேச நாணய நிதியத்தின் முகாமைத்துவப் பணிப்பாளர் கிறிஸ்டலினா ஜோர்ஜிவா ஆகிய 3 பெண்கள்.

தேசப்பற்று குறித்து பேசுபவர்கள், மக்கள் படும் துன்பங்கள் தமக்குத் தெரியும் என்று கூறியவர்கள் அன்று ஓடினார்கள். வெளிநாடுகளைச் சேர்ந்த மூன்று பெண்கள் நாட்டை முன்னேற்ற உதவினார்கள். இந்த மூவரின் உதவி இல்லாவிட்டால் இன்று நாம் இந்த நிலையை அடைந்திருக்க முடியாது.

இந்த நாட்டில் உரம் இல்லாத போது அமெரிக்காவைச் சேர்ந்த சமந்தா பவர் எங்களுக்கு ஆதரவளித்தார். உரத்தை வழங்கியதன் காரணமாக அந்த சிறு போகத்தில் வெற்றி பெற்று பொருளாதாரத்தை முன்னோக்கி கொண்டு வர முடிந்தது. எனவே அந்தப் பெண்களுக்கு நாம் நன்றி கூற வேண்டும்.

சிறந்த தேசபக்தர்கள், அனுபவம் வாய்ந்த தலைவர்கள் என்று கூறிக்கொள்ளும் எவரும் இந்த நாட்டின் பொறுப்பை ஏற்கவில்லை. மிகவும் சிரமப்பட்டு ஒரு நாடாக முன்னோக்கி வந்தோம். நாம் மேலும் செல்ல வேண்டும். நாம் அனைவரும் பட்ட துன்பங்களைச் கூறத் தேவையில்லை.

சர்வதேச நாணய நிதியத்தின் முகாமைத்துவப் பணிப்பாளர் கிறிஸ்டலினா ஜோர்ஜீவா நான் ஆதரவைக் கோரியபோது வழங்கிய உதவியினால் இன்று இந்த நிவாரணங்களை நாங்கள் பெற்றுள்ளோம். ஜெனட் யெலன் மற்றும் நிர்மலா சீதாராமன் ஆகியோர் எங்களுக்கு ஆதரவளித்தனர். இதனால் தான் நாங்கள் இன்று வலுவாக முன்னேற முடிந்தது.

சர்வதேச நாணய நிதியம் மற்றும் எங்களுக்கு கடன் வழங்கும் பல நாடுகளுடன் ஒப்பந்தங்களில் கைச்சாத்திட்டுள்ளோம். நாங்கள் இதன்போது இணங்கிய நிபந்தனைகளை பொருளாதார பரிமாற்றச் சட்டத்தில் சேர்த்துள்ளோம். இந்தப் பாதையில் நாம் தொடர்ந்தால், ஒரு நாடாக நாம் மீண்டு வரக்கூடிய திறன் உள்ளது.

ஆனால் சர்வதேச நாணய நிதியத்துடனான ஒப்பந்தம் திருத்தப்படும் என சிலர் கூறுகின்றனர். நாட்டின் பிரச்னைகளைத் தீர்க்க முடியாது என பகிரங்கமாக அறிவித்துவிட்டு தப்பி ஓடியவர்கள் இன்று பெண்களின் ஆதரவுகளால் கிடைத்த இந்த நிவாரணத்தை அகற்றுவோம் என கூறுகிறார்கள்.

எனவே, இந்த நிவாரணத்தை இழப்பதா? அல்லது பாதுகாப்பதா? என்பதை முடிவு செய்ய வேண்டும். தாய்மார்கள் தமது பிள்ளைகளின் எதிர்காலத்தைப் பற்றியே சிந்திக்க வேண்டும், நீங்கள் சரியான முடிவை எடுக்க வேண்டும்.

இந்த கடினமான பயணத்திலும் இந்த நாட்டு பெண்களை நான் மறக்கவில்லை. அஸ்வெசும, உறுமய, குறைந்த வருமானம் கொண்டவர்கள் வசிக்கும் அடுக்கு மாடிக் குடியிருப்புகளுக்கு உரிமை வழங்குதல், மலையகத்தில் கிராமங்கள் அமைக்கும் திட்டம், பாடசாலை மாணவர்களுக்கு உணவு வழங்கும் திட்டம் போன்ற வேலைத்திட்டங்களை செயல்படுத்தி நிவாணரங்கள் வழங்கப்பட்டன. அதேபோன்று, பெண்களை வலுவூட்டவும் நாம் நடவடிக்கை எடுத்தோம்.

அதற்காக பெண்களை வலுவூட்டும் சட்டத்தை நிறைவேற்றியுள்ளோம். 20 - 30 வருடங்களாக இந்த நாட்டில் சிறுபான்மையினரின் உரிமைக்கான போராட்டங்கள் நடந்து கொண்டிருந்தன. இப்போது அவற்றைப் பேசித் தீர்க்கும் முயற்சியில் ஈடுபட்டுள்ளோம்.

சிங்களவர், தமிழர் மற்றும் முஸ்லிம்களுக்கு சம உரிமை இருக்க வேண்டும். இப்படி சிறுபான்மையினரின் பிரச்னைகளைத் தீர்க்கும் அதேவேளையில் இந்த நாட்டில் பெரும்பான்மையாக உள்ள பெண்களுக்கு சம உரிமையைப் பெற்றுக்கொடுக்கும் வகையில் செயல்பட்டு வருகின்றோம்.

சிங்கள, தமிழ், முஸ்லிம் என்ற பாகுபாடின்றி அனைத்து பெண்களுக்கும் இந்த உரிமைகளை வழங்குவதற்கான முதல் சட்டத்தை இப்போது கொண்டு வந்துள்ளோம். மேலும், ஆண்களுக்கு நிகராக பெண்களுக்கும் சம உரிமை வழங்கு சட்டம் கொண்டு வரப்படுகிறது. மேலும் இந்த நாட்டில் பெண்களின் உரிமைகளை வென்றெடுப்பதற்கு இன்னும் பல நடவடிக்கைகளை எடுத்துள்ளோம் என்பதைக் கூற வேண்டும்.

நாம் அனைவரும் ஒரு நல்ல நாட்டை விரும்புகிறோம். உங்கள் குழந்தைகளுக்கு சிறந்த நாடு தேவை. அதற்கு முன் நம் வீடுகளில் உள்ள வாழ்க்கைச் சுமையைக் களைந்து முன்னேறுவோம். நாட்டை அபிவிருத்தி செய்வோம் என்று கேட்டுக் கொள்கிறேன்- என்றார். (எ)

## பொல்லால் தாக்கிக் காயமடைந்த பொலிஸ் கான்ஸ்டபிள் உயிரிழப்பு

தங்காலை, ஒக. 11

அம்பாந்தோட்டை தங்காலை பிரதேசத்தில் பொல்லால் தாக்கப்பட்டு மருத்துவமனையில் சேர்க்கப்பட்டிருந்த பொலிஸ் கான்ஸ்டபிள் ஒருவர் சிகிச்சை பலனின்றி உயிரிழந்ததாக பொலிஸார் தெரிவித்தனர்.

தங்காலை பொலிஸ் குற்றப் புலனாய்வுப் பிரிவில் கடமையாற்றிய பொலிஸ் கான்ஸ்டபிளே இவ்வாறு உயிரிழந்தார்.

உயிரிழந்த பொலிஸ் கான்ஸ்டபிள் கடந்த 08 ஆம் திகதி தனது கடமைகளை முடித்து விட்டு மீண்டும் வீடு நோக்கிச் சென்று கொண்டிருக்கும் போது தனது சகோதரனுடன் தகராறில் ஈடுபட்ட நபர்களை விசாரிப்பதற்குச் சென்றார்.

இதன்போது, அந்த நபர்கள் இந்த பொலிஸ் கான்ஸ்டபிளையும் சகோதரனையும் பொல்லால் தாக்கிக் காயப்படுத்தியுள்ளனர்.

இதனையடுத்து, காயமடைந்த பொலிஸ் கான்ஸ்டபிளும் சகோதரனும் காலி கராப்பிட்டிய மருத்துவமனையில் சேர்க்கப்பட்ட பின்னர் பொலிஸ் கான்ஸ்டபிள் சிகிச்சை பலனின்றி உயிரிழந்ததாக பொலிஸார் தெரிவித்தனர்.

## 53 ஆயிரம் சுற்றுலா பயணிகள் 8 நாட்களில் இலங்கை வருகை

கொழும்பு, ஒக. 11

நாட்டுக்கு வருகை தரும் சுற்றுலாப் பயணிகளின் எண்ணிக்கை ஒகஸ்ட் மாதத்தில் அதிகரித்துள்ளது.

இதன்படி, இந்த மாதத்தில் முதலாம் திகதி முதல் 8 ஆம் திகதி வரை எட்டு நாட்களில் 53, 150 வெளிநாட்டு சுற்றுலாப் பயணிகள் வருகை தந்துள்ளனர். இதேவேளை, இந்த வருடம் இதுவரை 12 இலட்சத்து 52 ஆயிரத்து 209 சுற்றுலாப் பயணிகள் இலங்கைக்கு வருகை தந்துள்ளனர்.

ஏப்ரல் மாதத்தில் 35, 000 பேரும், மே மாதத்தில் 26, 000 பேரும், ஜூன் மாதத்தில் 27, 000 பேரும், ஜூலை மாதத்தில் 43, 000 பேரும் வருகை தந்துள்ளனர். அத்துடன் சுற்றுலாப் பயணிகளின் வருகை வளர்ச்சியடைந்துள்ளது.

ஒகஸ்ட் மாதத்தில் வாராந்திர சராசரி வருகை சராசரியாக 46 ஆயிரமாகவும், நாளாந்த வருகை சராசரியாக 6,600 ஆகவும் உள்ளது.

ஒகஸ்ட் மாதத்தில் கோடைகாலம் காரணமாக சுற்றுலாப் பயணிகளின் வருகை அதிகரித்துள்ளது. எவ்வாறாயினும், சுற்றுலா மற்றும் வருகை தரு வீசா வழங்குவதில் உள்ள சிக்கல்கள் காரணமாக, எதிர்வரும் வாரங்கள் மற்றும் மாதங்களுக்கு இந்த வேகத்தைத் தக்கவைக்க முடியுமா? என்பது கேள்விக்குறியாகவுள்ளது.

## தனியார் துறை ஊழியர்களின் உரிமைகளைப் பாதுகாக்க தேசிய கொள்கை வேண்டும்



கொழும்பு, ஒக. 11

எமது நாட்டில் தனியார்த் துறைகளில் இலட்சக்கணக்கான மக்கள் சேவையில் ஈடுபட்டு வருகின்றனர். அவர்களின் தொழில் பாதுகாப்பு, உழைப்புக்கு ஏற்ற சம்பளம் தொடர்பில் முறையான தேசிய கொள்கை உருவாக்கப்பட வேண்டும் என எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ தெரிவித்தார்.

பாராளுமன்றத்தில் வெள்ளிக்கிழமை விசேட கூற்றொன்றை முன்வைத்து அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார். அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு,

தனியார்த் துறைகளில் பணியாற்றும் ஊழியர்களின் சேவை, பாதுகாப்புத் தன்மை, காப்புறுதி மற்றும் அவர்களுக்கு கிடைக்க வேண்டிய போதுமான சம்பளம் தொடர்பில் தெளிவான முறைமை ஒன்று நாட்டின் சட்ட கட்டமைப்பில் இல்லை.

வருமான வரி திருத்தப் பிரச்னை, நுகர்வோர் செலவு தொடர்பான அழுத்தம், உள்நாட்டு கடன் மறுசீரமைப்பு முறைமை, தொழில் ஸ்திரத்தன்மை உள்ளிட்ட பல பிரச்னைகளுக்கு தனியார்த் துறை ஊழியர்கள் முகம்கொடுத்து வருகின்றனர். பால் இன சமத்துவம் உள்ளிட்ட சவால்களுக்கு நாட்டில் தேசிய தொழில் கொள்கை ஒன்று இருக்க வேண்டும்.

குறிப்பாக, அரச மற்றும் தனியார்த் துறைகளில் சேவை செய்துவரும் எமது மக்களின் தொழில் உரிமை, பாதுகாப்பு, மேலதிக கொடுப்பனவு உள்ளிட்ட விடயங்கள் உறுதிப்படுத்தப்பட வேண்டும். அதனால் தேசிய தொழில் பாதுகாப்பு கொள்கை ஒன்றை முன்வைத்து தனியார்த் துறையில் இருக்கும் ஊழியர்களின் உரிமைகளைப் பாதுகாக்க நடவடிக்கை எடுக்குமாறு அரசாங்கத்தை கேட்டுக்கொள்கிறேன்- என்றார்.(எ)

## 3 ஆயிரம் உள்ளூர் தேங்காய் எண்ணெய் தொழிற்சாலைகளை பாதுகாக்க திட்டம்!

கொழும்பு, ஒக. 11

3000 உள்ளூர் தேங்காய் எண்ணெய் தொழிற்சாலைகளை மீட்பதற்கான திட்டங்களை எதிர்காலத்தில் எவ்வாறு நடைமுறைப்படுத்துவது தொடர்பான பிரேரணையை சமர்ப்பிக்குமாறு அமைச்சர் மகிந்த அமரவீர, உள்ளூர் தேங்காய் எண்ணெய் உற்பத்தி கைத்தொழில்கள் மற்றும் விவசாய, பெருந்தோட்ட கைத்தொழில் அமைச்சின் அதிகாரிகளுக்கு பணிப்புரை வழங்கியுள்ளார்.

தற்போது நாட்டில் வருடாந்த நுகர்வுக்குத் தேவையான தேங்காய் எண்ணெய்யின் அளவு 290,000 மெற்றிக் தொன்களாகும்.

ஆனால் தற்போது 40,000 மெற்றிக் தொன் மாத்திரமே உற்பத்தி செய்யப்படுகிறது.

எஞ்சியுள்ள 250,000 மெற்றிக் தொன் தேங்காய் எண்ணெய், சுத்திகரிக்கப்பட்ட மற்றும் சுத்திகரிக்கப்படாத எண்ணெய் வடிவில் இலங்கைக்கு இறக்குமதி செய்யப்படுகிறது.



தேங்காய் எண்ணெய் மீது விதிக்கப்பட்டுள்ள வற் தொடர்பில் நிதியமைச்சு விசேட கலந்துரையாடலொன்றை நடத்தவுள்ளதாக அவர் மேலும் தெரிவித்தார். (அ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# குடிவரவு திணைக்களத்தின் அதிகாரம் இந்திய நிறுவனத்துக்கு தாரைவார்ப்பு

## தேசத்துரோகம் என்று சம்பிக்க சாடல்



கொழும்பு, ஓக. 11

**நாட்டின் ஆட்புல எல்லை தொடர்பில் குடிவரவு மற்றும் குடியகல்வு திணைக்களத்துக்கு வழங்கப்பட்டிருந்த பொறுப்பு மற்றும் அதிகாரம் கடந்த ஏப்ரல் மாதம் முதல் இந்திய நிறுவனத்துக்கு அமைச்சரவை அனுமதியுடன் வழங்கப்பட்டது. இதுவே அண்மைக்கால தேச துரோக செயல்பாடாகும் - இவ்வாறு பாராளுமன்ற உறுப்பினர் சம்பிக்க ரணவக்க குற்றஞ்சாட்டியுள்ளார்.**

வி. எவ். எஸ். புதிய வீசா விநியோகத்துக்கு இடைக்கால தடையுத்தரவை பிறப்பித்த உயர் நீதிமன்றம் பழைய முறைமையில் வீசா விநியோக சேவையை முன்னெடுக்குமாறு அறிவுறுத்தியது. நீதிமன்றத்தின் அறிவுறுத்தலுக்கு அமைய குடிவரவு மற்றும் குடியகல்வு திணைக்கள கட்டுப்பாட்டாளர் நாயகம் செயல்படவில்லை. அரச அதிகாரி என்ற அடிப்படையில் நாட்டின் சட்டத்துக்கு அமைய கட்டுப்பாட்டாளர் நாயகம் செயல்பட வேண்டும். இல்லையேல் கடுமையான நடவடிக்கையில் ஈடுபடுவோம் என்றும் சம்பிக்க குறிப்பிட்டார்.

கொழும்பில் உள்ள ஐக்கிய குடியரசு முன்னணியின் காரியாலயத்தில் வெள்ளிக்கிழமை நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பின்போதே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

“நாட்டின் ஆட்புல எல்லையின் பாதுகாப்பை சவாலுக்குட்படுத்தும் வகையில் பாரதூரமான பிரச்னைகளை பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சு ஏற்படுத்தியுள்ளது. வெளிநாட்டு சுற்றுலாப் பயணிகளை நாட்டுக்கு அழைத்தல் மற்றும் வேலையற்றோரை தொழில் வாய்ப்புகளுக்காக வெளிநாடுகளுக்கு அனுப்பி வைத்தலை பொருளாதார மீட்சிக்கான திட்டங்களாக அரசாங்கம் கருதுகிறது.

வெளிநாட்டு சுற்றுலாப் பயணிகளின் வருகை மற்றும் தொழில் வாய்ப்புகளுக்காக வெளிநாடுகளுக்கு செல்வோர் அதிகரிப்பு ஆகிய காரணிகளால் வெளிநாட்டு கையிருப்பு அதிகரித்துள்ளது. இவ்விரு துறைகளும் பாரதூரமான நெருக்கடிகளை எதிர்கொள்ளும் செயல்பாடுகளை பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சு முன்னெடுத்துள்ளது.

தேச பற்றாளர்கள் என்று குறிப்பிட்டுக் கொள்ளும் ஒரு தரப்பினர் நாட்டின் ஆட்புல எல்லையை வெளிநாட்டு நிறுவனத்துக்கு வழங்கியதை கவனத்தில் கொள்ளவில்லை. வி. எவ். எஸ். நிறுவனத்துடனான இந்த புதிய செயல்திட்டத்தால் பெரும் நிதி மோசடி செய்யப்படும் என்பதை உயர்நீதிமன்றத்துக்கு தரவு கட்டமைப்புடன் எடுத்துரைத்தோம்.

இந்த நிலையில், உயர் நீதிமன்றத்தின் அறிவுறுத்தலையும் கவனத்தில் கொள்ளாது அரசாங்கம் செயல்படுகிறது. பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சர் மற்றும் குடிவரவு மற்றும் குடியகல்வு திணைக்கள கட்டுப்பாட்டாளர் தன்னிச்சையாக செயல்படுகிறார். குடிவரவு திணைக்கள கட்டுப்பாட்டாளர் அரச அதிகாரி என்ற வகையில் பொறுப்புடன் செயல்பட வேண்டும். அதனை விடுத்து அரசாங்கத்தின் தேவைக்கு அமைய செயல்பட்டால் அவருக்கு எதிராகவும் சட்ட ரீதியில் நடவடிக்கைகளை முன்னெடுப்போம் - என்றார்.

(எ)

# இலங்கை கடற்படை அத்துமீறல் முற்றுப்புள்ளி வைக்க வேண்டும்

## தமிழக கட்சிகள் வலியுறுத்தல்

சென்னை, ஓக. 11

தமிழக மீனவர்களின் வாழ்வாதாரத்தை பாதுகாக்க இலங்கைக் கடற்படையின் தொடர் அத்துமீறலுக்கு முற்றுப்புள்ளி வைக்க வேண்டும் என்று பல்வேறு அரசியல் கட்சித் தலைவர்கள் வலியுறுத்தியுள்ளனர்.

தமிழக மீனவர்கள் கைது தொடர்பில் அவர்கள் வெளியிட்ட கண்டன அறிக்கையில் இவ்வாறு குறிப்பிடப்பட்டுள்ளது.


அ. தி. மு. க. பொதுச் செயலாளர் பழனிச்சாமி தெரிவித்தவை, வங்கக்கடல் பகுதியில் மீன்பிடித்துக் கொண்டிருந்த தமிழக மீனவர்கள் 32 பேரை இலங்கைக் கடற்படையினர் சிறைபிடித்திருப்பது வன்மையாக கண்டிக்கத்தக்கது. தமிழக மீனவர்கள் இலங்கை கடற்படையால் தொடர்ந்து அராஜக முறையில் சிறைபிடிக்கப்பட்டு வரும் நிலையில், இதற்கு நிரந்தர தீர்வு காண மத்திய அரசு போதிய முயற்சிகள் எடுக்கவில்லை. தமிழக மீனவர்களும் இந்தியர்கள் தான் என்பதை மனதில்கொண்டு, இலங்கை அரசோடு பேச்சுகளை நடத்தி மீனவர்கள் பிரச்னைக்கு மத்திய அரசு நிரந்த தீர்வு காண வேண்டும்- என்றார்.

பா. ம. க. தலைவர் அன்புமணி ராமதாஸ், மீன்பிடித் தடைக்காலம் முடிவடைந்து வங்கக்கடலுக்கு செல்லும் மீனவர்கள் தொடர்ந்து இலங்கை கடற்படையினரால் கைது செய்யப்படுவது நடப்பாண்டில் அதிகரித்துள்ளது. தொடர் அத்துமீறலில் ஈடுபட்டு வரும் இலங்கைக் கடற்படைக்கு இந்தியா கடுமையான பாடம் புகட்ட வேண்டும்- எனக் குறிப்பிட்டார்.

இந்திய கம்யூனிஸ்ட் மாநில செயலாளர் இரா. முத்தரசன், இலங்கைக்கும், இந்தியாவுக்கும் இடைப்பட்ட கடல் பகுதியில், இந்திய கப்பற்படை, கடலோர காவல் படை ஆகியவையும் இருக்கின்றன. ஆனால், அவை ஏன் இந்திய மீனவர்களை பாதுகாக்க தவறுகின்றன? இந்தப் பிரச்னைக்கு மத்திய அரசு நிரந்தர தீர்வு காண வேண்டும்- என்று கூறினார்.

தே. மு. தி. க. பொதுச் செயலாளர் பிரேமலதா விஜயகாந்த், எமது மீனவர்கள் மீன்பிடிக்க செல்வது பின்பு இலங்கை கடற்படை கைது செய்வது என்பது வாடிக்கையாகிவிட்டது. எல்லையை தாண்டுவது என்பது மீனவர்களால் திட்டமிட்டு நடப்பதல்ல. எனவே, இலங்கை கடற்படையினரால் கைது செய்யப்பட்ட தமிழக மீனவர்களை விடுவிக்க மத்திய அரசுக்கு, தமிழக முதல்வர் கடிதம் எழுத வேண்டும்- என்றார்.

இதேவேளை, த. மா. கா. தலைவர் ஜி. கே. வாசன், அ. ம. மு. க. பொதுச் செயலாளர் ரி. ரி. வி. தினகரன் ஆகியோரும், இலங்கை கடற்படையினரின் அத்துமீறலுக்கு முற்றுப்புள்ளி வைக்கும் விதமாக நிரந்தரத் தீர்வை மத்திய அரசு காண வேண்டும் என்று வலியுறுத்தியுள்ளனர்.



# உழவு இயந்திரம் - மோ. சைக்கிள் மோதிய விபத்தில் இருவர் காயம்

நிந்தவூர், ஓக. 11

உழவு இயந்திரம் மற்றும் மோட்டார் சைக்கிள் மோதிய விபத்தில் இருவர் காயமடைந்துள்ளனர்.

அம்பாறை, நிந்தவூர் பொலிஸ் பிரிவுக்குட்பட்ட அட்டப்பளத்துக்கும் தென்கிழக்கு பல்கலைக்கழக வளாகத்துக்கும் இடையே அமைந்துள்ள அக்கரைப்பற்று கல்முனை பிரதான வீதியில் இந்த விபத்துச் சம்பவம் வெள்ளிக்கிழமை இரவு 6. 30 மணியளவில் இடம்பெற்றது.

நெல் அறுவடை முன்னாயத்த பணியில் ஈடுபட்ட உழவு இயந்திரம் சடுதியாக பிரதான வீதியை நோக்கி இரு வழி சாலையை மறித்து திரும்ப முற்பட்ட வேளை மறுமுனையில் இருந்து வேகமாக பயணித்த மோட்டார் சைக்கிள் வேகக் கட்டுப்பாட்டை இழந்து மோதியது.

குறித்த விபத்து சம்பவத்தில் உழவு இயந்திரத்தை செலுத்திய சாரதி காலில் காயமடைந்ததுடன் மோட்டார் சைக்கிளில் பயணித்த இரு இளைஞர்களில் ஒருவருக்கு கை உடைவு ஏற்பட்டுள்ளதாக விபத்தை நேரில் கண்டவர்கள் தெரிவித்தனர். .

மேலும், இவ்விபத்தில் சம்பந்தப்பட்ட தரப்பினர் பொது இணக்கப்பாட்டுடன் சமாதானமாக செல்ல முற்பட்ட போதும் சம்பவ இடத்துக்கு வருகை தந்த நிந்தவூர் போக்குவரத்து பொலிஸார் விசாரணை மேற்கொண்டதுடன் விபத்தில் சம்பந்தப்பட்ட இரு தரப்பினரையும் பொலிஸ் நிலையத்துக்கு அழைத்து சென்றனர்.(எ)

# ஆற்றிலிருந்து ஆணின் சடலம் மீட்பு

கொழும்பு, ஓக. 11

கொழும்பு, கிராண்ட்பாஸ் பொலிஸ் பிரிவுக்குட்பட்ட பழைய சந்தைக்கு அருகில் களனி ஆற்றில் இருந்து இனந்தெரியாத ஆணின் சடலம் மீட்கப்பட்டது.

இந்தச் சடலம் தற்போது கொழும்பு தேசிய மருத்துவமனையின் பிரேத அறையில் வைக்கப்பட்டுள்ளது.

உயிரிழந்தவர் 5 அடி, 6 அங்குல உயரம் கொண்டவர் எனவும், 45 முதல் 50 வயது மதிக்கத்தக்கவர் எனவும் பொலிஸார் தெரிவித்தனர். (எ)

# “இலங்கையரின் பாதுகாப்பு உறுதிப்படுத்தப்பட்டுள்ளது”

## இலங்கை உயர்ஸ்தானிகர் ரோஹித்த போகொல்லாகம

லண்டன், ஓக. 11

பிரிட்டனில் நிலவும் அமைதியின்மை குறித்து ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தன்னிடம் கேட்டறிந்ததாகவும், பிரிட்டன் வாழ் இலங்கையர்களின் நலன் மற்றும் பாதுகாப்பை உறுதிப்படுத்திக்கொண்டதாகவும் பிரித்தானியாவுக்கான இலங்கை உயர்ஸ்தானிகர் ரோஹித்த போகொல்லாகம தெரிவித்தார்.

பிரிட்டன் இலங்கையர் அமைப்பின் பிரதிநிதிகள் மற்றும் மதத்தலைவர்களை பிரிட்டனில் அமைந்துள்ள இலங்கை உயர்ஸ்தானிகரகத்தில் சந்தித்த ரோஹித்த போகொல்லாகம, அவர்களுடன் பிரிட்டனில் நிலவும் அமைதியின்மை நிலைவரம் மற்றும் அதனுடன் தொடர்புடைய அடுத்தகட்ட நடவடிக்கைகள் குறித்து கலந்துரையாடினார்.

இதன்போது, “பிரிட்டனின் சில பகுதிகளில் மக்கள் அமைதி [illegible] கியிருக்கும் நிலையில், இது குறித்து ஜனாதிபதி ரணில் விக் கிரமசிங்க என்னிடம் கேட்ட றிந்ததுடன், இலங்கையர்களின் பாதுகாப்பு மற்றும் நலன் தொடர்பில் உறுதிப்பாட்டையும் பெற்றுக்கொண்டார். இதுகுறித்து நாம் பிரிட்டன் அதிகாரிகளுடன் தொடர்ச்சியாகக் கலந்துரையாடிவருவதுடன், நாட்டில் மீண்டும் ஸ்திரத்தன்மையை உறுதிப்படுத்துவதற்கு அவசியமான ஒத்துழைப்பை வழங்குவதாகவும் உத்தரவாதமளித்திருக்கிறோம்“ என உயர்ஸ்தானிகர் ரோஹித்த போகொல்லாகம தெரிவித்தார்.

அத்தோடு பிரிட்டன்வாழ் இலங்கையர்களை அவதானத்துடன் செயல்படுமாறும், உள்நாட்டு செய்திகள் மற்றும் அரசினால் விடுக்கப்படும் அறிவிப்புகள் தொடர்பில் கவனம் செலுத்துமாறும் அவர் கேட்டுக்கொண்டார்.



மேலும், பிரிட்டன்வாழ் இலங்கையர்களை அங்குள்ள இலங்கை உயர்ஸ்தானிகரகத்துடன் நெருங்கிய தொடர்பை பேணுமாறும், அவசர உதவி தேவைப்படும் சந்தர்ப்பங்களில் 1044 7475206220, 020 7262 1841 என்ற தொலைபேசி இலக்கங்களின் ஊடாகவோ அல்லது mail@slhc-london.co.uk என்ற மின்னஞ்சல் முகவரியின் ஊடாகவோ உயர்ஸ்தானிகரகத்தைத் தொடர்புகொள்ளுமாறும் ரோஹித்த போகொல்லாகம கேட்டுக்கொண்டார்.

(எ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஈழநாடு
Eelanadu ඊළනාඩු
11.08.2024 ஞாயிற்றுக்கிழமை
பிலவ வருடம், ஆடி 26

**"ஏசுவார்கள், எரிப்பார்கள், அஞ்சவேண்டாம்
உண்மையை எழுதுங்கள்; உண்மையாய் எழுதுங்கள்"**
- யோகர் சுவாமிகள்.

E-mail: eelanaduweekly@gmail.com
தொலைபேசி : 021 205 2300

## யார் காரணம்?

வடபகுதி மீனவர்களை தன்வசப்படுத்த சீனா முயற்சிப்பதாக வன்னி மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் செல்வம் அடைக்கலநாதன் தெரிவித்திருக்கின்றார். இதனை நாங்கள் அனுமதிக்க முடியாதென்றும் அவர் குறிப்பிட்டிருக்கின்றார். சீனா ஒரு பலம்பொருந்திய சக்தி - அதன் உலகளாவிய செல்வாக்கை அதிகரிக்கும் நோக்கில் பல்வேறு தளங்களின் ஊடாகவும் முயற்சித்து வருகின்றது. குறிப்பாக, இந்து சமுத்திர பிராந்தியத்தில் இந்தியாவின் அயல்நாடுகளை இலக்கு வைத்து பல்வேறு நகர்வுகளை மேற்கொண்டு வருகின்றது.

அந்த நகர்வுகளில் ஒன்றுதான், வடக்கு - கிழக்கில் காலூன்றுவதற்கான வாய்ப்பையும் தேடுகின்றது. இந்தப் பின்புலத்தில்தான், வடக்கு மாகாண மீனவர்களின் பிரச்னையின்மீது சீனா ஆர்வம் காண்பிக்கின்றது. இதில், ஆச்சரியப்பட ஒன்றுமில்லை. எந்தப் பிரச்னையை சாதகமாக பயன்படுத்திக்கொள்ள முடியுமோ - அந்தப் பிரச்னையை பலம்பொருந்திய சக்திகள் பயன்படுத்திக் கொள்ளும். அதாவது, எரிகின்ற வீட்டில் கொள்ளிக்கட்டை தேடுவது என்று கூறுவார்களே, அப்படியான ஒன்றுதான் இதுவும்.

ஆரம்பத்தில் கடல் அட்டை பண்ணைகள் அல்லது அந்தத் தொழில்துறை மூலம் சீனா வடக்குக்குள் நுழைய முற்படுவதான குற்றச்சாட்டுகள் முன்வைக்கப்பட்டன. கடல் அட்டைத் தொழிலுக்கான சந்தை தெற்காசிய நாடுகளிலேயே இருக்கின்றது. குறிப்பாக, கடல் அட்டையை உணவாக உட்கொள்ளும் நாடுகளில் சீனாவே பிரதானமானது. கடல் அட்டை இந்திய மற்றும் மேற்குலக நாடுகளில் உணவாக உட்கொள்ளப்படுவதில்லை. இவ்வாறானதொரு பின்னணியில் குறித்த தொழிலை மேற்கொள்ளும்போது, சீன சந்தை வாய்ப்புகளில் தங்கியிருக்க வேண்டிவரும்.

இதன் மூலம் சீன சந்தையை நம்பியிருக்கும் ஒரு புதிய வணிக குழுமம் வடக்கில் பின்னர், கிழக்கில் உருவாகும். இது ஒருபுறம் இருக்கின்றபோது மறுபுறமாக, தமிழ்நாட்டு (இந்திய) - வடக்கு மீனவர்கள் பிரச்னை தொடர்ந்தும் எரியும் பிரச்னையாகவே இருக்கின்றது. இந்தப் பிரச்னையை முன்வைத்து இந்திய எதிர்ப்புணர்வும் மீனவர்கள் மத்தியில் காணப்படுகின்றது. அதாவது, இந்தியா இந்தப் பிரச்னையை தீர்க்க முயற்சிக்கவில்லை - இந்தியாவுடன் தொடர்புடைய தமிழ் அரசியல் தலைமைகள் இது தொடர்பில் போதிய அக்கறையை காண்பிக்கவில்லை. இவ்வாறான குற்றச்சாட்டுகள் வடக்கு மாகாண மீனவர்கள் மத்தியில் பரவலாகக் காணப்படுகின்றன. இதனை சீனா பயன்படுத்திக்கொள்ள முயற்சிப்பதில் ஆச்சரியப்பட ஒன்றுமில்லை. ஒருவேளை, சீனா இதனைப் பயன்படுத்திக் கொள்ள முயற்சிக்காது விட்டால்தான் நாம் ஆச்சரியப்பட வேண்டும்.

எனவே, வடக்கு மாகாண மீனவர்களை சீனா தன்வசப்படுத்த முயற்சிக்கின்றது என்றால் அதற்கான வாய்ப்புகளை யார் வழங்குகின்றனர் என்பதிலேயே தமிழ் அரசியல் தலைமைகள் கவனம்கொள்ள வேண்டும். சீனாவுக்குப் பிரச்னைகள் தேவை. ஏனெனில், பிரச்னைகள் இருக்கும் சமூகத்திற்குள்தான் இலகுவாக ஊடுருவ முடியும். இன்று பல கிறிஸ்தவ மதப் பிரசாரக் குழுக்கள் இந்து மக்கள் மத்தியில் மத மாற்றப் பிரசாரத்தை முன்னெடுத்து வருகின்றன. அவர்கள் எவ்வாறான மக்களை இலக்கு வைக்கின்றனர்? மிகவும் வறுமை நிலையில் இருக்கும் மக்களே அவர்களின் இலக்காகும். ஏனெனில், பிரச்னை இருப்பவர்கள்தான் தீர்வுக் கதைகளை செவிமடுப்பர். இது ஓர் ஊடுருவும் உத்தியாகும்.

சீனா போன்ற மேலாதிக்க விருப்போடு இயங்கும் ஓர் உலக சக்தி இலங்கைக்குள் ஆழ ஊடுருவுவதற்கான அனைத்து வாய்ப்புகளையும் பயன்படுத்திக் கொள்ளவே முயற்சிக்கும். குறிப்பாக, இந்தியாவுக்கு மிகவும் அண்மையில் இருக்கும் வடக்கு - கிழக்குக்குள் ஊடுருவ முற்படுவது அதன் நீண்டகால அதிகார நலன்களை இலக்காகக் கொண்டதாகும். இதனைத் தடுக்க வேண்டுமாயின், வடக்கு மாகாண மீனவர்களின் பிரச்னைக்கு தீர்வைக் காண வேண்டும். தீர்வு இல்லாத இடைவெளியானது சீனாவுக்கான வாய்ப்புத்தான் - சீனா அதனை நிச்சயம் பயன்படுத்திக் கொள்ளும்.

## நல்லூரான் திருவடி - 3

# அற்புதமான முதல் தரிசனமும் அதன் அனுபவமும்!

**மூ. வைரமுத்து**
(முன்னாள் இலங்கை சிவில் சேவை உயரதிகாரி)

எந்தவேளையில் எத்தகைய வரவேற்பு யோகசுவாமிகளிடமிருந்து ஒருவருக்குக் கிடைக்கும் என்று கூறுவதற்கில்லை. பெரி யார், சிறியார் மற்றும் சாதி, மத வேறுபாடு சுவாமிகளிடம் இல்லை. ஒருவரை வரும்படி அழைப்பதும், இன்னொருவரிடம் இப் போது பார்க்கமுடியாது என்று கூறுவதும் சுவாமிகளுடைய மனோநிலையைப் பொறுத்தவையாகும்.

நாட்டில் மிகச்செல்வாக்குடையவர்களையும், பதவி, பணவசதி படைத்தவர்களையும் மட்டுமல்ல. ஏழை. எளிய மக்களையும், வசதி வாய்ப்பற்றவர்களையும் சுவாமிகளது ஆச்சிரமத்தில் காணலாம். சில சமயங்களில் பணக்காரனோ அல்லது ஏழையோ யோகரால் அவரது ஆச்சிரமத்திலிருந்து கலைத்து விடப்படுவதுமுண்டு. யோகருடைய அருளுக்குரியவர்கள் தாமே என்று எண்ணியும் தமது சுயநலத்துக்காகவும் அவரை நாடி வருபவர்களை நல்ல பாடம் புகட்டி, யோகர் விரட்டி விடுவதுமுண்டு.

ஒரு தடவை மலையகத்திலிருந்து சற்று இறுமாப்புடன் வாழ்கின்ற படித்த செல்வந்தர் ஒருவர் சுவாமிகளிடம் வந்தார். சுவாமிகளும் அவரது இல்லத்திற்கு அடிக்கடி செல்வதுண்டு. இத்தடவை சுவாமிகளிடம் நிறையவே காணிக்கைப் பொட்களுடன் அந்த மலையக செல்வந்தர் சுவாமியைக் காண வந்திருந்தார். அவரோடு அவரது மனைவியும் வந்திருந்தார். சுவாமிகளது உத்தரவுக்கு காத்திராது அவர்களிருவரும் சுவாமியின் அந்த சிறிய குடிசைக்குள் வந்தனர். அத்துடன் தாம் கொண்டுவந்த காணிக்கைப்பொருட்களையும் சுவாமியின் முன்பாக வைத்தனர். அப்போது யோகர் ஆத்திரமடைந்தவராக, அந்த காணிக்கைப் பொருட்களை திருப்பிக்கொண்டு போகும்படி கூறியதோடு, " கொண்டு போங்கள் என்றால் கொண்டு போகவேண்டியது தானே, என்ன பார்த்துக்கொண்டிருக்கிறீர்கள்" என்று உரத்த குரலில் கூறினார். வந்தவர்கள் அப்படியான ஒரு வரவேற்பை யோகரிடமிருந்து எதிர்பார்க்க வில்லை. திகைத்து, அச்சமுற்று நின்றார்கள். இதனைப் பார்த்துக்கொண்டிருந்த எமக்கு அந்த தம்பதியரைப் பார்த்தபோது பரிதாபமாகவே இருந்தது.

ஏமாற்றத்தோடு அத் தம்பதியினர் யோகருடைய குடிசைக்குள்ளிருந்து வெளியேறினர். அவர்கள் வெளியேறியதும் சிரித்த முகத்தோடு, "மகளுக்கு கலியாணம் பேசட்டாம். பேசிவைத்த மாப்பிள்ளை சம்மதிக்கிறாரில்லையாம். என்னை இவர்கள் கல்யாணத் தரகர் என்று நினைத்து விட்டார்களோ தெரியவில்லை" என்று கூறினார். அத்துடன், ஓர் ஏழ்மையானவர் ஒரு தடவை தன்னிடம் வந்து தனது பெண் பிள்ளைக்கு திருமணம் கைகூடவில்லை என்று கூறியதாகவும், அப்போது, அவர் பார்த்துவைத்துள்ள மாப்பிள்ளையை தன்னை வந்து சந்திக்குமாறு யோகர் அந்த நபரிடம் கூறினார்.

பின்னர் அக் கல்யாணம் நல்லபடியாக நிறைவேறியது. இந்த சம்பவத்தை அறிந்த பின்னர்தான் அந்த மலையக பிரமுகரும் தன்னை காண வந்ததாகவும், அவர்கள் கொண்டுவந்த காணிக்கை பொருட்களை பார்த்தீர்களா? என்று யோகர் வினவியதோடு, அவர்களைப் படித்த மடையர்கள் எனவும் கூறினார்.

அந்த மலையகப் பிரமுகரைகப் பேசி விரட்டியதைப் பார்த்போதுதான், உண்மையான மகான்கள் பணம், பதவி, பொருட்களுக்கு வசப்படாதவர்கள். தெயவீகமென்பது சாதாரண மனிதர்களுடைய விருப்பு வெறுப்புகளுக்கு மிகவும் அப்பாற்பட்டதென்பதையும் எம்மால் நேரில் கண்டுணர முடிந்தது.

மற்றொரு தடவை யோகருடைய குடிசை ஆச்சிரமத்தில் அவரோடு அமர்ந்திருந்த போது ஓர் இளைஞன் அவரை நோக்கி வந்து துணிச்சலோடு கேள்வியொன்றை எழுப்பினான். அந்த இளைஞன் சுவாமியிடம் கூறியது இதுதான், "சுவாமி, குறை நினைக்க வேண்டாம். பணம்படைத்தோர், செல்வாக்குடையோருடன்தான் நீங்கள் அதிகமாகப் பேசுகின்றீர்கள் என்று பலர் கூறுகின்றார்கள். இது உண்மைதானா?".

இதற்கு சிரித்தவாறே யோகர் பதிலளித்தார். சுவாமி கூறியது இதுதான்: "வறியவர்கள். வசதிவாய்ப்பற்றவரகள் பொதுவாகவே நல்லவர்கள். அவர்களால் ஏனையோருக்கு அதிக தீமை ஏற்படாது. நீ கூறிய பணம், செல்வாக்கு படைத்தோரைத்தான் திருத்தவேண்டும். அவர்களிடம்தான் கூடாத குணங்கள், பழக்க வழக்கங்கள் நிறையவே இருக்கின்றன. சுயநலம், பொறாமை, பெருமிதம், பிறரைச் சுரண்டும் புத்தி என்பவை இவர்களிடம் நிறையவே இருக்கின்றன.


இத்தீயகுணங்களிலிருந்து இவர்களை விடுபடச்செய்தால், நல்ல பல காரியங்களை செய்யமுடியும். அத்துடன், சமுதாயத்துக்கும் நன்மையுண்டாகும். எனவே அத்தகையவர்கள் என்னை நாடிவரும்போது அவர்களை நல்வழிப்படுத்துவதில் என்ன குறை இருக்கின்றது?" என்று அந்த இளைஞரிடம் சுவாமி கேட்டார்.

சுவாமியின் பதிலைக்கேட்ட அந்த இளைஞன் தனது அறியாமையை உணர்ந்து சுவாமிக்கு நன்றி கூறியதோடு, தான் எழுப்பிய அக் கேள்விக்காக சுவாமியிடம் மன்னிப்பும் கேட்டுக்கொண்டான்.

**தொகுப்பு : அனந்த பாலகிட்ணர்**

(நாளை தொடரும்)

## அப்புக்குட்டி அண்ணையின் 'டவுட்'




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உலக சிங்க தினம்:
# பெண் சிங்கம்தான் வேட்டைக்குச் செல்லுமா?



க.சுபகுணம்

சிங்கம், தமிழ்ச் சமூகத்தில் மட்டுமின்றி உலகம் முழுக்கவே வீரம், கம்பீரம் ஆகியவற்றுக்கு உவமையாகக் கூறப்படும் ஓர் உயிரினம். 'சிங்கம் சிங்கிளாதான் வரும்' என்ற ரஜினியின் வசனம்கூட அத்தகைய கம்பீரத் தொனிக்காக வர்ணிக்கப்பட்டதுதான்.

ஆனால், உண்மையில் சிங்கம் சிங்கிளாக வராது, பெரும்பாலும் கூட்டமாகத்தான் வரும் என்கிறார் குஜராத்தின் கிர் காட்டில் உள்ள சிங்கங்களை ஆய்வு செய்துள்ள காட்டுயிர் ஆய்வாளர் முனைவர். ரவி செல்லம். அதிலும் ஒரு கூட்டத்தில் இருக்கும் ஆண் சிங்கத்தை விட பெண் சிங்கங்களே அதிகமாக வேட்டைக்குச் செல்லும் என்றும் கூறுகிறார் அவர்.

இப்படி சிங்கம் குறித்து இன்னும் பல சுவாரஸ்ய விஷயங்கள் இருக்கின்றன. அவை குறித்துத் தெரிந்துகொள்ள அவரிடம் விரிவாகப் பேசினோம்.

சிங்கங்களைப் பொறுத்தவரை இந்தியாவில் மட்டுமல்ல, ஆசிய கண்டத்திலேயே எங்கெல்லாம் வாழ்கின்றன தெரியுமா? இல்லை, இல்லை. ஆசியாவில் எங்கே வாழ்கிறது தெரியுமா?

ஆம், எங்கெல்லாம் எனப் பண்மையில் கேட்பதைவிட எங்கே என ஒருமையில் கேட்பதே சரியாக இருக்கும். ஏனெனில், சிங்கங்கள் ஆசியாவிலேயே ஒரேயொரு பகுதியில் மட்டும்தான் காட்டில் வாழ்கின்றன.

பல்வேறு நாடுகளில் பூங்கா போன்ற அடைப்பிடங்களில் அவை காணப்பட்டாலும், இந்தியாவின் குஜராத் மாநிலத்திலுள்ள கிர் காடுகளைத் தவிர, ஆசியாவில் வேறு எங்குமே சிங்கம் காட்டில் இல்லை.

சிங்கம் யானைகளைப் போல் கூட்டமாக வாழும் சமூக உயிரினம்தான் என்கிறார் முனைவர்.ரவி செல்லம்.

ஆனால் அவரது கூற்றுப்படி, சிங்கத்தின் சமூகக் கட்டமைப்புக்கும் யானைகளின் சமூகக் கட்டமைப்புக்கும் இடையே சில வேறுபாடுகள் உள்ளன.

யானை மந்தையைப் பொறுத்தவரை, ஒரு மந்தையில் இருப்பவை அனைத்துமே பெண் யானைகள்தான். ஆண் யானைகள் இனப்பெருக்க காலத்தில் மட்டுமே மந்தையோடு இணைகின்றன. பிற காலகட்டங்களில் ஆண் யானைகள் தனித்தோ அல்லது "சிங்கிள்' யானைகள் ஒரு சில இணைந்து கூட்டமாகவோ சுற்றித் திரியும், இருப்பினும் அந்தக் கூட்டம் ஒரு மந்தையாகக் கருதப்படாது.

சிங்கக் கூட்டத்திலும் பெரும்பான்மையாக பெண் சிங்கங்களே இருக்கும். ஆனால், அவற்றின் கூட்டத்திலேயே சில ஆண் சிங்கங்களும் இருக்கும் என்கிறார் முனைவர்.ரவி செல்லம்.

"ஆண் சிங்கங்கள் ஒரு கூட்டத்தில் இருக்கும். ஆனால், அவற்றின் எண்ணிக்கை இரண்டு அல்லது மூன்று என மிகச் சிறிய அளவிலேயே இருக்கும். ஒரு கூட்டத்தில் இருக்கும் அனைத்து பெண் சிங்கங்களும் ஒன்றோடு ஒன்று ரத்த உறவு கொண்டவையாகவே இருக்கும். ஆனால், ஆண் சிங்கங்கள் அவை இருக்கும் கூட்டத்தின் பெண்களுடன் ரத்த உறவு கொண்டவையாக இருக்காது. இருப்பினும், அந்த ஆண் சிங்கங்கள் சகோதரர்களாக இருக்க வாய்ப்புள்ளது," என்கிறார் அவர்.

அதாவது, ஒரு கூட்டத்தில் பிறக்கும் பெண் சிங்கம், அதே கூட்டத்தில், தாய், பாட்டி, சகோதரி ஆகியோருடன் இணைந்து தொடர்ந்து வாழும். ஆனால் ஆண் சிங்கமாக இருந்தால், "அது இனப்பெருக்க வயதை அடையும்போது கூட்டத்தில் இருந்து விரட்டப்படும். அதற்குப் பிறகு அது வேறொரு கூட்டத்தில் இருக்கும் ஆண் சிங்கத்துடன் சண்டையிட்டுத் தனது இருப்பைச் சம்பாதிக்க வேண்டும்."

"பிறகு அந்தக் கூட்டத்தில் 4-5 ஆண்டுகள் இருந்த பிறகு, வேறு இளம் ஆண் சிங்கம் அதன் இடத்தை நிரப்ப வரும்போது, வயதான சிங்கத்துடன் நடக்கும் மோதலில் வீழ்த்தப்பட்டு, கூட்டத்தில் இருந்து வெளியேற்றப்படும். சில நேரங்களில் அந்தச் சண்டையில் அவை கொல்லவும் படலாம். ஒருவேளை பிழைத்தால், அதற்குப் பிறகு அந்த ஆண் சிங்கம் இறுதி வரை வேறு கூட்டத்தில் இணைய முடியாது," என்று கூறுகிறார்.

ஆண் சிங்கங்கள் சில நேரங்களில் ஒன்று சேர்ந்து சுற்றித் திரிந்தாலும்கூட, அந்தக் கூட்டம் ஓர் ஒருங்கிணைந்த சமூகக் குழுவாக இருப்பதில்லை.

ஒழுங்கமைக்கப்பட்ட சமூகக் குழுவாக இருக்கும் சிங்கக் கூட்டத்தில் பெண் சிங்கங்களே அதிகமாக இருக்கும். அப்படிப்பட்ட "சிங்கக் கூட்டத்தில் இருக்கும் ஆண் சிங்கத்தின் முக்கியமான வேலை, அந்தக் கூட்டத்தின் எல்லையைப் பாதுகாப்பதும் இனப்பெருக்கத்தில் ஈடுபடுவதும்தான்" என்கிறார் முனைவர். ரவி செல்லம்.

வேட்டையைப் பொறுத்தவரை, சிங்கம் தனியாக வாழும்போது அவை கட்டாயம் வேட்டையாடித்தான் சாப்பிட்டாக வேண்டும். ஆனால், சிங்கக் கூட்டத்தின் ஒரு பகுதியாக இருக்கும்போது, அவை பெரும்பாலும் பெண் சிங்கம் வேட்டையாடும் இரையைத்தான் சார்ந்திருக்கும் என்கிறார் அவர்.

ஆசியாவைவிட ஆப்பிரிக்காவில் சிங்கங்கள் வேட்டையாட, ஒட்டகச் சிவிங்கி, காட்டெறுமை, அளவில் சிறிய யானைகள் போன்ற பெரிய இரை உயிரினங்கள் நிறைய உள்ளன. அத்தகைய வேட்டைகளின்போது ஆண் சிங்கங்கள் உதவுகின்றன.

"பெண் சிங்கத்தைவிட ஆண் சிங்கத்தின் வாய் பெரிதாக இருக்கும், எடையும் கூடுதலாக இருக்கும். ஆகவே இரையை நீண்ட நேரம் இறுகப் பற்றித் தொங்கியபடி கீழே சாய்ப்பதற்கு அவற்றால் முடியும். இருப்பினும், அந்த இரையைக் கண்காணித்து, சுற்றி வளைத்து சிக்க வைப்பது என்னவோ பெண் சிங்கமாகத்தான் இருக்கும்," என்கிறார் ரவி செல்லம்.

இருப்பினும் இந்தியாவிலுள்ள சிங்கங்களைப் பொறுத்தவரை இந்தப் பழக்கம் சற்று மாறுபடுவதாகவும் அவர் கூறுகிறார்.

ஆப்பிரிக்க காடுகளில் புல்வெளிப் பரப்பு அதிகமாக இருக்கும். அங்கு அளவில் பெரிதாக இருக்கும் ஆண் சிங்கம் மறைந்திருந்து வேட்டையாடுவது கடினம். ஆனால், "இந்தியக் காடுகளின் தன்மை வேறுபட்டது. இங்கு மரங்களும் புதர்களும் உள்ளன. அவற்றில் அவை மறைந்திருந்து தாக்குவதற்கான சூழல் உள்ளது. அதோடு, இங்கு மனிதர்களுக்கு மிக நெருக்கமாக வாழ்வதால், கால்நடைகளும் எளிதாகக் கிடைக்கின்றன.

கால்நடைகளைப் பொறுத்தவரை, மனிதத் தலையீடுகளின் காரணமாகப் பெண் சிங்கங்கள் அவற்றை வேட்டையாடத் தயங்கும். ஏனெனில், ஒருவேளை அவை ஆபத்தில் சிக்கிவிட்டால் அவற்றின் குட்டிகள் அநாதையாக்கப்படும்," என்கிறார் ரவி செல்லம்.

●

## இந்தவார ராசிபலன் 11.08.2024 - 17.08.2024

ஞாயிற்றுக்கிழமை
குரோதி வருடம் - ஆடி 26
நல்ல நேரம்: 9.04 - 10.34 ராகு காலம் : 4.34 - 06.04 திதி : ஸப்தமி

### மேஷம்
[ அசுவினி, பரணி, கார்த்திகை 1 பாதம் ]

இந்த இனிய வாரம். புண்ணியத் திருத்தல யாத்திரைகள் செல்வதால் மகிழ்ச்சியும் மன அமைதியும் ஏற்படும். சீரான பொருளாதார உயர்வினால் எப்போதும் மனதில் மகிழ்ச்சி பொங்கும். பொன் பொருள் ஆபரணங்கள் ஆகியவை கிடைக்கும். அரசுப் பதவியில் உள்ளவர்கள் தயவால் அனுகூலமான பலன்கள் அடைவர். பல வழிகளிலும் இருந்தும் பணம் கூடுதலாக வரும். மனைவியுடன் அனுசரித்துச் செல்வது நல்லது.

### ரிஷபம்
[ கார்த்திகை 2,3,4, ரோகிணி, மிருகசீரிஷம் 1,2 ]

இந்த வாரம் சிறப்பான பொதுசனத் தொடர்பு காரணமாக உபரி வருமானம் கிடைக்கும். எடுக்கும் முயற்சிகளில் எப்பாடுபட்டாவது வெற்றி அடைவீர்கள். சிலருக்கு அனைத்து வசதிகளுடன் கூடிய அழகிய இல்லம் அமையும். புதிய பதவிகள் தேடிவரும். அந்தஸ்து உயரும். ஓய்வெடுத்து. உல்லாசமாய்ப் பொழுது போக்கும் விதமாக, நமக்கு எல்லா நாட்களும் விடுமுறை நாட்களாக இருப்பதில்லை. கஷ்டங்கள் வந்தாலும் நேர்மையும் கடின உழைப்பும் மட்டும் வாழ்க்கையில் நல்ல முன்னேற்றத்தை அளிக்கும்.

### மிதுனம்
[ மிருகசீரிடம் 3,4, திருவாதிரை, புனர்பூசம் 1,2,3 ]

இந்த வாரம் வீட்டில் சுபமங்கள காரியங்கள் காரணமாக தாராளமான பணச் செலவுகள் ஏற்படும் இனிய தகவல்கள் இல்லம் தேடி வரும். சுற்றமும், நட்பும் சூழ சுபகாரியப் பேச்சுக்கள் நடைபெறும். சிலருக்கு வீடு மாற்றம், தொழில் மாற்றம் என வாழ்க்கையில் ஏதேனும் ஒரு மாற்றம் ஏற்படும். தெய்வீக வழிபாடுகள் மூலம் மனதில் நிம்மதி நிலவும். புதிய தொழில் பயணங்கள் மூலம் எதிர்பார்த்த தொழில் முன்னேற்றங்கள் ஏற்படும். உங்களால் கூறப்படும், ஒரு வார்த்தை, ஒன்பதாக மாறி, பரப்பப்படும்.

### கடகம்
[ புனர்பூசம் 4, பூசம், ஆயில்யம் ]

இந்த வாரம் வீட்டில் திருமணம் போன்ற சுபகாரியங்கள் நிறைவேறி மகிழ்வு தரும். வெளிநாட்டில் இருந்து நல்ல தகவல்கள் வந்து சேரும். தொலைதூரப் பயணங்களால் ஆதாயம் உண்டு.. காற்றடிக்கும் போதே தூற்றி கொள்வது போல், நல்ல இலாபம் வரும் போது சேமித்து வைத்துக் கொள்வது நல்லது. அப்போதுதான், வாழ்க்கையில் முன்னேற்றங்களையும், சுகானுபவங்கள் மற்றும் கௌரவத்தையும் அடைவீர்கள்.

### சிம்மம்
[ மகம், பூரம், உத்திரம் 1 ]

இந்த வாரம் தன்னம்பிக்கை உயரும். பலவழிகளிலும் பணவரவு அதிகரிக்கும். சிலருக்குக் கார் போன்ற சொகுசு வாகனங்கள் வாங்கும் உயர்வு நிலை ஏற்படலாம். தெய்வ சிந்தனைகள் மூலம் மனதில் பூரண அமைதி நிலவும். எடுத்த காரியங்கள் அனைத்திலும் வெற்றி கிட்டும். அரசுப் பணியாளர்களுக்கு பதவி உயர்வு கிடைக்கும். சில ருக்குப் பணி நிரந்தரத்திற்கான ஆணைகள் கிடைத்து, மனதில் இன்ப வெள்ளம் பாயும்.

### கன்னி
[ உத்திரம் 2,3,4, அஸ்தம், சித்திரை 1,2 ]

இந்த வாரம் எதிர்பாராத தனவரவு ஏற்றம் காண்பீர்கள். பல வகையான உயர்ந்த வாகன வசதி அமையும். சிலருக்குப் பெரிய இடத்துப் பெண் மனைவியாக அமைவாள். மனைவி மூலம் கிடைக்கும் நீண்ட நாட்களுக்குப் பின்னர் வந்த பழைய உறவுகளின் வரவு மகிழ்வைத் தரும்.. உற்சாகத்துடன் பக்தி மார்க்கத்தில் ஈடுபடுவீர்கள். கடின உழைப்பால் நீங்கள் பெறும் வெற்றிகளால் அனைவரின் பாராட்டையும் பெறுவீர்கள். சம்பாதித்த பணத்தை புதிய முதலீட்டுத் திட்டங்கள் மூலம் சேமிக்க முற்படுவீர்கள்.

### துலாம்
[ சித்திரை 3,4, சுவாதி, விசாகம் 1,2,3 ]

இந்த வாரம் பூர்வ புண்ணியத்தால் குலதெய்வ வழிபாடுகள் சிறக்கும். உறவுகள் வருகையால் விருந்து, மகிழ்ச்சி கொண்டாட்டம் என வீட்டில் மகிழ்ச்சி பொங்கும். சுபச் செய்திகள் எதிர்பார்க்கலாம். புதிய நண்பர்களால் நன்மை ஏற்படும். பணியில் உள்ளவர்களுக்கு மேலதிகாரிகளை திருப்தி படுத்தும் வகையில் செலவுகள் ஏற்படும். புதிய கடன்களை வாங்க வேண்டிய சூழ்நிலை எழும். தீயகுணம் உள்ள நபர்களிடம் இருந்து விலகி இருப்பதே நல்லது.

### விருச்சிகம்
[ விசாகம் 4, அனுஷம், கேட்டை ]

இந்த வாரம் புதுப்புதுப் பதவிகளும் அதனால் வருவாய் பெருக்கமும் ஏற்படும். சிலருக்கு புத்திர பாக்கியம் ஏற்படும். கௌரவப் பட்டங்கள், பதவிகள் ஆகியவை கிடைக்கும். அரசாங்கத் துறைகள் மூலம் எதிர்பார்த்த அனுகூலங்கள் யாவும் வந்து சேரும். வாழ்க்கையில் நல்ல முன்னேற்றங்கள் ஏற்படும். சுற்று வட்டாரத்தில் நல்ல புகழ் உண்டாகும். சிலருக்குக் குழந்தைகள் தொல்லையும், அவமானங்கள் ஏற்படலாம்.

### தனுசு
[ மூலம், பூராடம், உத்திராடம் 1 ]

இந்த வாரம் சுபகாரியங்களுக்காக வீடே விழாக்கோலம் பூணும். திடீரென ஏற்படும் பயணங்களால் ஆதாயமும், மகிழ்ச்சியும் ஏற்படும். உங்கள் சேவைகள் அனைவராலும் அங்கீகரிக்கப்படும். இசை ஆர்வத்தால் சங்கீத சபாகளுக்குச் சென்று இசை கேட்டு மகிழ்வார்கள். நீங்கள் எதிர்பாராத விதத்தில் இடமாற்றங்கள் ஏற்படலாம். உயர் அதிகாரிகள் ஆதரவால் பதவி உயர்வுகளை எதிர்பார்க்கலாம். புதிய முதலீடுகளால் தொழிலில் ஏற்றம் காணலாம்.

### மகரம்
[ உத்திராடம் 2,3,4, திருவோணம், அவிட்டம் 1,2 ]

இந்த வாரம் பணம் சம்பாதிப்பதில் ஆக்கமும், ஊக்கமும் ஏற்படும். அரசாங்கத்திடமும் எதிர்பார்த்த அனுகூலங்கள் அனைத்தும் தாமதமின்றி கிடைக்கும். தொழில் சம்பந்தமான முயற்சிகள் வெற்றியடையும். கவர்ச்சிகரமான பொருட்களை பரிசாக அறிவித்து வியாபாரிகள் உங்கள் வாடிக்கையாளர்களை கவர்ந்து இலாபத்தை அதிகரித்துக் கொள்வர். மாணவர்கள் பாடங்களை அக்கறையுடன் படித்தால் அதிக மதிப்பெண்கள் பெறமுடியும்.

### கும்பம்
[ அவிட்டம் 3,4, சதயம், பூரட்டாதி 1,2,3 ]

இந்த வாரம் மகான்களின் தரிசனத்தால் மனம் மகிழ்வதோடு, மனதில் அமைதியும் நிலவும். புத்திர பாக்கியம் ஏற்படும். புதிய தொழில் வாய்ப்புகள், லாட்டரி யோகங்கள், புண்ணியத்தல தரிசனங்கள் ஆகியவை ஏற்படும். தெய்வ சிந்தனை மற்றும் தர்மசிந்தனையும் ஏற்படும். சிலருக்குப் பயணங்களில் எதிர்பாராத பிரச்சினைகள் ஏற்படலாம். வியாபாரிகளுக்கு முதலீடுகள் அதிகரித்து இலாபமும் அதிகரிக்கும். உத்தியோகம் மற்றும் தொழிலில் அபிவிருத்தி ஏற்படும். தொழில் வாய்ப்புகள் பிரகாசமாக இருக்கும்.

### மீனம்
[ பூரட்டாதி 4, உத்திரட்டாதி, ரேவதி ]

இந்த வாரம் புத்திர பாக்கியம், சுபகாரிய நிகழ்ச்சிகள் ஆகியவற்றால் இல்லத்தில் மகிழ்ச்சி பொங்கும். உறவுகளை அனுசரித்து சென்றால் அவர்களின் உதவிகள் கேட்காமலே கிடைக்கும். நல்ல உயர்ந்த மனிதர்களின், பண்பு மிக்கவர்களின் நட்பு ஏற்படும். சிலருக்குப் பயணங்களிலும், அரசு வகையில் தொல்லைகள் ஏற்படலாம். கடன் கொடுத்தவர்கள் கண்டிப்புடன் நடந்து கொள்வர். விரிவாக்கங்கள் செய்வதால் தொழிலில் நல்ல வளர்ச்சி ஏற்பட்டு அதில் கிடைக்கும் இலாபம் மூலம் பண வருவாய் அதிகரிக்கும். வியாபாரிகள் எதிர்பார்த்தபடி வங்கிக் கடன்கள் சிரமமின்றிக் கிடைக்கும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஈழநாடு



# இரு வருட இடைவெளியில் இரு ஆட்சியாளர்களை விரட்டிய இரு தெற்காசிய மக்கள் கிளர்ச்சிகள்



வீரகத்தி தனபாலசிங்கம்

தெற்காசியாவில் இரு வருடங்களுக்கு பிறகு இன்னொரு அரசாங்கத் தலைவரை மக்கள் கிளர்ச்சி நாட்டைவிட்டு விரட்டியிருக்கிறது. கடந்த வாரம் பங்களாதேஷில் வீதிப் போராட்டங்கள் தீவிரமடைந்திருந்த கட்டத்தில் தன்னைச் சந்தித்த இந்திய உயர்ஸ்தானிகரிடம் பிரதமர் ஷேய்க் ஹசீனா "அராஜகவாதிகள்" இலங்கைப் பாணியில் கொந்தளிப்பை ஏற்படுத்தி அரசாங்கத்தைக் கவிழ்க்கத் திட்டமிடுகிறார்கள் என்று கூறியிருந்தார். இறுதியில் அவ்வாறே நடந்து முடிந்திருக்கிறது.

பங்களாதேஷில் இடம்பெறுவதைப் போன்ற படுமோசமான வன்முறைகளும் உயிரிழப்புகளும் இலங்கை கிளர்ச்சியின் போது இடம்பெறவில்லை. கிளர்ச்சியை அடக்குவதற்கு ஹசீனா பொலிசாரையும் தனது அவாமி லீக் கட்சியின் செயற்பாட்டாளர்களையும் கட்டவிழ்த்துவிட்டதைப் போன்று இலங்கையில் அன்றைய ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்சவினால் செய்யக்கூடியதாக இருக்கவில்லை.

இலங்கையில் ஜனாதிபதி மாளிகை, ஜனாதிபதி செயலகம், அலரிமாளிகை ஆகியவற்றை மக்கள் முற்றுகையிட்டதைப் போன்று கடந்த வாரம் பங்களாதேஷிலும் தலைநகர் டாக்காவில் பிரதமரின் வாசஸ்தலம், பாராளுமன்றம் மற்றும் அரசாங்க கட்டிடங்களை மக்கள் முற்றுகையிட்டார்கள். மாளிகைகளுக் குள் இருந்த பொருட்களைச் சூறையாடிய மக்கள் கொண்டாட்டங்களில் ஈடுபட்டார்கள்.

வன்முறைகள் தொடருகின்றன. அவாமி லீக் கட்சியின் தலைவர்களுக்கும் ஆதரவாளர்களுக்கும் எதிராக வன்முறை கள் திசைதிருப்பப்பட்டிருக்கின்றன. அவர்களில் பலர் கொல்லப்பட்டதாக செய்திகள் கூறுகின்றன.

முன்னாள் இராணுவ அதிகாரியான கோட்டாபய இராணுவத்தை தனது முழுமையான கட்டுப்பாட்டில் வைத்திருந்தார் என்று நம்பப்பட்ட போதிலும், அவர் உத்தரவிட்டிருந்தாலும் கூட இராணுவம் மக்களுடன் கொடூரமாக நடந்துகொண்டிருக்காது. அதே போன்றே பங்களாதேஷிலும் போராட்டக்காரர்களுக்கு எதிராக கடுமையான நடவடிக்கையை எடுக்க இராணுவம் தயாராக இருக்கவில்லை.

வெளிநாட்டில் இருந்துகொண்டு கோட்டாபய பதவியை துறந்த பிறகு இலங்கையில் அதிகார மாற்றம் பல்வேறு விமர்சனங்களுக்கு மத்தியிலும் அரசியலமைப்பின் பிரகாரம் சுமுகமாக நடந்தது. ஜனாதிபதியாக ரணில் விக்கிரமசிங்கவை பாராளுமன்றம் தெரிவு செய்தததைத் தொடர்ந்து கொழும்பு காலமுகத்திடலில் இருந்து போராட்டக்காரர்களை கலைப்பதற்கு ஆயுதப் படைகள் பயன்படுத்தப்பட்டனவே தவிர அதிகார மாற்றத்தில் இராணுவம் செல்வாக்கு செலுத்தக்கூடிய வாய்ப்புக்கு இடமிருக்கவில்லை.

ஆனால், பங்களாதேஷில் இராணுவம் அதிகாரத்தைக் கைப்பற்றவில்லையே தவிர, மற்றும்படி ஹசீனாவை நாட்டை விட்டுவெளியேற நிர்பந்தித்தது தொடக்கம் இடைக்கால நிர்வாகத்தை அமைத்தது வரை இராணுவத் தளபதி ஜெனரல் வாகீர் - உஸ் - சமான் தனது செல்வாக்கைச் செலுத்தினார். முக்கியமான அறிவிப்புக்கள் அவரிடமிருந்தே வந்தன.

கடந்த ஜனவரியில் தெரிவான பாராளுமன்றத்தை ஜனாதிபதி முஹமட் சஹாபுதீன் உடனடியாக கலைத்து விட்டார். சிறையில் அடைக்கப்பட்டிருந்த எதிர்க்கட்சிகளின் தலைவர்களும் அரசியல் செயற்பாட்டாளர்களும் விடுதலை செய்யப் பட்டிருக்கிறார்கள்.

ஹசீனாவின் ஆட்சியில் பல்வேறு கொடுமைகளுக்கு உள்ளாக்கப்பட்ட நோபல் சமாதானப் பரிசாளரான 84 வயதான முஹமட் யூனுஸ் மாணவ போராட்டக்காரர்களின் விருப்பத்துக்கு இணங்கி பிரதம ஆலோசகர் என்ற அந்தஸ்தில் இடைக்கால அரசாங்கத்தின் தலைவராக கடந்த வியாழக்கிழமை பொறுப்பேற்றார். ஹசீனா ஆட்சி முடிவுக்கு வந்த ஆகஸ்ட் 5 ஆம் திகதியை அவர் "இரண்டாவது வெற்றித்தினம் " என்று வர்ணித்தார். பாராளுமன்ற தேர்தலுக்கான ஏற்பாடுளைச் செய்வதே மூன்று மாதங்களுக்கு பதவியில் இருக்கப்போகும் இடைக்கால அரசாங்கத்தின் முக்கிய பணியாகும்.

இலங்கையில் இருந்து கோட்டாபய ராஜபக்ச வெளியேறியபோது எந்த நாடும் அவரை மனமுவந்து வரவேற்கவில்லை. மிகவும் குறுகிய காலத்துக்கு அவரும் மனைவியும் தங்கியிருப்பதற்கே சிங்கப்பூரும் தாய்லாந்தும் அனுமதித்தன. இறுதியில் அவர் ஒன்றரை மாதங்களுக்கு பிறகு நாட்டுக்கு திரும்பி வந்தார். ஆனால், கடந்த வாரம் இராணுவ விமானம் ஒன்றில் தனது சகோதரி றெஹானா சகிதம் இந்தியா சென்ற ஹசீனா அங்கு ஒரு வாரகாலமாக தங்கியிருக்கிறார். உத்தரப்பிரதேசத்தில் விமானப்படைத் தளம் ஒன்றில் வந்திறங்கிய அவரை இந்தியாவின் தேசிய பாதுகாப்பு ஆலோசகர் வரவேற்றார்.





2022 ஜூலையில் இலங்கை விமானப்படையின் விமானத்தில் சென்று சென்னை அருகே உள்ள விமானப் படைத் தளம் ஒன்றில் இறங்குவதற்கும் பிறகு சென்னை விமானநிலையம் ஊடாக சிங்கப்பூர் செல்வதற்கும் கோட்டாபய சார்பில் அனுமதி கேட்கப்பட்டபோது இந்திய அரசாங்கம் அதற்கு மறுத்து விட்டதாக கூறப்பட்டது.

பங்களாதேஷ் நெருக்கடியையும் ஹசீனா விவகாரத்தையும் ஆராய்வதற்காக மோடி அரசாங்கம் உடனடியாகவே சர்வகட்சி மகாநாடொன்றைக் கூட்டியது. இந்தியாவில் அவருக்கு அரசியல் தஞ்சம் அளிப்பது குறித்து தீர்மானம் எதுவும் எடுக்கப்படவில்லை என்று வெளியுறவு அமைச்சர் சுப்பிரமணியம் ஜெய்சங்கர் கூறியிருக்கின்ற போதிலும், ஹசீனா இந்தியாவில் தங்கியிருப்பதற்கு எந்த கால எல்லையும் வரையறுக்கப்படவில்லை.

இந்தியாவில் இருந்து லண்டனுக்கு செல்வதற்கே ஹசீனா முதலில் திட்டமிட்டதாகக் கூறப்பட்டது. ஆனால், அவரை தற்காலிகமாகக் கூட அனுமதிப்பதற்கு பிரிட்டனும் அமெரிக்காவும் மறுத்துவிட்டன. நூற்றுக்கணக்கானவர்களைப் பலியெடுத்த கொடூரமான அடக்குமுறைக்காக ஹசீனாவை பொறுப்புக்கூற வைக்கவேண்டும் என்று கேட்டிருக்கும் அமெரிக்கா அவரின் விசாவை ரத்துச் செய்திருக்கிறது. அதேவேளை பங்களாதேஷ் வன்முறைகள் தொடர்பாக ஐக்கிய நாடுகள் தலைமையில் விசாரணை நடத்தப்பட வேண்டும் என்று பிரிட்டன் கோரியிருக்கிறது.

இந்திய அரசாங்கம் ஹசீனா தொடர்பில் இறுதியில் எத்தகைய முடிவை எடுக்கும் என்று உடனடியாகத் தெரியவில்லை. ஆனால் சாத்தியமானளவு விரைவாக வெளியேறிவிடுமாறு கோட்டாபயவை சிங்கப்பூரும் தாய்லாந்தும் கேட்டுக் கொண்டதைப் போன்று ஹசீனாவை இந்தியா வலியுறுத்தப் போவதில்லை என்பது மாத்திரம் நிச்சயம். மோடி அரசாங்கத்தின் அணுகுமுறை பங்களாதேஷ் வீதிகளில் இந்திய விரோத உணர்வுகளை அதிகரிக்கக்கூடிய ஆபத்து இருப்பதாக அவதானிகள் எச்சரித்தார்கள்.

சிறுபான்மைச் சமூகங்களுக்கு குறிப்பாக இந்துக்களுக்கு எதிரான மோசமான வன்முறை கட்டவிழ்த்துவிடப்பட்டிருக்கிறது. அதனால் இந்தியா ஒரு சிக்கலான சூழ்நிலையை எதிர்நோக்குகிறது.

ஹசீனா பங்களாதேஷுக்கு இனிமேல் ஒருபோதும் திரும்பப்போவதில்லை என்றும் அரசியலிலும் ஈடுபடப்போவதில்லை என்று அவரின் மகன் சஜீப் வாசெட் ஜோய் கடந்த வாரம் முதலில் கூறினார். ஆனால், இடைக்கால அரசாங்கம் பாராளுமன்ற தேர்தலை நடத்துவது குறித்து தீர்மானிக்கும்போது ஹசீனா நாடுதிரும்புவார் என்று நான்கு நாட்கள் கழித்து ரைம்ஸ் ஒஃப் இந்தியா பத்திரிகைக்கு அமெரிக்காவில் இருந்து வழங்கிய நேர்காணலில் கூறியிருக்கிறார். அவாமி லீக் நிச்சயம் தேர்தலில் போட்டியிடும் என்று கூறிய அவர் தாயார் போட்டியிடுவாரா இல்லையா என்பதை வெளிப்படையாகக் கூறவில்லை.

இலங்கையில் கோட்டாபய அரசாங்கம் பொருளாதாரத்தை தவறாகக் கையாண்டது போன்று பங்களாதேஷில் ஹசீனா அரசாங்கம் நடந்துகொள்ளவில்லை. இலங்கை பொருளாதார நெருக்கடியில் சிக்கித்தவித்தபோது அவசர கடனுதவியை வழங்கக்கூடிய நிலையில் பங்களாதேஷ் இருந்தது.

அவரது கடந்த 15 வருடகால ஆட்சியில் பங்களாதேஷ் கணிசமான பொருளாதார வளர்ச்சியைக் கண்டது. 17 கோடி சனத்தொகையைக் கொண்ட நாட்டில் பல இலட்சம் மக்கள் வறுமையில் இருந்து மீட்கப்பட்டனர். என்றாலும் இளைஞர்கள் மத்தியிலான வேலையில்லாத் திண்டாட்டம் சுமார் 40 சதவீதமாக இருந்தது ஒரு பெரிய குறைபாடு. அதேவேளை,

அயல்நாடான மியன்மாரில் வன்முறைகளில் இருந்து தப்பியோடிவந்த ஆயிரக்கணக்கான றொஹிங்கியா முஸ்லிம் அகதிகளுக்கு தஞ்சம் அளித்தமைக்காக ஹசீனாவின் அரசாங்கத்தை சர்வதேச சமூகம் பாராட்டியது.

கோட்டாபயவைப் போன்று ஹசீனா அரசியல் அனுபவம் இல்லாதவரும் அல்ல.

பங்களாதேஷுக்கு விடுதலை பெற்றுக் கொடுத்த ஷேய்க் முஜிபுர் ரஹ்மானின் புதல்வியான ஹசீனா முதலில் 1996 ஜூன் தொடக்கம் 2001 ஜூலை வரையும் பிறகு 2009 ஆகஸ்ட் தொடக்கம் 2024 ஆகஸ்ட் வரையும் மொத்தமாக 20 வருடங்கள் பிரதமராக பதவி வகித்தார். தனது நாட்டில் மாத்திரமல்ல, உலகிலேயே மிகவும் நீண்டகாலம் பதவியில் இருந்த பெண் அரசாங்கத் தலைவர் என்ற வரலாற்றுப் பெருமைக்குரியவராக புகழப்படக்கூடிய அவர் இறுதியில் மக்கள் கிளர்ச்சிக்கு மத்தியில் அபகீர்த்தி யுடன் நாட்டை விட்டு தப்பியோட வேண்டிய நிலை ஏன் வந்தது?

அண்மைய பல வருடங்களாக ஹசீனாவிடம் வளர்ந்துவந்த எதேச்சாதிகாரப் போக்கு அவரின் அரசாங்கத்தின் நியாயப்பாட்டை கேள்விக்குள்ளாக்கி யது. எதிர்க்கட்சிகளுக்கும் அவருக்கும் இடையில் பெருமளவுக்கு பகைமையான உறவுமுறையே இருந்தது.

2018 பாராளுமன்ற தேர்தலுக்கு முன்னதாக முன்னாள் பிரதமரும் பங்க ளாதேஷ் தேசியவாத கட்சியின் தலை வியுமான பேகம் காலிதா சியாவுக்கு ஐந்து வருடச் சிறைத்தண்டனை விதிக் கப்பட்டது. பிறகு அந்த சிறைத்ண்டனை பத்து வருடங்களாக நீடிக்கப்பட்டது. தீவிரவாதப் போக்குடைய இஸ்லாமிய கட்சியொன்றின் தலைவர்கள் பலரை போர்க்குற்ற விசாரணை மன்றம் குன்ற வாளிகளாகக் கண்டு தூக்கிலிட்டது. தீவிரமான இந்திய ஆதரவாளரான ஹசீனா இஸ்லாமிய தீவிரவாத சக்திகளி னால் கடுமையாக வெறுக்கப்பட்டார்.

பிரதான எதிர்க்கட்சியான பங்களாதேஷ் தேசியவாத கட்சி அடுத்தடுத்து இரு பாராளுமன்ற தேர்தல்களை பகிஷ்கரித்தது. இறுதியாக 2024 ஜனவரியில் நடைபெற்ற பாராளுமன்ற தேர்தலில் ஹசீனாவின் அவாமி லீக் கட்சியின் வெற்றி கேள்விக்குரியதாகவே இருந்தது. முறைகேடுகள் பாரியளவில் இடம் பெற்றதாக பரவலாகக் குற்றஞ்சாட்டப்பட்டது.

எதிர்க்கட்சிகளின் தலைவர்கள் தொடர்ச்சியாக கொடுமைப்படுத்தப்பட்டனர். ஹசீனாவின் அரசியல் எதிரிகளுக்கு எதிராக பெருவாரியான வழக்குகள் தொடுக்கப்பட்டன. எதிரணி அரசியலுக்கான வெளி அண்மைய பல வருடங்களாக கடுமையாகச் சுருங்கிவிட்டது. தனது ஆட்சியின் கீழான பொருளாதார வளர்ச்சி தனது எதேச்சாதிகாரப் போக்கை மக்களின் கவனத்தில் இருந்து திசைதிருப்பும் என்று ஹசீனா நினைத்திருக்கக் கூடும். ஆனால், மக்கள் மத்தியில் குமுறல் அதிகரித்துக் கொண்டே வந்தது.


அந்த குமுறல் வெளிக்கிளம்புவதற்கு உடனடியான ஒரு தூண்டுதலாக அரசாங்க தொழில் வாய்ப்புகள் தொடர்பான ஒதுக்கீட்டு முறைக்கு எதிரான மாணவர்களின் போராட்டம் அமைந்தது.

இந்த ஒதுக்கீட்டு முறையை முதலில் 1972 அறிமுகப்படுத்தியவர் ஹசீனாவின்

(14ஆம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org





# நாமல் ராஜபக்ஷ ரணிலுக்கு சவால் விடுவாரா?

ரஞ்சன் அருண் பிரசாத்

இலங்கையைக் கடந்த காலங்களில் ஆட்சி செய்த கட்சிகளிலேயே, மிகவும் இளம் ஜனாதிபதி வேட்பாளர் ஒருவரை சிறிலங்கா பொதுஜன பெரமுன இம்முறை களமிறக்கியுள்ளது.

இலங்கையில் 9-ஆவது நிறைவேற்று அதிகார ஜனாதிபதியை தேர்வு செய்வதற்கான தேர்தல் செப்டம்பர் மாதம் 21-ஆம் தேதி நடத்தப்படவுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ள நிலையில், நாட்டின் தேர்தல் களம் சூடுபிடித்துள்ளது.

சிறிலங்கா பொதுஜன பெரமுன கட்சியில் ஏற்பட்ட பாரிய சர்ச்சைகளுக்கு பின்னர், அந்தக் கட்சியின் தேசிய அமைப்பாளரான நாமல் ராஜபக்ஸவை இம்முறை ஜனாதிபதி வேட்பாளராக அந்த கட்சி களமிறக்கியுள்ளது.

நாடாளுமன்றத்தில் மூன்றில் இரண்டு பெரும்பான்மை உறுப்பினர்களுடன் இலங்கையின் மிகவும் பெரிய கட்சியாக காணப்பட்ட முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஸ தலைமையிலான சிறிலங்கா பொதுஜன பெரமுன, இரண்டு பாரிய பின்னடைவுகளைச் சந்தித்துள்ளது.


ஜனாதிபதி வேட்பாளர் தொடர்பில் எழுந்த பிரச்னை காரணமாகக், கட்சியின் மிக முக்கிய உறுப்பினர்கள் அடங்கலாக சுமார் 100 நாடாளுமன்ற உறுப்பினர்கள் ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்கவுடன் கைகோர்த்தனர்.

இந்த நிலையில், மஹிந்த ராஜபக்ஸ தலைமையிலான சிறிலங்கா பொதுஜன பெரமுன, எதிர்வரும் ஜனாதிபதித் தேர்தலில் எவ்வாறான சவால்களை சந்திக்கவுள்ளது?

**யார் இந்த நாமல் ராஜபக்ஷ?**

இலங்கையின் உள்நாட்டுப் போரை முடிவுக்குக் கொண்டு வந்த முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஸவின் மூத்த மகன் தான் நாமல் ராஜபக்ஸ. 1986-ஆம் ஆண்டு பிறந்த நாமல் ராஜபக்ஸ, சட்டத்தரணியாவார்.

சிறிலங்கா சுதந்திர கட்சி தலைமையிலான ஐக்கிய மக்கள் சுதந்திர கூட்டமைப்பு சார்பில் ஹம்பாந்தோட்டை



மாவட்டத்தில் 2010ஆம் ஆண்டு நாடாளுமன்றத் தேர்தலில் போட்டியிட்டு நாடாளுமன்ற பிரவேசத்தைப் பெற்றார். அதைத் தொடர்ந்து, தொடர்ச்சியாக நாடாளுமன்ற உறுப்பினர், அமைச்சர் எனப் பல்வேறு பதவிகளை வகித்து வந்தார்.

2015ஆம் ஆண்டு நடைபெற்ற தேர்தலில் நாமல் ராஜபக்ஸவின் தந்தை மஹிந்த ராஜபக்ஸ தோல்வி அடைந்ததையடுத்து, அவர் சிறிலங்கா சுதந்திர கட்சியிலிருந்து வெளியேறி, சிறிலங்கா பொதுஜன பெரமுன கட்சியை ஸ்தாபித்தார்.

இதன்படி, 2020ஆம் ஆண்டு நாடாளுமன்றத் தேர்தலில் அந்தக் கட்சி சார்பாக வெற்றி பெற்ற நாமல் ராஜபக்ஸ, அமைச்சராக செயற்பட்டார்.

பொருளாதார நெருக்கடி காரணமாக நாட்டில் ஏற்பட்ட பாரிய போராட்டம் காரணமாக, 2022ஆம் ஆண்டு மே மாதம் 9ஆம் தேதி அமைச்சரவை கலைக்கப்பட்டது. அதைத் தொடர்ந்து, நாமல் ராஜபக்ஸ நாடாளுமன்ற உறுப்பினராக செயற்பட்டு வருகின்றார்.

நாமல் ராஜபக்ஸ களமிறங்க என்ன காரணம்?

பொருளாதார நெருக்கடியினால் வெடித்த மக்கள் போராட்டம் காரணமாக, அப்போதைய ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஸ பதவி விலகியதையடுத்து, சிறிலங்கா பொதுஜன பெரமுனவின் ஆதரவுடன் ரணில் விக்ரமசிங்க ஜனாதிபதியாக பதவியேற்றுக்கொண்டார்.

சிறிலங்கா பொதுஜன பெரமுனவின் ஆதரவுடன், ரணில் விக்ரமசிங்க, பொருளாதார நெருக்கடி பிரச்னையை எதிர்கொண்டு சர்வதேச நாணய நிதியம் உள்ளிட்ட அமைப்புகளின் உதவியுடன் நிலைமையை எதிர்கொண்டார்.

இந்த நிலையில், சிறிலங்கா பொது ஜன பெரமுன கட்சியின் ஆதரவு ரணில் விக்ரமசிங்க வசமானது.

ஜனாதிபதித் தேர்தலில் ரணில் விக்ரமசிங்கவிற்கு ஆதரவு வழங்க வேண்டும் என பொதுஜன பெரமுன கட்சியின் பெரும்பாலான உறுப்பினர்கள் வலியுறுத்தியிருந்தனர். இந்தநிலையில், சிறிலங்கா பொதுஜன பெரமுன கட்சி சின்னத்தின் கீழ் இம்முறை ஜனாதிபதித் தேர்தலை எதிர்கொள்ள கட்சியின் உயர் மட்டம் தீர்மானித்தது.

எனினும், ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க எதிர்வரும் ஜனாதிபதித் தேர்தலில் சுயாதீன வேட்பாளராகக் களமிறங்கத் தீர்மானித்திருந்தார்.

இதையடுத்து, ரணில் விக்ரமசிங்க தன்னைச் சுயாதீன வேட்பாளர் என அறிவித்ததையடுத்து, தமது வேட்பாளர் ஒருவரை தனியே களமிறக்க சிறிலங்கா பொதுஜன பெரமுன தீர்மானித்தது.

இந்தநிலையில், சிறிலங்கா பொதுஜன பெரமுன சார்பில் இலங்கையில் பிரபல தொழிலதிபரும், நாடாளுமன்ற உறுப்பினருமான தம்மிக்க பெரேராவை ஜனாதிபதித் தேர்தலில் களமிறக்க கட்சிக்குள் பேச்சுக்கள் நடத்தப்பட்டன.

இவ்வாறான பின்னணியில், சிறிலங்கா பொதுஜன பெரமுன கட்சியை பிரதிநிதித்துவப்படுத்தும் சுமார் 92 நாடாளுமன்ற உறுப்பினர்கள், தமது ஆதரவை ரணில் விக்ரமசிங்கவிற்கு வழங்குவதாக அறிவித்திருந்தனர்.

அதைத் தொடர்ந்து, சிறிலங்கா பொதுஜன பெரமுனவின் மேலும் சில நாடாளுமன்ற உறுப்பினர்கள் ரணில் விக்ரமசிங்க பக்கம் வருகை தந்த நிலையில், அந்தக் கட்சியின் பிரதேச அரசியல்வாதிகளும் ரணில் விக்ரமசிங்கவிற்குத் தமது ஆதரவை வெளியிட்டனர்.

இவ்வாறான நிலையில், சிறிலங்கா பொதுஜன பெரமுன பாரிய சவாலை எதிர்நோக்கியிருந்தனர்.

ஜனாதிபதி வேட்பாளராகத் தம்மிக்க பெரேராவை களமிறக்கப் பேச்சுக்கள் நடத்தப்பட்டு வந்த நிலையில், இறுதித் தருணத்தில் தனிப்பட்ட காரணங்களினால் ஜனாதிபதித் தேர்தலில் தன்னால் போட்டியிட முடியாது என தம்மிக்க பெரேரா அறிவித்திருந்தார்.

இதையடுத்து, சிறிலங்கா பொதுஜன பெரமுன சார்பில் ஜனாதிபதி வேட்பாளராக நாமல் ராஜபக்ஸ அறிவிக்கப்பட்டார்.

**ரணிலுக்கு சவாலாக அமைவாரா நாமல்?**

ஜனாதிபதி வேட்பாளராகக் களமிறங்கியுள்ள நாமல் ராஜபக்ஸ பிரதிநிதித்துவப்படுத்திய கட்சியின் பெரும்பாலான உறுப்பினர்கள் ரணில் விக்ரமசிங்கவிற்கு ஆதரவு வெளியிட்டுள்ள நிலையில், நாமல் ராஜபக்ஸவால் ரணில் விக்ரமசிங்கவிற்கு எப்படி சவால் அளிக்க முடியும் என்ற எதிர்பார்த்து இலங்கையில் நிலவுகிறது.

தான் சவாலை ஏற்றுக்கொள்ளத் தயார் என சிறிலங்கா பொதுஜன பெரமுனவின் வேட்பாளர் நாமல் ராஜபக்ஸ தெரிவிக்கின்றார்.

"நிச்சயமாக நான் சவாலை ஏற்றுக் கொள்கின்றேன். நாங்கள் ஆதரவாளர்கள் மீது நம்பிக்கை வைத்துள்ளோம். எமது கொள்கை மீது நாம் நம்பிக்கை வைத்துள்ளோம். பெற்றோர் மற்றும் இளைஞர்களின் எதிர்பார்ப்புக்களை நிறைவேற்ற நாம் செயற்படுவோம். நாங்கள் ஒன்றாக இருந்தவர்கள். மனக்கசப்புக்கள் இருந்திருக்கலாம். அனைவரிடமும் குறைப்பாடுகள் இருந்திருக்கலாம். நாம் அதனைச் சரி செய்து முன்னோக்கி பயணிப்போம். கட்சியை விட்டு சென்ற அனைவருக்கும் மீண்டும் அழைப்பு விடுக்கின்றேன்," என நாமல் ராஜபக்ஸ தெரிவிக்கின்றார்.

இந்த நிலையில், ஜனாதிபதி வேட்பாளராகக் களமிறங்கியுள்ள ரணில் விக்ரமசிங்க, நாமல் ராஜபக்ஸவுக்குச் சவாலாக அமைவாரா என முன்னாள் ஜனாதிபதியும், சிறிலங்கா பொதுஜன பெரமுனவின் தலைவருமான மஹிந்த ராஜபக்ஸவிடம் ஊடகவியலாளர்கள் கேள்வி எழுப்பினர்.

"சவாலா...." என சிரித்துக்கொண்டு அந்தக் கேள்விக்குப் பதிலளிப்பதை அவர் தவிர்த்துவிட்டார்.

சிறிலங்கா பொதுஜன பெரமுன சார்பில் நாமல் ராஜபக்ஸ களமிறக்கப்பட்டமை குறித்து, ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க கருத்து வெளியிட்டார்.

"போட்டி எவ்வாறு இருக்கும் என எனக்குத் தெரியாது. நாம் சண்டை போட வரவில்லை. எனது கொள்கையைக் கூறி நாட்டை முன்னோக்கிக் கொண்டு செல்லும் ஒரே வழி இதுவென கூறுகின்றேன். இதை மாத்திரமே நான் கூறுகின்றறேன். நாட்டை முன்னோக்கிக் கொண்டு செல்ல வேண்டும் என்றால், எனக்கு வாக்களியுங்கள் என்றே நான் கூறுகின்றேன்," என ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க பதிலளித்தார்.

**தமிழ் கட்சிகள் யார் பக்கம்?**

சிறிலங்கா பொதுஜன பெரமுன கட்சியுடன் கூட்டணி அமைத்திருந்த தமிழ் கட்சிகள் அனைத்தும், ரணில் விக்ரமசிங்கவிற்கு ஆதரவு வெளியிட்டு வருகின்றன.

இதன்படி, செந்தில் தொண்டமான் தலைமையிலான இலங்கை தொழிலாளர் காங்கிரஸ், டக்ளஸ் தேவானந்தா தலைமையிலான ஈழ மக்கள் ஜனநாயகக் கட்சி, சிவநேசத்துரை சந்திரகாந்தன் (பிள்ளையான்) தலைமையிலான தமிழ் மக்கள் விடுதலை புலிகள் கட்சி, சதாசிவம் வியாழேந்திரன் உள்ளிட்ட தரப்பினர் ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்கவிற்கு ஆதரவு வழங்கி வருகின்றனர்.

அத்துடன், தமிழ் முற்போக்கு கூட்டணி, சிறிலங்கா முஸ்லிம் காங்கிரஸ் உள்ளிட்ட தமிழ் முஸ்லிம் கட்சிகள் ஐக்கிய மக்கள் சக்தியின் ஜனாதிபதி வேட்பாளர் சஜித் பிரேமதாஸவிற்கு ஆதரவு வழங்கியுள்ளன.

தமிழீழ விடுதலை இயக்கம் (ரெலோ), தமிழ் மக்கள் கூட்டணி, தமிழீழ மக்கள் விடுதலைக் கழகம் (புளொட்) தமிழ் தேசிய கட்சி, ஈழ மக்கள் புரட்சிகர விடுதலை முன்னணி (ஈ.பி.ஆர்.எல்.எப்) தமிழ் தேசிய பசுமை இயக்கம் மற்றும் ஜனநாயக போராளிகள் கட்சி ஆகிய அரசியல் கட்சிகள் இணைந்து மட்டக்களப்பு மாவட்ட முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் பா.அரியநேத்திரனை தமிழ் பொது வேட்பாளராகவும் அறிவித்து உள்ளனர்.

இலங்கை ஜனாதிபதித் தேர்தலில் பலமுனைப் போட்டி நிலவும் நிலையில், எந்த அணிக்கு இது சாதகமாக அமையும் என்ற எதிர்பார்ப்பு பரவலாக உள்ளது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பனங்காட்டான்

# பேரம் பேசிப்பேசியே சோரம் போவதைவிட தமிழ்த் தேசிய குறியீடாக போட்டியிடுவது தவறா?



'இப்படியும் நடக்கிறது' பத்தியை எழுதும் ஊர்க்குருவி ஏதாவது ஒரு குட்டிக் கதையுடன் அதனைத் தொடங்குவது வழக்கம். அதுபோல இன்றைய இப்பத்தியையும் தமிழர்களுக்கு நன்கு பரிச்சயமான ஒரு குட்டிக் கதையுடன் ஆரம்பிப்பது பொருத்தம்.

"ஓர் ஊரில் ஒருவன் எப்போதும் புலி வருகுது புலி வருகுது என்று சொல்லி மற்றவர்களை அச்சப்படுத்திக் கொண்டேயிருப்பான். இதனை நம்பும் மக்கள் கிலி பிடித்து ஓடுவர். ஆனால் புலி வராது. இப்படிப் பல நாட்கள் இவன் செயல் அமைந்திருந்தது. ஆனால் ஒரு நாள் புலி உண்மையாகவே வந்துவிட்டது. புலி வராது என்று நினைத்தவர்கள் ஏமாந்தனர்" என்பதுவே கதை.

தமிழ்ப் பொதுவேட்பாளர் என்பது அடிபடத் தொடங்கிய காலத்திலிருந்து பலரும் இது சரிவராது என்றே எண்ணியிருந்தனர். முக்கியமாக தமிழரசுக் கட்சியைச் சேர்ந்த ஓரிருவருக்கு இதுவே வாய்ப்பாடாக இருந்தது. இவர்கள் சொல்வதை நம்பிய ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவும், தமிழ்ப் பொதுவேட்பாளர் ஒருவரை கண்டுபிடிப்பது சாத்தியப்படாது என்றவாறு சொன்னது ஞாபகமிருக்கிறது.

புலி உண்மையாகவே வந்த கதை போன்று தமிழ்ப் பொதுவேட்பாளர் வந்துவிட்டார். பொதுவேட்பாளரை மூர்க்கத்தனமாக எதிர்த்து, சிங்களத் தரப்புக்கு சாமரை வீசிக் கொண்டிருக்கும் சுமந்திரன் அங்கம் வகிக்கும் தமிழரசுக் கட்சியிலிருந்து, அதன் மத்திய குழுவைச் சேர்ந்த பாக்கியசெல்வம் அரியநேத்திரன் களமிறங்கியுள்ளார். இதிலுள்ள இன்னொரு சிறப்பு அம்சம், வடக்கும் கிழக்கும் இணைந்த தமிழ்த் தேசியத்தின் அடையாளமாக கிழக்கு மாகாணத்தைச் சேர்ந்த அரியநேந்திரன் வேட்பாளராக தெரிவாகியிருப்பதுவே.

தமிழ்ப் பொதுவேட்பாளர் தொடர்பான மேலும் பல விடயங்களை இக்கட்டுரையின் பிற்பகுதியில் பார்ப்போம். அதற்கு முன்னதாக, ஜனாதிபதித் தேர்தல் தொடர்பாக ஏற்பட்டிருக்கும் பல மாற்றங்களை நோக்குவது அவசியம்.

இதனை எழுதும்வரை 27 வேட்பாளர்கள் கட்டுப்பணம் செலுத்தியுள்ளனர். இவர்களுள் 13 பேர் சுயேட்சைக் குழுக்களைச் சேர்ந்தவர்கள். ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க ஐக்கிய தேசிய கட்சியின் தலைவராயுள்ள போதிலும் அவரும்கூட சுயேச்சையாகவே போட்டியிடுகிறார். தமிழ்ப் பொதுவேட்பாளர் அரியநேத்திரனும் சுயேட்சையாகவே போட்டியிடுகிறார். இந்த மாதம் 14ம் திகதிவரை கட்டுப்பணம் செலுத்தலாம் என்பதால் 27 எண்ணிக்கை அதிகரிக்க வாய்ப்புண்டு.

இதுவரை போட்டியிடுவதாக அறிவிக்கப்பட்டவர்களுள் நாமல் ராஜபக்சவே வயதில் குறைவானவர். இரண்டு பிள்ளைகளின் தந்தையான இவர் அம்பாந்தோட்டை மாவட்டத்தின் எம்.பிக்களுள் ஒருவர். ராஜபக்ச குடும்ப இளவரசராக தம்மை முன்னிறுத்தி அரசியல் செய்து வருபவர்.

இம்முறை போட்டியிடுபவர்களில் நாமலும், சஜித்தும் முறையே முன்னாள் ஜனாதிபதிகளான மகிந்த ராஜபக்ச, ரணசிங்க பிரேமதாச ஆகியோர்களின் புதல்வர்கள். ரணில் இப்போது ஜனாதிபதியாக இருப்பவர். ஏற்கனவே இரு தடவை ஜனாதிபதி தேர்தலில் தோல்விகண்டவர். சஜித்தும் ஒரு தடவை போட்டியிட்டு தோல்வியுற்றவர். 1982ல் இடம்பெற்ற முதலாவது ஜனாதிபதித் தேர்தலில் மூன்றாவது இடத்துக்கு வந்த ரோகண விஜேவீரவின் ஜே.வி.பி. அணியின் வேட்பாளராக அனுர குமார திசநாயக்க இத்தேர்தலில் போட்டியிடுகிறார்.

1970ம் ஆண்டுப் பொதுத்தேர்தலில் சிறிமாவோ பண்டாரநாயக்க தலைமையிலான சிறிலங்கா சுதந்திரக் கட்சி மூன்றிலிரண்டு பெரும்பான்மையுடன் ஆட்சியைக் கைப்பற்றியபோது, வயதில் மிகக் குறைந்த எம்.பியாக தெரிவானவர் மகிந்த ராஜபக்ச. மகிந்தவின் தந்தை டி.ஏ.ராஜபக்ச அம்பாந்தோட்டை எம்.பியாகவும், அமைச்சராகவும் இருந்தவர். இந்த அரசியல் பின்னணியை நாமலுக்கான மேலதிக தகைமையாக அவரது தரப்பினர் பார்க்கின்றனர்.

அதேசமயம், அறகலய போராட்டத்தின்போது இளவயதினருக்கு இடமளிக்க வேண்டுமென விடுக்கப்பட்ட கோரிக்கையை தாங்கள் நிறைவேற்றியிருப்பதாக பெரமுனக்காரர்கள் சொல்வது வேடிக்கையான கதை. ராஜபக்சக்களை வீட்டுக்கு அனுப்ப வேண்டுமென்றே அறகலய போராட்டம் இடம்பெற்றது என்பதையும், ஜனாதிபதி கோட்டாவிலிருந்து பெறாமகன் நாமல்வரை பதவிகளை துறந்தனர் என்பதையும் இரண்டு வருடத்துள் பொதுமக்கள் மறந்துவிட்டனரென இவர்கள் நினைக்கிறார்கள் போலும்.

ரணிலை எதிர்த்து மொட்டுச் சின்னத்தில் பெரமுன போட்டியிட வேண டுமென வும், வேட்பாளராக தாமே நிறுத்தப்பட வேண்டுமெனவும் நாமல் ராஜபக்ச தமது வீட்டுக்குள்ளும் கட்சிக்குள்ளும் போராடி வந்தவர். ஆனால், காலநிலை அவருக்கு சாதகமாக இருக்கவில்லை. கோடீஸ்வர சூதாட்ட வணிகரான தம்மிக்க பெரேராவையே பெரமுன நிறுத்த விரும்பியது. இறுதி நேரத்தில் அவர் பின்வாங்கி விட்டார். பிரதமர் தினேஸ் குணவர்த்தனவுக்கு பெரமுன அழைப்பு விடுத்தது. அவர் தமது ஆதரவை ஏற்கனவே ரணிலுக்குத் தெரிவித்துவிட்டார். விஜேதாச ராஜபக்சவையும் பெரமுன நாடியபோதும் அவரும் மறுத்துவிட்டதாக தகவல். வேறு எவரும் இல்லாத நிலையிலேயே நாமல் ராஜபக்ச தெரிவானார் என்று துணிந்து கூறலாம். இவரது சிறிய தந்தை பசில் ராஜபக்ச, பெரமுன செயலாளர் சாகர காரியவாசம் ஆகியோர் நாமலை நியமிப்பதில் முன்னணியில் நின்றவர்கள்.

**தமிழ்த் தேசியத்தின் குறியீடாகவே தாம் போட்டியிடுவதாக அறிவித்திருக்கும் பாக்கியசெல்வம் அரியநேந்திரன், பொதுவேட்பாளராகத் தெரிவாகும்போது இவர் சார்ந்த தமிழரசுக் கட்சி பொதுவேட்பாளர் நிலைப்பாட்டில் எந்த ஒரு முடிவையும் எடுத்திருக்கவில்லை. ஆதலால், இவர் கட்சிக் கட்டுப்பாட்டை மீறினார் என்று எவரும் குற்றஞ்சாட்டுவது பொருந்தாது. இதனைப் புரிந்து கொள்ள மறுத்து தமிழ்ப் பொதுவேட்பாளரை எதிர்ப்பவர்கள் சிங்கள தேச அரசியலின் ஏஜன்டுகளாகவே மக்களால் பார்க்கப்படுவார்கள்.**

வேட்பாளராக நாமல் தெரிவானதில் தந்தையான மகிந்தவுக்கு முழுமையான விருப்பமில்லை. வேறு வழியின்றி சம்பிரதாயமாக மகனை அணைத்து வாழ்த்தினாரானாலும் இத்தேர்தலில் நாமல் வெற்றி பெறுவாரென அவருக்கு நம்பிக்கை இல்லை. பெரமுனவின் நூறு வரையான எம்.பிக்கள் மற்றும் அமைச்சர்களின் ஆதரவு ரணில் பக்கம் இருப்பதால் நாமலின் வெற்றி வாய்ப்பு இறங்குமுகமாய் உள்ளது. முக்கியமாக இவரின் தாயார், இளைய சகோதரர் இருவர் ஆதரவாக இல்லையென்பது ஊடகங்கள் ஊடாக வெளிச்சமாகியுள்ளது.

தமிழர் தரப்பு ஆதரவு ராஜபக்சக்களுக்கு எவ்வாறு இருக்குமென்பதை சொல்லத் தேவையில்லை. கடந்த மூன்று ஜனாதிபதித் தேர்தல்களிலும் முறையே சரத் பொன்சேகா, மைத்திரிபால சிறிசேன, சஜித் பிரேமதாச ஆகியோருக்கு தமிழ் மக்கள் ஆதரவாக வாக்களித்ததானது, தமிழினப் படுகொலை புரிந்த ராஜபக்சக்களை தோற்கடிக்க வேண்டுமென்பதை இலக்காகக் கொண்டது. இத்தேர்தலில் அதே தமிழினப் படுகொலையாளிகளின் வாரிசாக நாமல் போட்டியிடுகிறார். இதனைப் புரிந்து கொண்டே நாமலை தமக்கான போட்டியாளராக ரணில் பார்க்கவில்லை.

நாமல் இம்முறை வெல்வது சிரமமானது. ஆனால், ஐந்தாண்டுகளின் பின்னர் வரவிருக்கும் அடுத்த ஜனாதிபதித் தேர்தலுக்கான விதையாகவும், உரமாகவும் இதனை அவர் எண்ணுவதாக தெரிவித்துள்ள சிங்கள ஊடகமொன்று, தமது காலுக்குப் பொருத்தமற்ற செருப்பை அவர் அணிந்திருப்பதாக நையாண்டி பண்ணியுள்ளது. அடுத்த மாதம் 21ம் திகதி தேர்தல் நடைபெறும் வரை இது தொடர்பான மேலும் பல விடயங்களை நோக்கலாம்.

பொதுவேட்பாளர் தெரிவில் சசிகலா ரவிராஜின் பெயரும் அடிபட்டது. ஆனால், சுயேச்சைக் குழுவிற்கான சில நிபந்தனைகளுக்கு இவர் பொருத்தமாக அமையவில்லையாதலால் கைவிட நேர்ந்தது. இறுதியில் கொழும்பு சட்டவாளர் தவராஜாவும் மட்டக்களப்பின் முன்னாள் எம்.பி. அரியநேத்திரனும் தெரிவுப் பட்டியலில் நின்றனர். திரு. தவராஜாவுடன் உரையாடிய பின்னரே தாம் போட்டியிட முன்வந்ததாக அரியநேத்திரன் தெரிவித்திருப்பது இருவருக்குமிடையில் சிண்டு முடிய முனைந்தவர்களை ஓரந்தள்ளிவிட்டது.

தமிழீழ விடுதலைப் புலிகள் தமிழ்த் தேசிய கூட்டணியை உருவாக்கியபோது அதற்குள் உள்வாங்கப்பட்ட முதலாவது பட்டியலில் இடம்பெற்ற அரியநேத்திரன் ஓர் ஊடகவியலாளர். தமிழ் அலை என்ற பத்திரிகையின் ஆசிரியராகவிருந்தவர். 2004, 2010ம் ஆண்டுப் பொதுத் தேர்தல்களில் மட்டக்களப்பு மாவட்ட எம்.பியாகத் தெரிவானவர். தமிழ்த் தேசியத்தை நெஞ்சார ஏற்று அப்பாதையில் தொடர்ந்து பயணித்து வருபவர். இலங்கைத் தமிழரசுக் கட்சியின் மத்திய குழு உறுப்பினர். கொள்கைப் பற்றாளர் என நன்கு அறியப்பட்டவர். இவைகளை நன்கு பரிசீலித்ததற்கு பின்னரே தமிழ்ப் பொதுவேட்பாளராக நியமிக்கப்பட்டுள்ளார்.

தமிழ்ப் பொதுவேட்பாளர் என்பது ஜனாதிபதித் தேர்தலில் வெல்வதற்கானதல்ல. நாடு முழுவதும் உள்ள தமிழர்கள் நூற்றுக்கு நூறு வீதம் இவருக்கே வாக்களித்தாலும் ஜனாதிபதியாக முடியாது என்பது அனைவருக்கும் தெரியும். "தமிழ்த் தேசியத்துக்கான குறியீடாகவே ஜனாதிபதித் தேர்தலில் நான் போட்டியிடுகிறேன். நான் வெறும் அடையாளம் மட்டுமே" என்று வேட்பாளராக அறிவிக்கப்பட்ட பின்னர் அரியநேந்திரன் குறிப்பிட்டிருப்பது தெளிவான அவரது தேசியக் கொள்கையை வெளிப்படுத்துகிறது.

(14ஆம் பக்கம் பார்க்க)




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மாகாண சபைகள் பற்றி தனிநபர் பிரேரணை நடந்தது என்ன?

அ.நிக்ஸன்

தனிநபர் பிரேரணையின் இரண்டாம் வாசிப்புக்கு வாக்கெடுப்போ விவாதமோ தேவையில்லை. எந்த ஒரு சட்ட மூலத்துக்கும் சபாநாயகர் தலைமையில் நடைபெறும் கட்சித் தலைவர்கள் கூட்டத்தில் விவாதம் அல்லது வாக்கெடுப்பு என்று எவரேனும் கேட்கும் சந்தர்ப்பத்தில் அதற்கு அனுமதிக்கப்படலாம்.

முக்கியமான அதுவும் அரசியலமைப்புச் சட்டமூலங்களுக்கு விவாதமும் வாக்கெடுப்பும் நிச்சயமாக அவசியமானது. ஆனால் தனிநபர் பிரேரணையின் இரண்டாம் வாசிப்புக்கு விவாதம் வாக்கெடுப்பு கோரப்படுவதில்லை.

ஆகவே விவாதம் இன்றி வாக்கெடுப்பும் இல்லாமல் இரண்டாம் வாசிப்பு நிறைவேற்றம் என்று தலைப்பிட்டு வெற்றி என்ற தொனியில் செய்தி எழுதப்பட்டமைதான் பெரும் வேடிக்கை. நாடாளுமன்ற நிலையியல் கட்டளை விதிகளின் பிரகாரம் சட்ட மூலம் அல்லது தனிநபர் பிரேரணை ஆகியவற்றின் இரண்டாம் வாசிப்பு சமர்ப்பிக்கப்பட்டு மூன்றாம் வாசிப்புக்கு அனுமதிப்பது வழமை.

ஆனால் இரண்டாம் வாசிப்பு நிறைவேற்றம் என்ற அர்த்தத்தில் செய்தி எழுத முடியாது. செய்தி மொழியில் அதனை சமர்ப்பிப்பு என்று தான் எழுதவேண்டும்.

தனிநபர் பிரேரணைக்கான நிலையியல் கட்டளைச் சட்டத்தின் 52 - 53 பகுதிகளின் 10 ஆவது சரத்தில், இரண்டாம் வாசிப்பு சமர்ப்பிக்கப்பட்டு மூன்றாவது வாசிப்பின் பின்னர் 72 ஆம் பிரிவுக்கு அமைவாக நிறைவேற்றப்படும் என்று தெளிவாகக் கூறப்பட்டுள்ளது.

இந்த விதி, சட்டவாக்கக் குழு சமர்ப்பிக்கும் இரண்டாம் வாசிப்புக்கும் பொருந்தும். அதன் ஆங்கிலப் பதம் இப்படித்தான் வருகின்றது. (After the Bill has been reported to Parliament, the Bill shall be read a Third time and passed in terms of Standing Order 72)

ஆகவே சுமந்திரன் சமர்ப்பித்த இரண்டாம் வாசிப்பு மூன்றாவது வாசிப்பாக மீண்டும் சபையில் சமர்ப்பிக்கப்பட்டு அங்கீகரிக்கப்படும். இதுதான் உண்மை.

நிறைவேற்றம் என்று தலைப்புச் செய்தி எழுதியன் மூலம், நாடாளுமன்ற செய்தி எழுதும் மரபும் பண்பும் அவமதிக்கப்பட்டிருக்கிறது என்றே பொருள்கொள்ள வேண்டும்.

அதேவேளை எதிர்வரும் வாரம் சமர்ப்பிக்கப்படவுள்ள மூன்றாம் வாசிப்பு சுமந்திரனின் தனிநபர் பிரேரணையாக சமர்ப்பிக்கப்படமாட்டாது.

அது சட்டவாக்கக் குழுவின் சட்டமூலமாகவே கருதப்படும். ஆகவே அது சம்மந்தப்பட்ட அமைச்சரே மூன்றாவது வாசிப்பை சபையில் சமர்ப்பிப்பார் என்பதையும் இங்கே தெரிந்து கொள்ள வேண்டும்.

சுமந்திரனால் சமர்ப்பிக்கப்பட்ட குறித்த தனிநபர் பிரேரணை 2019 ஆம் ஆண்டு நவம்பர் மாதம் ஏழாம் திகதி சமர்ப்பிக்கப்பட்டது. ஆனால் அதற்கு எதிராக உயர் நீதிமன்றத்தில் வழக்குத் தாக்கல் செய்யப்பட்டது அதனால் கைவிடப்பட்டிருந்தது.

எனினும் நிலையியல் கட்டளைகளின் பிரகாரம் எந்த ஒரு சட்டமூலத்துக்கு எதிராகவும் வழக்குத் தாக்கல் செய்யப்பட்டால் ஆறு மாதங்களுக்குள் அந்த வழக்கு பரிசீலனைக்கு எடுக்கப்பட வேண்டும். ஆறு மாதங்கள் கடந்தும் வழக்கு பரிசீலனைக்கு எடுக்கப்படவில்லையானால் குறித்த சட்டமூலத்தை மீண்டும் இரண்டாம் வாசிப்புக்காக நாடாளுமன்றத்தில் சமர்ப்பிக்க முடியும்.

அதன் பிரகாரமே குறித்த தனிநபர் பிரேரணையை சுமந்திரன் கடந்த செவ்வாய்க்கிழமை சமர்ப்பித்திருக்கிறார். சபாநாயகர் தலைமையில் இடம்பெற்ற கட்சித் தலைவர்கள் கூட்டத்திலும் இது பற்றி அவர் பேசியிருக்கிறார். ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவின் ஆதரவும் இதற்கு இருந்துள்ளது.

சில வாரங்களுக்கு முன்னர் ரணில் யாழ்ப்பாணத்துக்கு சென்றபோது 13 ஆவது திருத்தச் சட்டத்தில் உள்ள சில பகுதிகள் அமுல்படுத்தப்படும் என்று உறுதியளித்ததாக சுமந்திரன் ஊடகங்களிடம் கூறியிருந்தார். சுமந்திரனிடமும் மாவை சேனாதிராஜாவிடமும் ரணில் விக்கிரமசிங்க 13 ஐ நடைமுறைப்படுத்துவது பற்றிய தனது உத்தரவாத்தை ஆங்கிலத்தில் இரண்டு பக்கத்தில் கையளித்திருக்கிறார்.

இங்கே 13 ஐ நடைமுறைப்படுத்துவதில் எவருக்கும் பிரச்சினை இல்லை.

> **தமிழ்த் தேசிய அரசியல் கட்சிகளைக் கடந்து தனியொருவராக தமிழ்ச் சமூகத்தின் அரசியல் உரிமைகள் பற்றிப் பேசுவதானது, எண்பது வருடகால இனப்பிரச்சினையின் தரத்தை குறைத்து மதிப்பிடுவதாக அமைகின்றது. உரிமை பற்றிய பேச்சு என்பது அதுவும் ஜனநாயகச் சூழலில் ஒரு கூட்டுச் செயல்பாடு.**

2012 ஆம் ஆண்டில் இருந்து கடந்த ஆண்டு வரையான ஜெனிவா மனித உரிமைச் சபையின் இலங்கை பற்றிய தீர்மானங்களில் 13 அரசியல் தீர்வுக்கான ஆரம்பமாக அமைய வேண்டும் என வலியுறுத்தப்படுகின்றது.

அத்துடன் 13 ஐ நடைமுறைப்படுத்த வேண்டியது அரசாங்கத்தின் பிரதான கடமை. ஒவ்வொரு சிங்கள அரசியல் தலைவர்களுக்கும் அந்தப் பொறுப்பு உண்டு.

ஆனால் அதனை தனி ஒருவராக ரணில் விக்கிரமசிங்கவுடன் மாத்திரம் பேசிக் கொண்டு முயற்சிகளை மேற்கொள்ளும் நோக்கம் பற்றியே கேள்விகள் எழுகின்றன.

இப் பின்னணியிலேதான் இரண்டாம் வாசிப்பு நிறைவேற்றம் என்ற தலைப்பில் குறித்த செய்தி வெளியிட்டிருக்கின்றது என்ற சந்தேகம் எழுகின்றது. தமிழ்த் தேசிய அரசியல் கட்சிகளைக் கடந்து தனியொருவராக தமிழ்ச் சமூகத்தின் அரசியல் உரிமைகள் பற்றிப் பேசுவதானது, எண்பது வருடகால இனப்பிரச்சினையின் தரத்தை குறைத்து மதிப்பிடுவதாக அமைகின்றது. உரிமை பற்றிய பேச்சு என்பது அதுவும் ஜனநாயகச் சூழலில் ஒரு கூட்டுச் செயற்பாடு.

சுமந்திரன் அந்தக் கூட்டுச் செயற்பாட்டை 2010 ஆம் ஆண்டு நாடாளுமன்ற உறுப்பினராகப் பதியேற்ற நாளில் இருந்தே வெட்டியோட ஆரம்பித்துவிட்டார். அதன் உச்சக் கட்டமே இரண்டாம் வாசிப்பு நிறைவேற்றம் என்ற செய்தியின் தலைப்பைக் காணமுடியும். அத்தோடு தமிழரசுக் கட்சியின் தற்போதைய அவல நிலையும் உதாரணமாகிறது.

நாடாளுமன்ற நிலையியல் கட்டளைச் சட்டம் பற்றிய விளக்கம் சாதாரண பொது மக்களுக்கும், ஏன் தமிழ் அரசியல் பிரதிநிதிகள் என்று கூறிக்கொள்ளும் பலருக்கும் மற்றும் செய்தியாளர்கள் பலருக்கும் தெரிவதில்லை. இப் பலவீனங்களின் அடிப்படையில் தனிநபர் செயற்பாடுகள் அமைகின்றன என்று சொன்னால் அதில் மாறுக் கருத்தில்லை.

நாடாளுமன்ற விதிகளில் சட்டமூலங்கள் நிறைவேற்றம் என்பதற்கு ஆங்கிலப் பதம் (Executed) என்றுதான் உண்டு. அதாவது மூன்றாம் வாசிப்பு நிறைவேற்றப்பட்டு சபாநாயகரும் கையெழுத்திட்ட பின்னரே குறித்த சட்டமூலம் நிறைவேற்றம் என்று செய்தி மொழியில் எழுத வேண்டும்.

மூன்றாம் வாசிப்பு நிறைவேற்றப்பட்டாலும் அதனை அங்கீகரிக்கப்பட்டுள்ளது என்றுதான் தமிழில் செய்தி எழுத வேண்டும்.

சபாநாயகர் கையொப்பமிட்ட பின்னரே எந்த ஒரு சட்டமூலமும் நிறைவேற்றம் (Executed) என்று அர்த்தப்படும்.

---

# எங்கும் எதிலும் அரசியல்: அதல பாதாளத்தில் முடியும்!

ச. வி. கிருபாகரன்,
பிரான்ஸ்

பிரிட்டிஷ் அரசியல் கோட்பாட்டாளரும், ஜனநாயக சோசலிசருமான சேர் பெர்னார்ட் ரோலண்ட் கிரிக் கூறியதாவது : "எல்லாவற்றையும் அரசியலாக்க முயற்சிப்பது, அரசியலின் அழிவாகும். எல்லாமே அரசியலுக்குப் பொருத்தமானவையாகப் பார்க்கப்படும் போது, அரசியல் மயமாக்கல் சர்வாதிகாரமாகிவிடும்".

இலங்கைதீவை பொறுத்த வரையில் யாவும் அரசியல்மயமாக்கப்பட்டுள்ளது என்பதற்கு மேலாக வடக்கு கிழக்கில் - பாடசாலை, பல்கலைக்கழகம், கோவில்கள், தேவலாயங்கள், ஆஸ்பத்திரி வைத்தியசாலை, விளையாட்டுக்கள், சங்கங்கள் போன்றவை யாவும் கடந்த சில வருடங்களாக அரசியல்மயப் படுத்தியுள்ளது.

அரசியல் மயமாக்கலின் வரைவிலக்கணம்: அரசியல்மயமாக்கல் என்பது அரசியல் அறிவியல் மற்றும் கோட்பாட்டில் உள்ள ஒரு கருத்தாகும்.

அரசியல்மயமாக்கல் என்பது ஏதோ ஒரு விதத்தில் பதையில் அரசியல் இடையூறுகளினால் ஏற்படும் மாற்றங்களை குறிக்கிறது. பிரச்னைகள், முடிவுகள் அல்லது செயல்கள் நியாயம், நீதியை அடிப்படையாக கொள்ளாது அரசியல் காரணிகளால் முடிவு எடுக்கப்படும் பொழுது அது நிட்சயம் ஒரு அசாதரண நிலையை உருவாக்கிறது.

குற்றவியல் நீதித்துறையில், அரசியல் நிகழ்ச்சி நிரல் அல்லது சார்பு சட்ட முடிவுகள், நடைமுறைகள் அல்லது கொள்கைகளை வடிவமைக்கும் போது அரசியல் மயமாக்கல் மனித வாழ்க்கையில் பலவித போராட்டங்களுக்கு வழிவகுக்கின்றது என்பதை நாம் காணக்கூடியதாகவுள்ளது.

உதாரணமாக ஓர் அரசியல் கட்சிக்காரன் தனது வங்குரோத்து கட்சிக்கு வாக்கு தேடி, ஒரு சர்ச்சையின் போது கூறிய கருத்துக்களை இங்கு தருகிறேன்: "மருத்துவர் தவறிழைத்தால் மேலுலகத்திற்கே செல்ல நேரிடும். ஒரு உயிர் ஒரு வாழ்க்கை. உங்களைத் தொடர்ந்தும் கடவுள்களாகப் பார்க்கவே விரும்புகின்றோம். வைத்தியர்கள் கடவுளுக்கு அடுத்தவர்கள் இல்லை, கடவுளுக்கு நிகரானவர்கள்". அரசியல்வாதி என சொல்லப்படும் ஒருவரினால் மருத்துவர்கள் பற்றி கூறப்பட்ட பொன் மொழிகள்.

என்ன நடந்ததோ தெரியவில்லை, மருந்துவர்கள் 'தேசியத்தலைவர்' என்று கூறாமல் விட்டுள்ளார்! இறுதியாக கூறியுள்ளது இவரின் அரசியல் வங்குரோத்தை அழகாக சுட்டி காட்டுகிறது. "மக்கள் நலனுக்காகக் குரல் கொடுக்கும் - செயற்படும் வைத்தியர்களுக்கு என்றும் எங்களது ஆதரவு உண்டு".

இப்படியாக அரசியல்வாதிகளின் புசத்தல்கள் மக்களிற்கு எதையும் நன்மையாக கொண்டுவரப்போவதில்லை. இன்னும் பிரச்சனைகள் சர்ச்சைகளிற்கு எண்ணெய் ஊற்றும் வேலைகள் தான் நிறைவேற்றப்படுகிறது.

இன்னுமொரு சம்பவத்தில், அரசினால் நியமிக்கப்பட்ட ஒருவரின், பிராந்திய சமய அடையாளங்களை உதாசனம் காட்டி கதைப்பதன் மூலம், நியாயமுள்ள விடயங்களும் நியாயமற்றவையாக முடிந்துவிடும்.

உண்மைக்கு நேர்மைக்கு உலகில் இடம் உள்ளதா என்ற சந்தேகமான காலகட்டத்தில் நாம் வாழ்ந்து கொண்டிருக்கிறோம். உண்மை நேர்மை யாதார்த்தம் என்றவுடன் - சிலருக்கு அல்ல பலருக்கு நரி வெருட்டுகிறது. பொய்கள் வதந்திகளுக்கான பரப்புரைகளுக்கு முக்கிய இடம் கொடுக்கப்படுவதை நாம் தினமும் காணுகிறோம். இறுதியில் யாவற்றையும் பரீசீலீக்கும் பொழுது, யாவற்றுக்கும் வர்த்தகம் என்ற பூதத்தை அதற்குள் காண முடிகிறது.

உதரணத்திற்கு யூரியப் வியாபரிகள் 'ஆணை பெண்ணாகவும், பெண்ணை ஆணாகவும்' மாற்றி நன்றாக உழைப்பு நடத்துகிறார்கள். இவற்றுக்கு பவிக்கப்படுபவர்கள், தம்மை யூரியப் வியாபரிகள் வியாபார பொருளாக்கி பணம் உழைக்கிறார்கள் என்பதை பற்றி சிந்திக்கும் அளவு, இவ்விடயத்திற்கு தீர்வு காண முடியாது. இவற்றினால் இறுதியில் பாதிக்கப்படுபவர்கள் அப்பாவி மக்களே என்பதை யாவரும் புரிந்து கொள்ள வேண்டும்.

இன்று ஈழத்தமிழர்களின் வாழ்க்கை - நிலத்திலும் புலத்திலும் யூரியப் வியாபரிகளினால் நிர்ணயிக்கப்படுவதை அப்பாவி மக்கள் அறிவதில்லை. "வல்லவன் வகுத்தது வாய்க்கால்" என்பது போல், இன்று யூரியப் ஈழத்தமிழர்களது பொருளாதார, கலை கலாச்சார, சிவில், அரசியலை எண்பது வீதம் தவறான வழிகளில் வழி நடத்துகிறது.

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# தமிழ்ப் பொதுவேட்பாளரை எதிர்ப்போரின் நிலைப்பாடுகளும் உண்மைத் தன்மைகளும்

கந்தையா அருந்தவபாலன்




தமிழர் தரப்பில் 2010 ஆம் ஆண்டிலிருந்து பேசுபொருளாக கருத்து நிலையில் இருந்துவந்த தமிழ்ப் பொது வேட்பாளர் என்ற விடயம் தற்போது கள உருவத்தைப் பெற்றுள்ளது. பல்வேறு இடர்ப்பாடுகளையும் முட்டுக்கட்டைகளையும் தாண்டி தமிழ்த் தேசியப் பொதுக்கட்டமைப்பு தமிழ்ப் பொது வேட்பாளராக மட்டக்களப்பு மாவட்டத்தைச் சேர்ந்த முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் அரியநேந்திரனை பெயர் குறித்துள்ளது. இது தமிழ்ப் பொதுவேட்பாளர் என்ற முன்மொழிவு முளையிலே கருகிவிடும் அல்லது கருக வேண்டும் என எதிர்பார்த்த தரப்புகளுக்கு வியப்பையும் எரிச்சலையும் உண்டுபண்ணியுள்ளது என்பதை அத் தரப்புகளின் எதிர்வினைகள் காட்டிநிற்கின்றன. இத்தரப்புகள் ஆரம்பம் முதலே தமிழ்ப் பொதுவேட்பாளர் முன்மொழிவு தொடர்பில் ஆதாரமற்ற பொய்களை அவிட்டுவிடுதல், அம்முயற்சியில் ஈடுபடுவோரின் இயலுமை பற்றி எள்ளிநகையாடுதல், அவர்களைத் தனிமனிதரீதியாக இழிவுபடுத்தல், சம்பந்தப்படுவோரிக்கிடையிலான சிறிய கருத்துவேறுபாடுகளைப் பெரிய பிளவுகளாகப் பொது வெளியில் உருவகப்படுத்தல், ஐயத்தை ஏற்படுத்துதல்,அச்சத்தைத் தோற்றுவித்தல் எனப் பலவழிகளிலும் கல்லெறிந்த வண்ணம் உள்ளனர். 'வேண்டாப் பெண்டிரின் கால்பட்டால் குற்றம் கைபட்டால் குற்றம்' என்பதுபோல இத் தரப்புகள் தமிழ்ப் பொதுவேட்பாளர் முயற்சிகளின்மீது பிழைபிடிக்கும் கைங்கரியத்தில் ஈடுபட்டு வருகிறார்களேயன்றி அம்முன்மொழிவுக்கு மாற்றீடாக தமிழ் மக்களுக்கு விடிவு தரக்கூடிய மேம்பட்ட தெரிவு எது என்பது பற்றியோ, அதற்கான நியாயப்பாடுகள் பற்றியோ, அதன் உறுதிப்பாடுகள் பற்றியோ விவாதிக்கத் தயாரில்லை. இத்தரப்புகள் ஒவ்வொன்றும் மக்களை ஏமாற்றி தத்தம் நலன்களைப் பெறும் பழைய பல்லவியை பாட விரும்புகிறார்களேயன்றி நீண்ட கால நோக்கில் தமிழர்களின் இருப்புப் பற்றிச் சிந்திப்பவர்களாகத் தெரியவில்லை. தமிழ்த்தேச நலன்கருதி தமிழ்ப் பொது வேட்பாளர் களத்தில் இறங்கும் வேளையில் அதற்கான தேவைப்பாடுகளை மட்டுமன்றி மறுபுறத்தில் அதனை எதிர்ப்போரின் நிலைப்பாடுகள் பற்றியும், அவர்களால் முன்வைக்கப்படும் எதிர்க்கருத்துகளின் உண்மைத்தன்மை பற்றியும் பொதுமக்கள் அறிந்து கொள்வது அவசியமாகும். இது தொடர்பாக பரந்தளவிலான கலந்துரையாடல்கள், விவாதங்கள், பேச்சுகள், கட்டுரைகள் இடம்பெறச் செய்வது தமிழ்த் தேசத்தை நேசிக்கும் ஒவ்வொருவரின் கடமையாகும்.

தமிழ் மக்கள் மத்தியில் தமிழ்ப் பொது வேட்பாளரைத் தீவிரமாக எதிர்க்கும் அல்லது நிராகரிக்கும் தரப்புகளைப் பிரதானமாகப் பின்வருமாறு வகைப்படுத்தலாம்.

1. தென்னிலங்கைத் தேசியக் கட்சிகளின் பிரதிநிதிகளும் அதன் ஆதரவாளர்களும்.

2. எந்த அரசாங்கத்துடனும் இணைந்து பதவிகளையும் சலுகைகளையும் அனுபவிக்க விரும்பும் தமிழ்க் கட்சிகளின் தலைவர்களும் ஆதரவாளர்களும்.

3. தமிழ்த்தேசியம் பேசிக்கொண்டு அரசுடன் மறைமுக உறவைப் பேண விரும்பும் தமிழ்க் கட்சிகளின் தலைவர்கள் சிலரும் ஆதரவாளர்களும்.

4. தமிழ்த் தேசிய மக்கள் முன்னணி கட்சித் தலைவர்களும் ஆதரவாளர்களும்.

5. மேற்குறித்த எந்த வகுதியிலும் அடங்காத எதையும் எதிர்மறையாக நோக்கி விமர்சிக்கும், எல்லாந் தெரிந்தவர்களாகத் தம்மை எண்ணிக்கொண்டிருக்கும் தனிநபர்கள்.

இவர்களைவிட எதிர்க்காமலும் ஆதரிக்காமலும் புதிய அணுகுமுறையை விட வழமையான முறை எப்போதும் வசதியும் பாதுகாப்பானதும் என்ற மனநிலையில் இருக்கும் பெரும் எண்ணிக்கையானவரகள்.

முதலாவது வகுதியினர் தென்னிலங்கை கட்சிகளின் தமிழ்ப் பகுதிக்கான முகவர்கள். அவர்கள் எப்போதும் தங்கள் கட்சிகளின் வரையறைக்குள் நின்று கட்சியையும் தங்களையும் பலப்படுத்த முனைபவர்கள். தமது மக்கள் நலனை விட கட்சியின் நலனுக்கு முன்னுரிமை அளிப்பவர்கள். அங்கஜன், விஜயகலா மகேஸ்வரன், உமாசந்திரா பிரகாஷ் போன்றவர்கள் இவ்வகுதிக்கான சில எடுத்துக்காட்டுகள்.

இரண்டாவது வகுதியினர் தம்மைத் தனித்துவமான தமிழர் கட்சியாகக் காட்டிக் கொண்டு முதாலாவது வகையினர் போல தென்னிலங்கைக் கட்சிகளின் முகவர்களாகச் செயற்படுவர்கள். ஆனால் இவ்வகையினர்க்கு பேரம் பேசும் வாய்ப்புள்ளது. இவர்களும் பதவி, அதிகாரம் போன்றவற்றைத் தக்க வைக்க விரும்புவதால் தமது மக்கள் நலனைவிட அரச நலனுக்கு முன்னுரிமை கொடுப்பவர்களே. டக்ளஸ் தேவானந்தா, சந்திரகாந்தன் (பிள்ளையான்), வியாழேந்திரன் போன்றோர் இவ்வகுதிக்கான சில எடுத்துக் காட்டுகள். சமத்துவக்கட்சித் தலைவர் மு.சந்திரகுமார் இந்த வகுதிக்குள் அடங்குவாரா இல்லையா என்பது எதிர்காலத்தில் தெரியும்.

தமிழ்த் தேசிய கூட்டமைப்பின் சில தலைவர்கள் இந்த வகுதியினுள் அடங்குவர். ஆனால் இவர்கள் அரசுடனான அணுகுமுறையில் ஒரே தன்மையரல்லர். அரச நலனைவிட தமிழர் நலனுக்கு முக்கியம் கொடுப்பவர்கள் அல்லது அவ்வாறு வெளிப்படையாகக் காட்டிக் கொள்பவர்கள். இவர்களுள் சுமந்திரனும் அவரது அணியினரும் தமிழ் பொது வேட்பாளர்களைத் தீவிரமாக எதிர்ப்பவர்கள். அதேவேளை சிறிதரன் அணியினர் ஆதரவு நிலைப்பாட்டில் இருப்பவர்கள். செல்வம் அடைக்கலநாதன், சித்தார்த்தன் போன்ற தலைவர்கள் தற்போது தமிழ்த் தேசியப் பொதுக் கட்டமைப்பின் பங்காளிகள். ஆனால் இவர்களின் கட்சித் தலைவர்கள், உறுப்பினர்கள் சிலர் எதிர்நிலைப்பாட்டை வெளிப்படுத்தி வருவதையும் காணலாம்.

தென்னிலங்கைக் கட்சிகளின் பிரதிநிதிகளும் அரசாங்கத்துடன் கூட்டுச் சேரந்துள்ள கட்சித் தல்லைவர்களும் தமிழ்ப் பொது வேட்பாளரை எதிர்ப்பதில் ஆச்சரியப்படுவதற்கு ஒன்றுமில்லை. ஏனென்றால் அவர்களின்

> தமிழ்த் தேசிய முன்னணி தமிழ்த் தேசியம் சார்ந்து அரசியல் செய்வது உண்மையானால் தமிழ்ப் பொது வேட்பாளரை எதிர்க்க வேண்டிய அவசியமில்லை. எதிர்க்குமானால் அது கட்சி நலன் சார்ந்த ஒன்றாகவே கருதப்படும்

வாழ்வும் வளமும் தென்னிலங்கை வேட்பாளருக்குத் தேடிக்கொடுக்கும் வாக்குகளின் எண்ணிக்கையிலேயே தங்கியுள்ளது. அதற்காக அவர்கள் எதையும் பேசுவார்கள். எதையும் செய்வார்கள். ஆனால் தமிழ்த் தேசியம் பேசிக் கொண்டு எதிர்ப்பவர்கள் முன்வைக்கும் கருத்துகளின் உண்மைத்தன்மை அல்லது நியாயத்தன்மை தொடர்பாகநோக்குவது அவசியமானது.

அவற்றில் ஒன்று தமிழ்ப் பொது வேட்பாளர் தோற்றால் அது தமிழ் மக்களுக்குப் பாதகமாக மாறிவிடும் என்பது. பொதுவேட்பாளர் ஜனாதிபதியாக வருவதற்கு நிறுத்தப்படவில்லை என்பது தெளிவான விடயம். ஆனால் இதில் அவர்கள் கருதும் தோல்வி என்பது, கணிசமான வாக்குகளைத் தமிழ்ப் பொது வேட்பாளர் பெறாது விட்டால் அது தமிழ் மக்களுக்குப் பாதகமாக மாறாதா? என்பதே. அது நியாயமான ஒரு கேள்விதான். ஆனால் இது பங்காளராக அன்றிப் பார்வையாளராக நின்று கேட்கும் ஒரு கேள்வி. இவ்வாறான கேள்வியை முன்வைக்கும் சுமந்திரன் போன்றவர்கள் நாடாளுமன்றத் தேர்தலில் தோற்றுவிடுவேன் என்று எண்ணி பணத்தையும் உழைப்பையும் வழங்காமல் இருந்தார்களா? இல்லையே. வெற்றி பெறுவோம் என்ற நம்பிக்கையில்தானே இவர்கள் அத்தேர்தலில் போட்டியிட்டார்கள். அதேபோல பொது வேட்பாளரின் நோக்கத்தையும் வெற்றியடையச் செய்யலாம் என்ற நம்பிக்கை ஏன் வரவில்லை. பொது அமைப்புகளும் அரசியல் தலைவர்களும் ஒன்றுபடும்போது நாமும் அவர்களுடன் இணைந்து மக்களுக்கு நம்பிக்கையூட்டி பொதுவேட்பாளரை வெற்றிபெறச் செய்வோம் என்று ஏன் எண்ணமுடியாம இன்று பொதுவேட்பாளர் என்பது நல்ல சிந்தனை என்று கூறுபவர்கள் அது நடைமுறைக்குச் சரிவராது என்று கூறுவதன் நோக்கம் என்ன? நல்ல சிந்தனை எனில் அதனை மக்கள் மத்தியில் எடுத்துச் சென்று வெற்றியடையச் செய்வதுதானே அரசியல் தலைவர்களதும் சமூகத் தலைவர்களதும் பணி. அதைவிடுத்து அதனை எதிர்ப்பதன் காரணம் என்ன? அவர்களின் இயலாமையா அல்லது வேறு அபிலாசைகளை அவர்கள் கொண்டுள்ளார்களா?

வேறு சிலர் இதனை மக்கள் விரும்பவில்லை என்று கூறி நழுவப் பார்ப்பதையும் அவதானிக்க முடிகிறது. இவ்வாறு கூறுபவர்கள் இந்த விடயத்தை எத்தனை பேரிடம் கொண்டு சென்று புரியவைத்தார்கள்? எத்தனை விளக்கக் கலந்துரையாடல்களை மேற்கொண்டார்கள்? மக்களுக்கு எந்தத் தெளிவையும் வழங்காது நம்பிக்கையூட்டாது மக்கள் விரும்பவில்லை எனக்கூறுவது தலைவர்களுக்குப் பொருத்தமானதா? ரெலோ கட்சி தமிழ்த் தேசியப் பொதுக்கட்டமைப்பின் பிரதான பங்காளி. ஆனால் அக்கட்சியின் மூத்த உறுப்பினரும் நாடாளுமன்ற உறுப்பினருமான வினோ மக்கள் மனமறிந்ததால் கட்சியின் முடிவுக்கு எதிரான நிலைப்பாட்டை வெளிப்படுத்துவதாகக் கூறுகிறார். அப்படியானால் அவரது கட்சி மக்களின் மனமறியாது தவறான முடிவெடுத்துவிட்டது என்று கூறுகிறாரா? அல்லது சிலர் ஐயப்படுவதுபோல ரெலோ இரட்டை நிலைப்பாடில் உள்ளதா? தமிழ் மக்கள் எல்லோரும் ஆயுதப் போராட்டத்துக்கு ஆதரவு தெரிவித்த பின்னரா போராளிகள் ஆயுதத்தைக் கையில் எடுத்தார்கள்? இல்லையே. ஆனால் அதன்பின்னர் அப்போராட்டத்தின் பின்னால் மக்கள் ஒன்று திரளவில்லையா?

அடுத்தது வெற்றி பெறக்கூடிய தென்னிலங்கை வேட்பாளருக்கு ஆதரவு வழங்குவதன் மூலம் எமது உரிமைகளைப் பெறுவதே சிறந்தது என்பது. இதுவும் நியாயமான ஒன்றுதான். தமிழ் மக்கள் அதற்கு எதிராக இதுவரை இருந்ததில்லையே. யாருக்குத் தமிழ் மக்கள் ஆதரவு வழங்கினால் வெற்றி கிடைக்கும்? வெற்றி பெறுபவர் தமிழ் மக்களின் ஆகக் குறைந்தபட்ச கோரிக்கையை நிறைவேற்றத் தயாராக உள்ளாரா? அவர் நிறைவேற்றுவார் என்பதற்கு உத்தரவாதம் உண்டா? பொது வேட்பாளரை எதிர்க்கும் எவரும் இக்கேள்விகளுக்கு உறுதியான பதிலைத் தருவார்களா? வெற்றி பெறுவார். தருவார் என்றுதானே தமிழ் மக்கள் இதுவரை தமது வாக்குகளை வழங்கினார்கள். நடந்தது என்ன? இருவர் தோற்றனர், ஒருவர் வென்றார். வென்றவர் என்ன செய்தார்? அவருக்கு ஆதரவளியுங்கள் என்று கேட்டவர்களே இறுதியில் அவர்கள் ஏமாற்றிவிட்டார்கள் என்று சொல்லவில்லையா? இதுதானே காலங்காலமாக நடந்து வருகிறது. தமிழ் மக்களின் குறைந்தபட்சக் கோரிக்கையான சமஷ்டியைத் தருவதாகக் கூறுவதுடன் அதற்கான உத்தரவாதத்தை மூன்றாம் தரப்பின் முன்னிலையில் தரும் வேட்பாளரின் வெற்றிக்குத் தமிழ்மக்கள் உழைக்க எப்போதும் தயாராகவே உள்ளனர். முடிந்தால் பொதுவேட்பாளரை எதிர்க்கும் திராணியுள்ள ஒரு தலைவர் இதனை செய்யட்டும். அப்போது தமிழ்ப் பொது வேட்பாளர் போட்டியிலிருந்து தானாகவே விலகிவிடுவார்.

தமிழ்த் தேசிய முன்னணி பொது வேட்பாளரை எதிர்ப்பதற்கு கட்சி அரசியல் காரணமாக இருக்குமேயன்றி

(14ஆம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# வாசகர் மடல்:

## நோயை மட்டும் சொல்வதல்ல, பரிகாரமும் சொல்லவேண்டும்!

09-08-2024 ம் திகதிய ஈழநாடு பத்திரிகையின், ஊர்க்குருவியாரின் "இப்படியும் நடக்கிறது" வாசித்தேன்.

வாசித்தவுடன் என் மனதில் கிளர்ந் தெழுந்த சில மனத்தாக்கத்தை தங்க ளோடு பகிர்ந்து கொள்ள விரும்பு கின்றேன்.

"அரசியல் ஆய்வாளர்கள் தமது ஆய்வுகளுடன் நின்றுவிட வேண்டும், அரசியல் விடையங்களை நாங்கள் அரசியல்வாதிகள் பார்த்து கொள்கி றோம்" இவ்வாறு எடுத்தியம்பினார் மறைந்தும் மக்கள் மனதில் நிறைந்திரு க்கும் தமிழர் அரசியலில் தோல்வியுற்ற அமரர் சம்மந்தன் ஐயாவினால் தமிழர் அரசியலுக்கு அறிமுகம் செய்யப்பட்ட, பிரபல்யமான அப்புக்காத்தும், அரசி யல்வாதியுமான அண்ணர் சுமந்திரனார்.

அரசியல் ஆய்வாளர்கள் ஆராய்ந்து எழுதும் புலனாய்வு கட்டுரைகளில், அரசியல் விடையங்களும் அடங்கும்.

நோயை மட்டும் சொல்லி விட்டு, அதற்கு பரிகாரமாக மருந்து சொல்லா மல் போகும் பரியாரி மாதிரி இல்லாமல், மருந்தும் சொன்னால்த்தான், பரியாரி பலமான பரிச்சையமானவராக இருப் பார் என்று அண்ணருக்கு புரியாமலோ அல்லது தெரியாமலோ போய்விட்டது என்பதை நினைக்கின்றபோது பரிதாப மாக இருக்கின்றது.

ஊர்க்குருவியாரும், ஒரு இலேசுப் பட்ட ஆழில்லை, ஏனென்றால் இவ ரும்கூட "இப்படியும் நடக்கிறது" க்குள் உள்நுழைந்து அரசியல் ஆய்வுகளையும், அதற்கான விடையங்களையும் நாசுக்காக எழுதுவதில் வல்லவர், அதனால்தான் என்னவோ ஊர்க்குருவியாருக்கும் அண்ணரின் பேச்சு உறைத்து விட்டது போலும்.

ஒரு ஜனநாயக நாட்டிலே அரசியல் ஆய்வாளன் (ஊடகவியலாளன்) தன் எழுத்துக்களால் ஆட்சியையே மாற்றிய மைக்கும் வல்லமையுடையவன் இந்தியா வில் மறைந்த "துக்ளக்" ஆசிரியர் "சோ" வின் அரசியல் ஆய்வும் கூடிய விடயங்களும் சுமந்து வந்த கட்டுரைகள் கண்டு ஆடிப்போன அரசியல்வாதிகள் பலர்.

எம்மத்தியில் உலாவரும் அதிசிறந்த ஊடகவியலாளர்களை வரிசைப்படுத்திய ஊர்க்குருவியாருக்கு, அரசியல் ஆலோ சகர், மதி உரைஞர் மறைந்த அன்ரன் பாலசிங்கம் அவர்களும் முன்னாள் ஊடகவியலாளர்தான் என்பது, ஏனோ? ஞாபகத்துக்கு வரவில்லை.

ஊடகவியலாளர் அ. நிக்சன் அவர் களின் முகநூல் பதிவை மையமாக கொண்டு , நல்ல சூடான, தக்க கேள்விகள் கேட்டிருக்கிறியள்.

இதுகாலவரை அரசியல்வாதியை எதிர் அரசியல்வாதிதான், தொலைக் காட்சி ஒன்றில் நேரடி விவாதத்துக்கு வரும்படி அழைத்ததை பார்த்திருக்கி றோம்.

ஒரு ஊடகவியலாளன், ஒரு அப்புக் காத்து அரசியல்வாதியை பார்த்து நேரடி விவாதத்துக்கு வரும்படியும், ஊடகமொழியில் சரி எது பிழை எது, என விளக்குவதற்கு முடியும் என்றி ருப்பது, ஊடகவியலாளன் அ. நிக்சன் அவர்களின் உளமார்ந்த துணிவை கண்டு மெச்சாமல் இருக்க முடியாது.

ஒருகாலத்தில், அப்புக்காத்து அரசியல்வாதிகள் எது சொன்னாலும் தலையாட்டி, கைதட்டி அவர்களுக்கே வாக்களித்து, அவர்களை வாழ வைத்து, அப்பாவி மக்கள் ஏமாந்தது போதும்.

துணிகரமான ஊடகவியலாளன் அ. நிக்சன் போன்றோரின் அரசியல் ஆய்வு களும், விடையங்களும், அப்பாவி மக்களை சிந்தித்து செயலாற்ற தூண்டும் என்பது எனது திடமான எண்ணம்.

- கே. அருண்
(மொன்றியால், கனடா)

### தமிழக நடிகர் நாசர் அவர்களிடமிருந்து கிடைத்த மடல் இது...

எண்ணமும் எழுத்தும்
மண்ணும் மக்களுமாய்
கையில் தவழ்ந்திடும்
"ஈழநாடு"
நாடு நாளாக, பல்லாண்டு தழைத்திட
இன்னும் நானாயிரம் பிறைகள் காண்பதாக!
அன்போடு - நாசர்
25-07-24



உங்கள் கேள்விகளை அனுப்பவேண்டிய முகவரி
வியுக்தியார் பதில்கள்
ஈழநாடு, 707 ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.
viyukthiyar@gmail.com

# வியுக்தியார் பதில்கள்

**எம். கௌதம், அமிர்தகழி, மட்டக்களப்பு**

**கேள்வி:** தமிழ்ப் பொதுவேட்பாளராக இலங்கை தமிழ் அரசுக் கட்சியின் பா. அரியநேத்திரன் அறிவிக்கப் பட்டுள்ளார். அரியநேத்திரன் இலங்கை தமிழ் அரசுக் கட்சியின் மட்டக்களப்பு மாவட்ட தலை வராகவும் மத்திய குழு உறுப்பினராகவும் உள்ளார். இந்த நிலையில் அவர் தமிழ்ப் பொது வேட்பாளராக போட்டியிடுவது குறித்து கட்சி தலைமைக்கு அறிவிக்க வில்லை என்றும் கூறப்படுகின்றதே. அது தவறான முன் உதாரணம் தானே?

**வியுக்தியார்:** கட்சிக்கு ஒரு நடைமுறை இருந்து, அதிகம் ஏன் கட்சிக்கு ஒரு தலைவர் இருக்கிறார் என்ற எண்ணமாவது அந்தக் கட்சியில் உள்ள எவருக்கும் இருப்பதாகத் தெரியவில்லையே. பொதுவேட்பாள்ர் ஒருவரை இந்த தேர்தலில் நிறுத்தவேண்டும் என்று தமிழ் தேசியக்கட்சிகளும், சிவில் சமூக அமைப்புக்களும் விரும்பியபோது, தமிழ் அரசு கட்சியில் இரண்டு நிலைப்பாடு வெளிப்பட்டது. அதுகும் ஜனநாய ரீதியில் சரியானதுதான். ஆனால், அதுபற்றி இன்றுவரை கட்சியாக அது தீர்மானம் எதனையும் எடுக்கவில்லை. அப்படி எடுத்திருந்தால், கட்சி தீர்மானத்தை அவர் மீறியதாக கொள்ளலாம். ஆனால் அப்படி ஒரு தீர்மானம் எடுக்கப்படுவதற்கு முன்னதாவே கட்சியில் உள்ள ஒருவர், அதற்கு எதிராக களம் இறங்கியதுகூட தவறானது இல்லை, ஆனால் தான் அதனை கடைசி வரை எதிர்ப்பேன் என்றும் பொதுவேட்பாளருக்கு எதிராக பிரச்சாரம் செய்வேன் என்றும் அறைகூவல் விடுத்ததும் கட்சி கட்டுப்பாட்டை மீறிய செயல்தான். அரியநேந்திரன் செய்தது தவறு என்பவர்கள், இதனையும் தவறு என்று சொல்கின்ற திராணியற்ற வர்கள் என்றால், அவர்களைப்பற்றி யாரும் கருத்தில் எடுக்கவேண்டியதில்லையே.

**எம். அகிலேஸ்வரன் சித்தன்கேணி.**

**கேள்வி:** சுற்றுலாத்துறை அமைச்சர் ஹரின் பெர்னாண்டோ மற்றும் தொழில் மற்றும் வெளிநாட்டு வேலைவாய்ப்பு அமைச்சர் மனுஷ நாணயக்கார ஆகியோரை ஐக்கிய மக்கள் சக்தி வெளியேற்றியது சட்டபூர்வமானது என்று உயர்நீதிமன்றம் தீர்ப்பளித்த தைத் தொடர்ந்து அவர்கள் இருவரும் எம்.பி. பதவி மற்றும் அமைச்சு பதவிகளை இழந்துள்ளனர். ஆனாலும் பதவியை துறப்பது பெரியவிடயமல்ல என்று அவர்கள் தெரிவித்துள்ளனரே. தேர்தல் நேரத்தில் இப்படி பதவி இழந்தது அவர்களுக்கு மகிழ்ச்சிக்குரியதாக இருந்திருக் குமா?

**வியுக்தியார்:** இருவருமே தத்தம் அமைச்சு பதவியை வைத்துக்கொண்டு, தேர்தலில் ரணிலுக்கு அரச செல வில் பிரச்சாரம் செய்தவர்கள்தான். இஸ்ரேலுக்கு ஐம்பதாயிரம் பேரை வேலைக்கு அனுப்புகின்றேன் என்று கிராமம் தோறும் பதிவுகளை மேற்கொண்டவர் மனுஷ. ரணில் வெற்றிபெற்றால் ஜனவரியில் இவர்கள் வேலைக்கு அனுப்பப்படுவார்கள் என்று அவர் கூறியதும், தேர்தல் பிரச்சாரம்தான். இப்போது அவர் கள் பதவி இழந்திருப்பது நிச்சயம் அவர்களுக்கு இழப்புத்தான். நல்லவேளை, பொலிஸ்மா அதிபரை பதவியிலிருந்து இடைநிறுத்திவிட்டு பதில் பொலிஸ்மா அதிபரை நியமிக்குமாறு உயர்நீதிமன்றம் சென்னபோது அதனைச் செய்யாத ரணில், இந்த தீர்ப்பையும் கண்டுகொள்ளமாட்டாரோ என்று மக்கள் நினைத்தி ருப்பார்கள். ஆனால் அவர் அதனை ஏற்றுக்கொண்டு அவர்களை பதவியிலிருந்து நீக்கியிருப்பது சற்று ஆறு தல் தருகின்றது.

**கந்தையா முகுந்தன் சுவாமியார் வீதி, கொழும்புத்துறை.**

**கேள்வி:** தமிழ் தேசியப் பொதுக்கட்டமைப்பின் ஜனாதிபதி வேட்பாளராக பா. அரியநேந்திரன் தெரிவு செய்யப்பட்டிருப்பதை பலரும் விமர்சனம் செய்து வரு கின்றனர். அவர் பொருத்தமான வேட்பாளர் என நீங்கள் நினைக்கின்றீர்களா?

**வியுக்தியார்:** அவர் இந்த தேர்தலில் போட்டியிடுவது வெற்றிபெற்று இந்த நாட்டின் ஜனாதிபதியாக பணியாற் றுவதற்கு இல்லையே. இந்த தேர்தலில் தமிழ் மக்கள் தமது ஒற்றுமையை வெளிப்படுத்தவும், இந்த நாட்டில் புரையோடிப்போன இனப்பிரச்சினைக்கு தமிழ் மக்கள் ஏற்றுக்கொள்ளக்கூடிய தீர்வு ஒன்று காணப்பட வேண்டும் என்பதை தமிழ் மக்கள் ஒற்றுமையாக ஒரே குரலில் சொல்வதற்காகவே அவர் போட்டியிடுகின்றார். அவர் வேட்பாளராக அறிவிக்கப்பட்ட பின்னர் விடுத்த அறிவிப்பு ஒன்றே அவர் இந்த வேட்பாளராக போட்டி யிட தகுதியானவர் தான் என்பதை பறைசாற்றிவிட்டதே.

**இரா. ஜெயரூபன், பூந்தோட்டம், வவுனியா.**

**கேள்வி:** நாட்டை வங்குரோத்து நிலையிலிருந்து மீட்பதற்கான நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதால், எதிர்வரும் ஜனாதிபதித் தேர்தலில் மக்கள் தங்களுக்கு விருப்பமான தீர்மானம் ஒன்றை எடுக்க முடியும் என ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தெரிவித்துள்ளாரே. அவர் என்ன சொல்ல வருகிறார் என்று புரியவில் லையே?

**வியுக்தியார்:** நாட்டை வங்குரோத்து நிலையிலிருந்து மீட்பதற்கான நடவடிக்கை தான் எடுக்கப்பட்டிருக்கின் றதே தவிர, நாடு வங்குரோத்து நிலையிலிருந்து இன்ன மும் மீட்கப்படவில்லை என்கிறார். அதாவது மீட்பதற் கான நடவடிக்கையை தான் எடுத்திருப்பதால், தான் மீண்டும் ஆட்சிக்கு வராவிட்டால், நாடு மீண்டும் அதல பாதாளத்திற்கு சென்றுவிடும் என்பதால் மக்கள் தன்னையே தெரிவுசெய்யவேண்டும் என்கிறார் என்று தான் நினைக்கின்றேன்.

**எஸ். செந்துஜன், ராசவீதி, கோப்பாய்.**

**கேள்வி:** மக்களால் நிராகரிக்கப்பட்ட தரப்பினரை மீண்டும் ஆட்சியமைக்க இடமளிக்கக்கூடாது என சிறீ லங்கா சுதந்திர கட்சியின் பொதுச் செயலாளர் தயாசிறி ஜயசேகர தெரிவித்துள்ளாரே.

**வியுக்தியார்:** அவர் யாரைச் சொல்கிறார் என்பது தெரியவில்லை. அவரையும் அவரது கட்சியையும் மக்கள் நிராகரித்து பல வருடங்களாகிவிட்டனவே. சுதந்திரக்கட்சியிலேயே எத்தனை பிரிவுகள் இருக்கின் றன என்பது கூட அவருக்கு தெரியுமோ தெரியவில்லை. அது சரி, யாரை ஆட்சியில் அமர்த்துவது என்பதையும் இவரோ அல்லது இவரோடு இருக்கின்ற ஒருசிலரோ தீர்மானிக்க முடியாதே. அதனைக்கூட மக்கள் தானே தீர்மானிப்பார்கள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வீழ்ச்சியுறும் பங்களாதேஷ் பொருளாதாரம்! மாணவர் எழுச்சியும் இராணுவ ஆட்சியும்:

**ஐங்கரன் விக்கினேஸ்வரா**

தற்போதைய மாணவர் போராட்டம் தலைநகர் டாக்கா பல்கலைக்கழகத்தில் இருந்தே தொடங்கியது. இதே டாக்கா பல்கலைக் கழக வளாகம் 1971 மார்ச் 25, 26 ஆகிய இரு நாட்களும், மனித குலம் கண்டிராத படு கோரமான, இரக்கம் அற்ற இனப் படுகொலையைச் சந்தித்தது.

பல்கலைக்கழகத்தின் புகழ் பெற்ற பேராசிரியர்களும், மாணவர்களும் 1971 மார்ச் 26 அதிகாலை, பல்கலைக்கழக வளாகத்திலேயே, பாகிஸ்தான் ராணுவத்தினரால் படுகொலை செய்யப்பட்டனர்.

தற்போது பங்களாதேஷில் ஜூலை மாத தொடக்கத்தில் நாடு முழுவதும் பல வாரங்களாக மாணவர்களின் புரட்சி சொந்த நாட்டின் அரசையே ஆட்டங்காண வைத்துள்ளனர். அதேவேளை அந்நாட்டின் வர்த்தகம் மற்றும் பொருளாதாரம் கடுமையாகப் பாதிக்கப்பட்டு உள்ளது.

நீண்ட காலமாக பங்காளதேஷ் ஒரு வீழ்ச்சியடைந்த நாடாக அனைவராலும் பார்க்கப்பட்டது. ஒரு ஏழை நாடாக இருந்தது. ஆனால் இன்று ஆசியாவில் எழுச்சி பெறும் புலிகளில் ஒன்றாக கருதப்படுகிறது.


தென்னாசிய பொருளாதர வளர்ச்சியில் இந்தியாவுக்கு மேலாக உயர்ந்து வரும் நிலையில் இருந்த பங்களதேஷ் மீண்டும் பாரிய பொருளாதர வீழ்ச்சியை அடைந்துள்ளது.

**மாணவர் எழுச்சியும் பொருளாதர வீழ்ச்சியும்**

தற்போது நாட்டை விட்டு வெளியேறிய பிரதமர் ஷேக் ஹசீனா இவ்வருட ஜனவரி மாதம் நடந்த பொதுத் தேர்தலில் 41.8 வீத வாக்குகளைப் பெற்று மீண்டும் அதிகாரத்திற்கு வந்த பின், பல வருடங்களாகச் சர்ச்சையிலிருந்த வேலை வாய்ப்பு இடஒதுக்கீட்டை மீண்டும் அமுலாக்கம் செய்யும் முயற்சியில் இறங்கினார்.

இதன் விளைவே ஆட்சியை இழந்து, பிரதமர் ஷேக் ஹசீனா நாட்டை விட்டு வெளியேறி உள்ளார். மாணவர்களின் தொடர் போராட்டங்களால் பங்களாதேஷ் நாடு எப்போதும் இல்லாத வகையில் அமைதியற்ற நாடாக மாறியது. தினமும் பலி எண்ணிக்கை அதிகரித்து வந்தது.

இறுதியில் மாணவ போராட்டக்காரர்கள் பிரதமர் இல்லமான ஹணபபானுக்குள் நுழைந்து மொத்த வீட்டையும் சூறையாடி அழித்தனர். ஆயினும் இதற்கு முன்பே பங்களாதேஷ் பிரதமர் ஷேக் ஹசீனா தமது பதவியை ராஜினாமா செய்துவிட்டு, அவருடைய சகோதரி ஷேக் ரெஹானாவுடன் பங்களாதேஷை விட்டு ஹெலிகாப்டர் வாயிலாக இந்தியாவுக்குத் தப்பி வெளியேறி உள்ளார்.



இவை அனைத்திற்கு முக்கியமான காரணமாக இருந்தது அந்நாட்டில் அமலிலிருந்த சர்ச்சைக்குரிய வேலைவாய்ப்பு ஒதுக்கீட்டு முறை தான், இதை எதிர்த்து மாணவர் போராட்டங்களில் தொடங்கியது நாடு தழுவிய நெருக்கடியாக அதிகரித்தது.

**சர்ச்சைக்குரிய இடஒதுக்கீடு:**

சர்ச்சையிலிருந்த வேலைவாய்ப்பு இடஒதுக்கீட்டால், பங்களாதேஷ் முழுவதும் மாணவர்கள் எழுச்சியால் அரசியல் வன்முறை வெடித்தது. ஜூலை 31 வரையில் இந்த வன்முறை மூலம் பங்களாதேஷ் பொருளாதாரத்திற்கு 10 பில்லியன் டொலர் மதிப்பிலான இழப்பு ஏற்படும் என கணிக்கப்பட்டது.



இதனால் அந்நிய செலாவணி இருப்பு களை உயர்த்த போராடும் பங்களாதேஷ் நாட்டிற்கு 20 முதல் 40 பில்லியன் டொலர் வரையில் பாதிப்பு ஏற்பட கூடும் என எதிர்பார்க்கப் படுகிறது.

அரசாங்க வேலை ஒதுக்கீட்டிற்கு எதிரான மாணவர் போராட்டத்தை அடக்க ஊரடங்கு உத்தரவு மற்றும் இணைய முடக்கம் போன்றவற்றின் மூலம் பிரதமர் பங்களாதேஷ் பொருளாதாரத்தில் 10 பில்லியன் டொலர் தாக்கத்தை ஏற்படுத்தும் என மதிப்பிடப்பட்டது.

ஆனால் தற்போது நிலைமை மொத்த மாக மீறியுள்ளது. தற்போது ஆட்சி மாற்றம் ஏற்பட்டு ராணுவ ஆட்சி எழுந் துள்ளது.

**பொருளாதார வீழ்ச்சி:**

வளர்ந்து வரும் அபிவிருத்தியில் 455 பில்லியன் டொலர் பொருளாதாரம் கொண்ட பங்களாதேஷ், தற்போதய மாபெரும் பிரச்சனையில் இருந்து வெளியேறுவது பெரும் சிக்கலாக இருக்கும். மாணவர் போராட்டங்களால் தற்போது 40 பில்லியன் டொலர் வரையில் அந்நாட்டின் உற்பத்தித் திறன் பாதிக்கப் படும் எனக் கணிக்கப்பட்டு உள்ளது.

அத்துடன் பங்களாதேஷ் நாட்டின் அந்நிய செலாவணி கையிருப்பு குறைந்து ஒரு ஆபத்தான நிலையில் உள்ள வேளையில் அந்நாட்டின் அரசியலில் ஏற்பட்டு உள்ள சம்பவம் பெரும் அதிர்ச்சியை அந்நாட்டு தொழிலதிபர்களுக்குக் கொடுத்துள்ளது. ஜூன் மாதம் பங்களாதேஷ் நாட்டின் மொத்த அன்னிய செலாவணி கையிருப்பு 21.8 பில்லியன் மட்டுமே.

> தென்னாசிய பொருளாதர வளர்ச்சியில் இந்தியாவுக்கு மேலாக உயர்ந்து வரும் நிலையில் இருந்த பங்களாதேஷ் மீண்டும் பாரிய பொருளாதர வீழ்ச்சியை அடைந்துள்ளது. வளர்ந்து வரும் அபிவிருத்தியில் 455 பில்லியன் டாலர் பொருளாதாரம் கொண்ட பங்களாதேஷ், தற்போதய மாபெரும் பிரச்சனையில் இருந்து வெளியேறுவது பெரும் சிக்கலாக இருக்கும்.

பங்களாதேஷ் நாட்டின் அரசியல் எந்த அளவுக்கு வேகமாக சரி செய்யப் படுகிறதோ அந்த அளவுக்கு அந்நாட்டின் பொருளாதாரத்தில் உள்ள சரிவு குறைக்கப்படும் என்பது முன்னைய பாடமாகும்.

**இராணுவ ஆட்சியில் வங்கம்:**

தற்போது பங்களாதேசில் இராணுவ ஆட்சி அமலுக்கு வருவதாக இராணுவ தளபதி வாக்கர் உஸ்-ஜமான் அறிவித்துள்ளார்.


பங்களாதேஷில் அனைத்து பாடசாலை, கல்லூரிகள் மற்றும் பல்கலைக் கழங்கள் மூடப்பட்டுள்ள நிலையில், சமூக வலைதளங்களும் முடக்கப்பட்டுள்ளன. இதற்கிடையே, அந்நாட்டில் இடைக்கால அரசை இராணுவம் அமைப்பதாக இராணுவ தளபதி வக்கார் உஸ்-ஜமான் அறிவித்தார்.

பங்களாதேஷை விட்டு வெளியேறிய ஷேக் ஹசீனாவும் அவரது சகோதரியும் இந்தியாவில் தஞ்சமடைந்திருப்பதாக தகவல்கள் தெரிவிக்கின்றன.

ஷேக் ஹசீனாவின் தந்தை ஷேக் முஜிபுர் ரஹ்மான்தான் பங்களாதேஷ் நாட்டை உருவாக்கியவர். வங்கதேச விடுதலைக்கு காரணமான தேசத் தந்தை எனப் போற்றப்பட்டவர். ஆனால், பங்களாதேஷ் விடுதலையான சில ஆண்டுகளிலேயே முஜிபுர் ரஹ்மானும் அவரது குடும்பத்தினரும் சொந்த நாட்டு இராணுவத்தினராலேயே படுகொலை செய்யப்பட்டனர். அப்போது ஷேக் ஹசீனாவும் ரெஹானாவும் வெளிநாட்டில் இருந்ததால் உயிர் தப்பினர்.

**முஜிபுர் ரஹ்மான் சிலை உடைப்பு:**

தற்போது ஷேக் ஹசீனாவும் ரெஹா



னாவும் சொந்த நாட்டு மக்களின் புரட்சியால் நாட்டை விட்டே தப்பி ஓடும் நிலைமை ஏற்பட்டுள்ளது. அத்துடன் வங்கத்தின் தந்தை முஜிபுர் ரஹ்மானின் சிலைகள் பல இடங்களில் தகர்க்கப்பட்டுள்ளன.

பங்களாதேஷ் நாட்டை உருவாக்கிய, இந்த நாட்டின் விடுதலைக்கு காரணமான தேசத் தந்தை எனப் போற்றப்படும் முஜிபுர் ரஹ்மானின் சிலைகள் பல இடங்களில் தகர்க்கப்பட்டமை என்பது மாணவர்களின் கோபாவேசத்தை வெளிப் படுத்தி உள்ளது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அம்புலன்ஸில் பெண்மீது பாலியல் துஷ்பிரயோகம்!

## இராணுவ சிப்பாய் கைது

கொழும்பு, ஓக. 11

விபத்தில் சிக்கி காயமடைந்த நபரொருவரை 1990 அம்புலன்ஸ் சேவை மூலம் மருத்துவமனைக்கு கொண்டு சென்ற இராணுவச் சிப்பாய் ஒருவர் அம்புலன்ஸில் இருந்த பெண் ஊழியரை பாலியல் துஷ்பிரயோகம் செய்துள்ளதாக ஹொரணை தலைமையக பொலிஸார் தெரிவித்தனர்.

சந்தேக நபரான இராணுவச் சிப்பாயின் சகோதரன் ஹொரணை பிரதேசத்தில் இடம்பெற்ற விபத்தில் சிக்கிப் படுகாயமடைந்துள்ளார்.

இதனையடுத்து, காயமடைந்தவரை 1990 அம்புலன்ஸ் சேவை மூலம் மருத்துவமனைக்கு கொண்டு செல்லும் போது சந்தேக நபரான இராணுவச் சிப்பாயும் அம்புலன்ஸில் ஏறியுள்ளார்.

இதன்போது, சந்தேக நபரான இராணுவச் சிப்பாய் அம்புலன்ஸில் இருந்த பெண் ஊழியர் ஒருவரை பாலியல் துஷ்பிரயோகம் செய்துள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

பின்னர், பாதிக்கப்பட்ட பெண் இது தொடர்பில் பொலிஸ் அதிகாரி ஒருவரிடம் தெரிவித்ததையடுத்து, சந்தேக நபரான இராணுவச் சிப்பாய் பொலிஸ் அதிகாரியையும் மருத்துவமனையின் அதிகாரி ஒருவரையும் அச்சுறுத்தியுள்ளார்.

இதனையடுத்து அந்த இராணுவச் சிப்பாய் கைது செய்யப்பட்டுள்ளார்.

பனாகொடை இராணுவ முகாமில் கடமையாற்றும் இராணுவச் சிப்பாயே இவ்வாறு கைது செய்யப்பட்டுள்ளார்.

சந்தேக நபர் மதுபோதையிலிருந்துள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர். (எ)

# வீதியை விட்டு விலகி நீண்டதூரம் பாய்ந்த ஜீப்

## சுற்றுலா வந்த மூவர் படுகாயம்

மட்டக்களப்பு, ஓக. 11

மட்டக்களப்பு, கரடியனாறு பொலிஸ் பிரிவுக்குட்பட்ட மரப்பாலம் பகுதியில் ஜீப் ஒன்று விபத்துக்குள்ளானதில் படுகாயமடைந்த மூவர் மருத்துவமனையில் சேர்க்கப்பட்டுள்ளனர்.

கண்டியிலிருந்து - மட்டக்களப்புக்கு சுற்றுலா வந்த குடும்பத்தினர் பயணித்த ஜீப் வாகனமே இவ்வாறு விபத்துக்குள்ளானது.



இதன்போது, ஜீப்பில் பயணித்த மூவர் படுகாயமடைந்த நிலையில் மகா ஓயா மருத்துவமனைக்கு கொண்டு செல்லப்பட்டுள்ளனர்.

குறித்த ஜீப் வாகனத்தில் ஐந்து பேர் பயணித்த நிலையில் விபத்தில் மூவர் படுகாயமடைந்துள்ளனர். இருவர் சிறு காயங்களுக்குள்ளாகியுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

அதிக வேகமாக வந்த வாகனம் வேகத்தை கட்டுப்படுத்த முடியாமல் நீண்ட தூரத்துக்கு பாய்ந்து சென்று விபத்துக்குள்ளாகியுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர். (எ)

# பேரம் பேசிப் பேசியே...

(11ஆம் பக்கத் தொடர்ச்சி)

இதனை புரிந்து கொள்ளாத சிலர், இவருக்கு எத்தனை வீத வாக்குகள் கிடைக்கும், முன்னைய தேர்தல்களில் இவருக்கு எத்தனை வாக்குகள் கிடைத்தன என்று கணக்குகளை காட்டி மக்களை குழப்ப முயல்கிறார்கள்.

அரியநேத்திரன் பொதுவேட்பாளராகத் தெரிவாகும்போது அவர் சார்ந்த தமிழரசுக் கட்சி பொதுவேட்பாளர் நிலைப்பாட்டில் எந்த ஒரு முடிவையும் எடுத்திருக்கவில்லை. ஆதலால், அவர் கட்சிக் கட்டுப்பாட்டை மீறினார் என்று எவரும் குற்றஞ்சாட்ட முடியாது. கட்சியின் தலைவர் மாவை சேனாதிராஜாவும் புதிதாக தலைவராகத் தெரிவான சிறீதரனும் பொதுவேட்பாளர் நிலைப்பாட்டை கொள்கை ரீதியாக ஏற்றுக் கொண்டவர்கள். சுமந்திரன், சாணக்கியன், சி.வீ.கே.சிவஞானம் ஆகியோரே இதனை எதிர்த்து வருபவர்கள்.

இன்று ஆகஸ்ட் 11ஆம் திகதி தமிழரசுக் கட்சி இவ்விவகாரம் தொடர்பாக முடிவெடுக்குமென அறிவித்துள்ளது. வடக்கும் கிழக்கும் இணைந்ததே தமிழர் தாயகம் என்னும் கொள்கையில் செயற்படும் அரியநேத்திரன் இதன் உறவுப்பாலமாகவும் தமிழ்த் தேசியத்தின் குறியீடாகவும் போட்டியிடுகிறார். இதற்கு எதிர்மாறாக இயங்குவோர் எவராயினும் சிங்கள தேசத்தின் அரசியல் ஏஜன்டுகளாகவே தமிழ் மக்களால் பார்க்கப்படுவர். இது தவிர்க்க முடியாதது. •

# தமிழ் பொது வேட்பாளரை...

(11ஆம் பக்கத் தொடர்ச்சி)

கொள்கையாக இருக்க முடியாது. சிறிலங்கா ஜனாதிபதி தமிழ் மக்களுக்கான வரல்லர். எனவே அவரைத் தெரிவதற்கான தேர்தலில் தமிழ் மக்கள் பங்குபற்றத் தேவையில்லை. அவர்களின் இவ்வாதம் ஏற்றுக்கொள்ளக் கொள்ளக்கூடியது ஒன்றுதான். இதை ரணிலுக்கோ, சஜித்துக்கோ, அனுரகுமாரவுக்கோ வாக்களிக்கக் கோரும் தரப்புகளுக்கு சொல்லவேண்டுமேயொழிய பொது வேட்பாளரை நோக்கியதாக இருக்க வேண்டிய அவசியமில்லை. ஏனெனில் தமிழ்ப் பொது வேட்பாளர் என்பவர் அவர்கள் கூறுவது போல சிங்களத் தலைவர் ஒருவருக்கு வாக்களிக்காமல் தடுக்கிறார். அத்துடன் அவர் யாருக்கும் விருப்பு வாக்ககுகளை அளிக்குமாறு கேட்கப் போவதில்லை. சமகாலத்தில் தமது அரசியல் உரிமை தொடர்பான விழிப்பையும் மக்களின் ஒன்றுபட்ட திரட்சியையும் அவர் ஏற்படுத்த முடியுமென நம்புகிறார். இதைத் தானே புறக்கணிப்பினூடாக அடைவதற்கு தமிழ்த் தேசிய மக்கள் முன்னணி எதிர்பார்க்கிறது எனில் தமிழர்களின் எதிர்காலம் சார்ந்த சிந்தனையில் புறக்கணிப்பைவிட தமிழ்ப் பொது வேட்பாளர் மேலானதாக இருக்கும் அல்லவா? தமிழ்த் தேசிய முன்னணி தமிழ்த் தேசியம் சார்ந்து அரசியல் செய்வது உண்மையானால் தமிழ்ப் பொது வேட்பாளரை எதிர்க்க வேண்டிய அவசியமில்லை. எதிர்க்குமானால் அது கட்சி நலன் சார்ந்த ஒன்றாகவே கருதப்படும்.

# இரு வருட இடைவெளியில்...

(07ஆம் பக்கத் தொடர்ச்சி)

தந்தையான முதல் ஜனாதிபதி முஜிபுர் ரஹ்மானே. பங்களாதேஷ் விடுதலை போராட்டத்தில் பங்கேற்ற போராளிகளுக்கு அரசாங்க தொழில் வாய்ப்புகளில் கூடுதல் பங்கு ஒதுக்கப்பட்டது.

அந்த ஒதுக்கீடு பிறகு நாளடைவில் சுதந்திரப் போராளிகளின் வழித்தோன்றல்களுக்கும் நீடிக்கப்பட்டது. ஐம்பது சதவீதத்துக்கும் அதிகமான அரசாங்க தொழில்வாய்ப்புகள் சனத்தொகையின் வெவ்வேறு பிரிவினருக்கு ஒதுக்கப்பட்டது. அதில் 30 சதவீதம் சுதந்திரப் போராளிகளின் வழித்தோன்றல்களுக்கு கிடைத்தது. இதை ஆளும் அவாமி லீக் கட்சியின் ஆதரவாளர்களுக்கு வழங்கப்படும் ஒரு சலுகையாக மாணவர்களும் எதிர்க்கட்சிகளும் நோக்கின.

இந்த ஒதுக்கீடுகளுக்கு எதிர்ப்பு கிளம்பியதை அடுத்து 2018 ஆம் ஆண்டில் அந்த முறையை ஹசீனா ரத்துச்செய்தார். ஆனால் பங்களாதேஷ் மேல்நீதிமன்றம் பழைய ஒதுக்கீட்டு முறையை மீண்டும் நடைமுறைப்படுத்த கடந்த ஜூன் மாதம் உத்தரவிட்டது. நியாயமான ஒரு ஒதுக்கீட்டு முறை நடைமுறைப்படுத்த வேண்டும் என்று கோரிக்கை விடுத்த மாணவர்கள் வீதிப் போராட்டங்களில் இறங்கினர். மேல்நீதிமன்ற உத்தரவை எதிர்த்து ஹசீனா அரசாங்கம் உயர்நீதிமன்றத்தில் மேன்முறையீடு செய்தது. அது தொடர்பான விசாரணை ஆகஸ்ட் 7 ஆம் திகதி விசாரணைக்கு வரவிருந்தது. ஆனால் போராட்டங்கள் தணியவில்லை.

ஜூன் மாதம் தொடக்கம் இடம்பெற்றுவந்த போராட்டங்களை ஒடுக்குவதற்கு ஹசீனாவின் அரசாங்கம் மேற்கொண்ட கொடூரமான நடவடிக்கைகளே அதற்கு முக்கிய காரணம். அந்த தாக்குதல்களில் ஒரு மாதகாலத்துக்குள் 300இற்கும் அதிகமானவர்கள் பலியானார்கள். ஆயிரக்கணக்கானவர்கள் காயடைந்தனர். குறைந்தது 10 ஆயிரத்துக்கும் அதிகமானவர்கள் கைதுசெய்யப்பட்டு சிறையில் அடைக்கப்பட்டார்கள்.

மாணவர்களின் போராட்டம் நாளடைவில் பிரதமர் ஹசீனா பதவி விலக வேண்டும் என்று கோரும் நாடுதழுவிய பரந்த மக்கள் கிளர்ச்சியாக மாறியது. அதை அடக்குவதற்கு பொலிசார் மேற்கொண்ட நடவடிக்கைகளில் ஆகஸ்ட் 4 திகதி மாத்திரம் 150 க்கும் அதிகமானவர்கள் கொல்லப்பட்டனர். தலைநகர் டாக்காவுக்கு படையெடுத்த மக்கள் இலங்கையில் நடந்ததைப் போன்று பாராளுமன்றம் உட்பட அரசாங்க கட்டிடங்களை ஆக்கிரமித்தனர். தனது வாசஸ்தலத்தை மக்கள் முற்றுகையிடுவதற்கு முன்னதாக ஹசீனா பதவியைத் துறந்து இராணுவ விமானத்தில் இந்தியாவுக்கு தப்பிச் சென்றார்.

பதவி துறப்பதற்கு முன்னதாக நாட்டு மக்களுக்கு உரையாற்றுவதற்கு ஹசீனா விரும்பிய போதிலும், இராணுவம் அதற்கு அனுமதிக்கவில்லை. பாராளுமன்றத்தைக் கலைத்து [illegible] வில் பொதுத்தேர்தல் நடத்தப்படும் என்று அறிவித்திருக்கிறார்.

இலங்கையின் மக்கள் கிளர்ச்சியின் பின்னணியில் வெளிநாட்டுச்சதி இருந்ததாக அரசியல்வாதிகள் கூறினார்கள். தன்னைப் பதவிகவிழ்க்க மேற்கொள்ளப்பட்ட சதி குறித்து கோட்டாபய ஐந்து மாதங்களுக்கு முன்னர் ஒரு நூலை எழுதினார்.

பங்களாதேஷ் கிளர்ச்சியின் பின்னணியில் இருந்திருக்கக்கூடிய வெளிநாடுகள் குறித்து பல சந்தேகங்கள் கிளப்பப்படுகின்றன. எதிர்காலத்தில் ஹசீனாவும் அவ்வாறு ஒரு நூலை எழுதக்கூடும்.

பங்களாதேஷுக்கு விடுதலையைப் பெற்றுத்தந்த முஜிபுர் ரஹ்மானின் சிலைகள் தற்போதைய வன்முறைகளின் போது தகர்த்து வீழ்த்தப்படுகின்றன. இது மிகவும் வெறுக்கத்தக்க ஒரு செயலாகும்.

சிறைவாசம் உட்பட பல கொடுமைகளை அனுபவித்து விடுதலையைப் பெற்றுக்கொடுத்த முஜிபுர் ரஹ்மான் வெறுமனே மூன்று வருடங்களுக்கும் சற்று அதிகமான காலமே ஆட்சியில் இருந்தார். 1975 ஆம் ஆண்டு ஆகஸ்ட் 15 ஆம் திகதி இடம்பெற்ற இராணுவச்சதிப் புரட்சியின்போது அவரும் பெரும்பாலும் முழுக் குடும்பத்தவர்களும் இராணுவ அதிகாரிகளினால் படுகொலை செய்யப்பட்டனர். 28 வயதான ஹசீனாவும் சகோதரியும் அந்த நேரத்தில் ஐரோப்பாவில் இருந்ததால் தற்செயலாக உயிர்தப்பினர். இதுகாலவரையில் ஹசீனாவைக் கொலை செய்வதற்கு 19 முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டதாகக் கூறப்படுகிறது.

தந்தையாரின் அரசியல் மரபுக்கு களங்கத்தை ஏற்படுத்தும் வகையில் எதேச்சாதிகார ஆட்சியை நடத்திய ஹசீனா மீதான வெறுப்பை முஜிபுர் ரஹமானின் சிலைகளின் மீது போராட்டக்காரர்கள் காட்டுகிறார்கள். இலங்கையில் போர் வெற்றிக்கு ஏகபோக உரிமையை ராஜபக்சாக்கள் கோருவது போன்று பங்களாதேஷின் சுதந்திரத்தின் மரபின் பாதுகாவலர்களாக ஹசீனாவும் அவாமி லீக் கட்சியினரும் தங்களைக் காட்டிக்கொண்டனர். அதனால் சுதந்திரப் போராட்டத்தை ஒரு புராதன வரலாறாக மாத்திரமே தெரிந்து வைத்திருக்கும் இன்றைய இளஞ்சந்ததி முஜிபுர் ரஹமானின் பெருமையை புரிந்து கொள்ளாமல் நடந்துகொள்கிறது. வரலாற்றில் என்றுமே மறக்கப்பட முடியாத ஒரு மகத்தான தலைவரின் சிலைகள் இப்போது இடிபாடுகளுக்குள் கிடக்கின்றன.

எதேச்சாதிகார ஆட்சியாளர் ஒருவரின் வீழ்ச்சி தன்னியல்பாகவே ஜனநாயகத்தையும் முறைமை மாற்றத்தையும் கொண்டு வந்துவிடப் போவதில்லை என்பதற்கு அரபு வசந்தம் தொடக்கம் இலங்கை கிளர்ச்சி வரை பெருவாரியான படிப்பினைகள் எம்முன்னால் விரிந்து கிடக்கின்றன. பிந்திய பங்களாதேஷ் கிளர்ச்சியும் அவற்றில் ஒன்றா இல்லையா என்பதை தெரிந்து கொள்ளவதற்கு நீண்டநாட்கள் தேவையில்லை. •

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## த.தே.பொ...

தமிழ்த் தேசிய பொதுக்கட்டமைப்பில் அங்கம் வகிக்கும் தமிழ் மக்கள் கூட்டணி, ரெலோ, புளொட், ஈ. பி. ஆர். எல். எவ், தமிழ் தேசிய கட்சி, ஜனநாயக போராளிகள் கட்சி, தமிழ்த் தேசிய பசுமை இயக்கம் மற்றும் சிவில் அமைப்புகளை சேர்ந்த 7 பேருக்கும் இந்த அழைப்பு விடுக்கப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டது. (ஐ)

## தேர்தலில்...

குழுக்கூட்டம் இன்று ஞாயிற்றுக்கிழமை கட்சிப் பணிமனையில் நடைபெறவுள் ளது. இந்தக் கூட்டத்தில் ஜனாதிபதித் தேர்தலில் கட்சியின் நிலைப்பாடு குறித்து கலந்துரையாடப்படும். இதில் எட்டப்படும் முடிவு உடன் அறிவிக்கப் படும் என்றும் அவர் கூறினார்.

இதேவேளை, கட்சியின் மத்திய குழு உறுப்பினரான பா. அரியநேத்திரன் கட்சியின் முன் அனுமதி பெறாமல் பொது வேட்பாளராக போட்டியிடத் தீர்மானித்தது தொடர்பிலும் கலந்துரையாடப்படும் - என்றும் மாவை சேனாதிராசா தெரிவித்தார். (ஐ)

## வடக்கு...

பாராளுமன்ற உறுப்பினர்களுடன் இணைந்து அந்தப் பகுதிகளின் மக்களின் குறைகளை நிவர்த்தி செய்வதற்கும் இளைஞ ர்களுக்கு வாழ்வாதாரம் மற்றும் சிறந்த எதிர்காலத்தை வழங்குவதற்கும் நான் தயாராக உள்ளேன்.

“ஜனாதிபதித் தேர்தலில் வெற்றியை பொருட்படுத்தாது, வடக்கு - கிழக்கில் உள்ள குடிமக்களுக்கு ஒளிமயமான எதிர்காலம் இருப்பதை உறுதி செய்ய விரும்புகிறேன். இந்த மாகாணங்களை சர்வதேச வர்த்தக மையங்களாக மேம்படுத்தவும் விரும்புகிறேன். இது தொடர்பில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு எம். பிக்களுடன் பேச விரும்புகிறேன்”, என்றும் நாமல் ராஜபக்ஷ கூறியுள்ளார் என்று தெரிவிக்கப்பட்டது.

நாமல் தெரிவித்த விடயம் குறித்து, நாளை (இன்று) நடக்கும் இலங்கை தமிழ் அரசுக் கட்சியின் மத்திய குழுக் கூட்டத்தில் சக பாராளுமன்ற உறுப்பினர்களுடன் பேசுவேன் என்று நாமல் ராஜபக்ஷவுக்கு சுமந்திரன் எம். பி உறுதியளித்தார் என்றும் தெரிவிக்கப்பட்டது. (ஐ)

## தேர்தல்...

எமது சகோதர ஊடகமான டான் தமிழ்ஒளி தொலைக்காட்சிக்கு அளித்த நேர்காணலிலேயே அரியநேத்திரன் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

மேலும், ஜனாதிபதித் தேர்தலில் தமிழ் மக்களின் குறியீடாகவே நான் போட்டியிடுகின்றேன். எனது பணி ஜனாதிபதித் தேர்தல் முடிவடைந்ததும் நிறைவடைந்துவிடும். மீண்டும் நான் தேர்தல் அரசியலுக்கு வரப்போவதில்லை - இனி வருகின்ற பொதுத் தேர்தலிலோ அல்லது வேறு எந்தத் தேர்தலிலோ நான் போட்டியிடப் போவதில்லை.

தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியினதும் எங்களினதும் கொள்கை ஒன்றுதான். தென்னிலங்கை வேட்பாளர்களை புறக்கணிப்பதே. நாம் தமிழ் பொதுவேட்பாளரை முன்னிறுத்துகிறோம். அவர்கள் தேர்தலை புறக்கணிக்கிறார்கள் அவ்வளவுதான்.

தேர்தல் விஞ்ஞாபனத்தில் கூறப்படும் கொள்கையே எமது நிலைப்பாடு. எமது தேர்தல் அறிக்கை சமஷ்டியை முன்னிறுத்துவதாக அமையும். 13ஆம் திருத்தத்தையோ அல்லது 13 பிளஸையோ நாம் ஏற்கவில்லை என்றும் அவர் கூறினார்.

அரியநேத்திரன் பங்கேற்ற ஸ்பொட்லைற் நிகழ்ச்சியை இன்று ஞாயிற்றுக்கிழமை இரவு 7.00 மணிக்கு டான் தமிழ் ஒளி தொலைக்காட்சியில் காணமுடியும்.

## ரூ.1700...

சபையுடன் கலந்துரையாடி அதனை செயல்படுத்தத் தேவையான சட்டங்களை கொண்டுவர தான் தயாராக இருக்கிறார் என்றும் ஜனாதிபதி கூறினார்.

நேற்றைய தினம் கண்டியில் நடந்த கூட்டம் ஒன்றிலேயே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

மேலும், தோட்டத் தொழிலாளர்களுக்கு பல வருடங்களாக ஊழியர் சேமலாப நிதி வழங்கப்படவில்லை. அதனை வழங்கும் பணிகள், அடுத்த வருடத்தில் இருந்து ஆரம்பிக்கப்படும். தோட்டத் தொழிலாளர்களுக்கு, நாளொன்றுக்கு ஆயிரத்து 700 ரூபா சம்பளம் வழங்குவதற்கான அரசாங்கத்தின் தீர்மானத்துக்கு 7 பெருந்தோட்ட நிறுவனங்கள் இணக்கம் தெரிவித்துள்ளன - என்றும் கூறியிருந்தார். (ஐ)

## தலைநகரில்...

மனோகரா (வயது 61) என்பவரா வார். இவர் நாரஹன்பிட்டியை சேர்ந்தவராவார்.

இவரின் மரணத்துக்குக் காரணம் தெரியவரவில்லை. பிரேத பரிசோதனைக்காக சடலம் மருத்துவமனையில் ஒப்படைக்கப்பட்டுள்ளது.

அண்மையில், கொழும்பு - வோட் பிளேஸில் ஓட்டோவில் மர்மாக உயிரிழந்த நிலையில் சடலம் மீட்கப் பட்டது. பின்னர், அது கொலை என்பது விசாரணைகளில் தெரியவந்தமையும் குறிப்பிடத்தக்கது. (ஐ)

## நாகபட்டினத்தில்...

காங்கேன்துறை துறைமுகத்தை வந்தடைந்தது.

நாகபட்டினம் - காங்கேன்துறை இடையிலான பயணிகள் கப்பல் எதிர்வரும் 15ஆம் திகதி முதல் சேவையில் ஈடுபடவுள்ளது.

முன்னதாக, கடந்த வருடம் ஒக்ரோபர் 14 ஆம் திகதி இந்தக் கப்பல் சேவை ஆரம்பமான போதிலும் பல்வேறு காரணங்களால் இடைநிறுத்தப்பட்டமை குறிப்பிடத்தக்கது. (ஐ)

## ரணிலை...

ஜயரத்ன, ஜானக வக்கம்புர மற்றும் முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் மனுஷ நாணயக்கார ஆகியோரும் சந்தித்தனர். இதன்போதே மகிந்தானந்த அளுத்கமகே மேற்கண்டவாறு தெரிவித்தார்.

இதன்போது, ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவுக்கு ஆதரவாக அணிதிரளும் முன்னாள் மாகாண சபை உள்ளூராட்சி உறுப்பினர்களின் அரசியல் எதிர்காலத்தை நாம் பாதுகாப்போம் என்றும் அவர் இதன்போது கூறியிருந்தார். (ஐ)

## சோழர்...

கூறப்படுகின்றது.

எனினும், இந்தத் திருட்டு தொடர்பில் ஆலய நிர்வாகத்தால் எந்தவொரு முறைப்பாடும் செய்யப்படவில்லை என்றும் குற்றஞ்சாட்டப்படுகின்றது.

இந்த விவகாரம் தொடர்பில் மாவட்ட செயலரின் கவனத்துக்குக் கொண்டு சென்ற பக்தர்கள், பொலிஸ் முறைப்பாடும் அளித்துள்ளனர். இதையடுத்து பொலிஸார் விசாரணைகளை ஆரம்பித்துள்ளனர்.

இதனிடையே, தாலி திருட்டு தொடர்பில் கிழக்கு ஆளுநரின் கவனத்துக்கும் கொண்டு செல்லப்பட்டது. அவரும் இது விடயத்தில் தலையிட்டு பொலிஸாருக்கு பணிப்புரைகளை வழங்கியுள்ளார் என்று தெரிய வருகின்றது.

இந்தத் தாலி திருட்டுப் போன விவகாரம் பொதுமக்களிடையே பலவித குழப்பங்களை ஏற்படுத்தியுள்ளது. (ஐ)

# பலவீனமான ஒப்பந்தங்களை நாம் அனுமதிக்கவே முடியாது

## எதிர்க்கட்சித் தலைவர் சஜித்

கொழும்பு, ஓக. 11

நாட்டின் பொருளாதாரம் சுருங்கியுள்ளதாலேயே அத்தியாவசிய பொருட்களுக்கான வரிசைகள் இல்லாமல் போயுள்ளன. மாறாக மக்களின் சுமைகள் குறைக்கப்படவில்லை. சர்வதேச நிதி நிறுவனங்களுடன் இணைந்து செயல்பட வேண்டும் என்பதற்காக, பலவீனமான ஒப்பந்தங்களை ஏற்றுக் கொள்ள அனுமதிக்க முடியாது என்று எதிர்க் கட்சி தலைவர் சஜித் பிரேமதாஸ தெரிவித்தார்.

மொனராகலை மாவட்டத்தில் நேற்று நடத்திய பௌத்த பிக்குகள் மாநாட்டிலேயே அவர் இவ்வாறு கூறினார்.

சர்வதேச நாணய நிதியத்தின் ஒப்பந்தத்தைத் தொடர்ந்தும் முன்கொண்டு செல்லாவிட்டால் மீண்டும் வரிசை யுகம் ஏற்படும் சில தலைவர்கள் கூறிக் கொண்டிருக்கின்றனர். பொருளாதாரம் மங்கியுள்ளதாலேயே வரிகளும் நீக்கப்பட்டுள்ளன. மக்களின் வாழ்க்கை முறைமையும் சுருங்கியுள்ளது. நாட்டின் பொருளாதார வேகமும் வீழ்ச்சியடைந்துள்ளது.

மக்களால் அவர்களின் தேவைக்கு ஏற்ப கொள்வனவு செய்ய முடியாத நிலைமை காணப்படுகிறது. உற்பத்தியும் செய்யப்படுவதில்லை. மக்களுக்கு மீதப்படுத்துவதற்கு எதுவும் இல்லை. பொருளாதாரத்தைச் சுருக்கி வறுமையை அதிகரித்து மக்கள் மீது சுமைகளைச் சுமத்தி எவருக்கும் வரிசைகளை இல்லாமல் செய்ய முடியும்.

மக்களுக்குச் சிறந்த வாழ்க்கையுடனேயே வரிசை யுகத்தை நிறைவு செய்ய வேண்டும். சர்வதேச நிதி நிறுவனங்களுடன் இணைந்து வேலை செய்ய வேண்டும் என்பதில் மாற்றுக் கருத்து இல்லை. ஆனால், அவற்றுடன் இணைந்து செயல்பட வேண்டும் என்பதற்காகப் பலவீனமான ஒப்பந்தங்களை எம்மால் அனுமதிக்க முடியாது.

சமூகத்தில் பொருளாதாரம் ஸ்திரமடைந்துள்ளதாகக் கூறுகின்றனர். ஆனால் மக்களின் கைகளில் பணம் இல்லை. உற்பத்தி, விநியோகம், பாவனை, ஏற்றுமதி, இறக்குமதி என அனைத்தையும் நிறுத்தி விட்டு ஸ்திரமடைந்து விட்டதாகக் கூறுகின்றனர். எம்முடன் தொழிநுட்பக் குழு இருக்கிறது. அந்த குழுவுடன் இணைந்து நாட்டுக்கு நன்மை தரக்கூடிய மக்களின் சுமைகளைக் குறைக்கும் ஒப்பந்தத்தில் கையெழுத்திடத் தயாராகவுள்ளோம். புதிய ஒப்பந்தத்துக்குச் சென்று மக்களின் சுமைகளைக் குறைப்போம் - என்றார். (ஐ)

# ஜனாதிபதி தேர்தல் குறித்து 269 முறைப்பாடுகள் பதிவு!

கொழும்பு, ஓக. 11

ஜனாதிபதித் தேர்தல் தொடர்பில் இதுவரை 269 முறைப்பாடுகள் கிடைக்கப் பெற்றுள்ளன என்று தேர்தல்கள் ஆணைக்குழு தெரிவித்துள்ளது.

இதன்படி, தேர்தல் சட்டங்களை மீறியமை தொடர்பில் தேசிய தேர்தல் முறைப்பாட்டு முகாமைத்துவ நிலையத்திற்கு 189 முறைப்பாடுகளும், மாவட்ட தேர்தல் முறைப்பாட்டு முகாமைத்துவ நிலையத்துக்கு 77 முறைப்பாடுகளும் கிடைக்கப்பெற்றுள்ளன.

மேலும், மாவட்ட தேர்தல் முறைப்பாட்டு முகாமைத்துவ நிலையத்திற்கு வன்முறைச் சம்பவங்கள் தொடர்பில் ஒரு முறைப்பாடும் ஏனைய விடயங்கள் தொடர்பில் இரண்டு முறைப்பாடுகளும் கிடைக்கப்பெற்றுள்ளன என்றும் தெரிவிக்கப்பட்டது. (ஐ)

# ஜனாதிபதி தேர்தலில் போட்டியிட 27 பேர் கட்டுப்பணம் செலுத்தல்!

## தேர்தல்கள் ஆணைக்குழு தகவல்

கொழும்பு, ஓக. 11

ஜனாதிபதித் தேர்தலில் போட்டியிட இதுவரை 27 வேட்பாளர்கள் கட்டுப்பணம் செலுத்தியுள்ளனர். இதற்கமைய அங்கீகரிக்கப்பட்ட அரசியல் கட்சிகள் சார்பில் போட்டியிட 13 வேட்பாளர்களும், வேறு அரசியல் கட்சிகள் சார்பில் போட்டியிட ஒரு வேட்பாளரும், சுயேச்சையாக போட்டியிட 13 வேட்பாளர்களும் இவ்வாறு கட்டுப்பணம் செலுத்தியுள்ளதாக தேர்தல்கள் ஆணைக்குழு அறிவித்துள்ளது.

ஜனாதிபதித் தேர்தலுக்காக கட்டுப்பணம் செலுத்தல் எதிர்வரும் 14 ஆம் திகதி புதன்கிழமை வரை ஏற்றுக்கொள்ளப்படவுள்ள நிலையில் ஓகஸ்ட் 15 ஆம் திகதி வியாழக்கிழமை காலை 9 மணி முதல் 11. 30 மணிவரையான காலப்பகுதியில் வேட்பு மனுக்கள் ஏற்றுக்கொள்ளப்படவுள்ளன. இதேவேளை, தபால் மூல வாக்களிப் புக்கான விண்ணப்பங்களை சமர்ப்பிக் கும் கால அவகாசம் நேற்று முன்தினம் வெள்ளிக்கிழமை நள்ளிரவுடன் நிறைவடைந்தது.

புதிய ஜனநாயக முன்னணி சார்பில் போட்டியிடுவதற்கு ஓசல ஹேரத்தும், இலங்கை தொழிலாளர் கட்சி சார்பில் ஏ. எஸ். பி. லியகேவும், ஐக்கிய மக்கள் சக்தி சார்பில் சஜித் பிரேமதாஸவும், தேசிய அபிவிருத்தி முன்னணி சார்பில் எஸ். கே. பண்டாரநாயக்கவும், தேசிய ஜன நாயக முன்னணி சார்பில் விஜயதாஸ ராஜபக்ஷவும், ஐக்கிய சோஷலிச கட்சி சார்பில் சிறிதுங்க ஜெயசூரியவும், புதிய சிஹல உறுமய கட்சி சார்பில் சரத் மனமேந்திரவும்,

ஜனசேனா முன்னணி சார்பில் பத்தரமுல்லே சீலரத்ன தேரரும், அருணலு மக்கள் முன்னணியின் சார்பில் கே. ஆர். கிறிஷானும், தேசிய மக்கள் சக்தி சார்பில் அநுரகுமார திஸநாயக்கவும், சோசலிச சமத்துவ கட்சி சார்பில் பானி விஜேசிறிவர்த்தன, நவ சமசமாஜக் கட்சி சார்பில் பிரியந்த புஸ்பகுமாரவும், எங்கள் மக்கள் சக்தி சார்பில் ஜே. டீ. கே. விக்கிரமரத்ன ஆகியோர் அங்கீகரிக்கப் பட்ட அரசியல் கட்சிகள் என்ற ரீதியில் கட்டுப்பணம் செலுத்தியுள்ளனர்.

ரணில் விக்கிரமசிங்க, சரத் கீர்த்திரத்ன, கே. கே. பியதாஸ, ஆனந்த குலரத்ன, அக்மீமன தயாரத்ன தேரர் , சிறிபால அமரசிங்க , சரத் பொன்சேகா, அன்ரனி விக்டர் பெரேரா, ஐதுருஸ் முஹம்மது இல்யாஸ், மானகே பேமசிறி, அநுர சிட்னி ஜயவர்த்தன, டீ. எம். பண்டாரநாயக்க, எம். திலகராஜா, ஆகியோர் சுயேட்சை வேட்பாளராக போட்டியிட கட்டுப்பணம் செலுத்தியுள்ளனர். (எ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஈழநாடு
Eelanadu

தோட்டத் தொழிலாளர் சம்பள விவகாரம்:

# முதலாளிமார் சம்மேளனத்துடனான பேச்சில் ஜனாதிபதியும் பங்கேற்பார்!

கொழும்பு, ஓக. 11

**தோட்டத் தொழிலாளர்களின் சம்பளப் பிரச்னை குறித்து நாளை திங்கட்கிழமை முதலாளிமார் சம்மேளனத்துடன் பேச்சுகள் நடைபெறவுள்ளதாகவும் இந்தப் பிரச்னையை நேரடியாக கையாள எதிர்பார்ப்பதாகவும் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தெரிவித்துள்ளார்.**

தொழிலாளர்களின் சம்பளப் பிரச்னையை பேசிவந்த மனுஷ நாணயக்கார, அமைச்சுப் பதவியும் பாராளுமன்ற உறுப்பினர் பதவியையும் இழந்துள்ளார். இதனால் இந்த அமைச்சு பதவியை தான் பொறுப்பேற்று சம்பளப் பிரச்னைக்குத் தீர்வு வழங்கவுள்ளதாக ஜனாதிபதி கூறியுள்ளார்.

சமூக வலையத்தளங்களில் முன்வைக்கப்படும் கேள்விகளுக்கு நேரலையாக பதிலளிக்கும் நேரலை நிகழ்ச்சியில் பங்கேற்றபோதே ஜனாதிபதி இந்த விடயத்தை வலியுறுத்தினார்.

நாளை திங்கட்கிழமை முதலாளிமார் சம்மேளனத்துடன் இந்த விவகாரம் தொடர்பாக பேச்சுகள் நடத்தப்படவுள்ளன. இதில் கம்பனிகள், தொழிற்சங்கங்கள், அரச தரப்பினர் கலந்துகொள்ளவுள்ளன. (ஐ)

# பொலிஸ் மா அதிபர் இல்லாததால் யுக்திய நடவடிக்கை தடைப்படுகிறது

## பொது மக்கள் பாதுகாப்பு அமைச்சர்

கொழும்பு, ஓக. 11

பொலிஸ் மா அதிபர் ஒருவர் இல்லாததால் யுக்திய நடவடிக்கைக்கு தடை ஏற்பட்டுள்ளதாக பொது மக்கள் பாதுகாப்பு அமைச்சர் டிரான் அலஸ் தெரிவித்துள்ளார்.

பொலிஸ் மா அதிபர் தேசபந்து தென்னக்கோன் பதவியில் இருந்த சந்தர்ப்பத்தில் 'யுக்திய' வெற்றியடைவதற்காக தினசரி வேலைத்திட்டங்களை நடைமுறைப்படுத்தி அதிகாரிகளை சரியான முறையில் வழிநடத்தியதாக அமைச்சர் சுட்டிக்காட்டினார்.

போதைப்பொருள் கடத்தலை ஒழிக்க கடந்த ஆண்டு டிசெம்பர் மாதம் 'யுக்திய' நடவடிக்கை ஆரம்பிக்கப்பட்டது. இந்த நடவடிக்கையைத் தொடர்ந்து பாதாள உலகக் குழுக்களை ஒழிக்கும் நடவடிக்கையும் ஆரம்பிக்கப்பட்டது என்று தெரிவித்த அவர், ஜனாதிபதித் தேர்தலின்போது பாதுகாப்பை கையாள்வதற்கு தேவையான நடவடிக்கைகளை பொது பாதுகாப்பு அமைச்சு எடுத்துள்ளதாகவும் கூறினார்.

முன்னாள் ஜனாதிபதிகள் மற்றும் தேர்தலில் போட்டியிடும் வேட்பாளர்களுக்கு பாதுகாப்பை வழங்குவதற்காக குழுவொன்று கண்காணிப்பு நடவடிக்கைகளை மேற்கொண்டு வருவதாகவும் பாதுகாப்பு அமைச்சர் மேலும் தெரிவித்தார். (ஐ)

# மதுபானங்களின் விலைகளை குறைப்பதற்கு நடவடிக்கை!

கொழும்பு, ஓக. 11

எதிர்காலத்தில் மதுபானத்தின் விலையை குறைக்க முயற்சிகள் மேற்கொள்ளப்படுகின்றன என்று கலால் திணைக்கள வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.

750 மில்லி லீற்றர் மேலதிக மதுபான போத்தல் ஒன்றின் விலை 900 - 1000 ரூபாயாலும் 175 மில்லி லீற்றர் போத்தலின் விலை 200 ரூபாயாலும் குறைக்கப்படும் என்றும் தெரிவிக்கப்பட்டது.

இதேவேளை, அண்மையில் கலால் ஆணையாளருக்கும் மதுபான நிறுவனங்களுக்கும் இடையில் கலந்துரையாடல் ஒன்று நடைபெற்றது. இதைத் தொடர்ந்தே மதுபான விலைகளை குறைக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

இதன் காரணமாக எதிர்காலத்தில் மது, பீர் ஆகியவற்றின் விலை கணிசமாக குறையும் என கலால் துறை வட்டாரங்கள் தெரிவிக்கின்றன. (ஐ)

# தமிழ்ப் பொது வேட்பாளர் அவர்களுடைய விருப்பம்

## இராதாகிருஷ்ணன் எம். பி.

கொழும்பு, ஓக. 11

வடக்கு - கிழக்கில் தமிழ்ப் பொது வேட்பாளர் நிறுத்தப்பட்டது, அவர்களுடைய விருப்பம், எங்களை பொறுத்த வரையில் பெரும்பான்மையான வாக்குகளை பெறும் நபரிடம் இருந்து வாக்குகளை சிதறடிப்பது ஒரு பாதகமாக அமையும்- இவ்வாறு பாராளுமன்ற உறுப்பினர் வே. இராதாகிருஷ்ணன் தெரிவித்தார்.

கொழும்பில் நடந்த செய்தியாளர்கள் சந்திப்பின் போது அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார். அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு,

1,700 ரூபாய் சம்பளம் தருவதாக தெரிவிக்கவில்லை என்று ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க கூறியுள்ளார். பெருந்தோட்ட மக்களின் சம்பள விவகாரம் இரண்டு, மூன்று மாதங்களாக இழுப்பட்டு வருகிறது. சம்பள நிர்ணய சபை, சம்பளம் தருவதாக அறிவித்து வர்த்தமானி அறிவிப்பும் வெளியிடப்பட்டது.

ஜனாதிபதி மே முதலாம் திகதி கொட்டகலையில் நடைபெற்ற கூட்டத்தில் அறிவித்திருந்தார். வர்த்தமானி வெளியிட்ட பின் தற்பொழுது வர்த்தமானி திருத்தி அமைக்கப்பட்டுள்ளது.

இங்கு ஒட்டுமொத்தமாக பாதிக்கப்படுவது தொழிலாளர்கள் தான். ஆகவே, இந்தத் தொழிலாளர்களின் சம்பள பிரச்னை புரியாத புதிராகவே காணப்படுகிறது.

சம்பள பிரச்னை தீர்க்கப்படுமாயின் அதற்கு நாங்கள் முட்டுக்கட்டையாக இருக்க மாட்டோம். இவ்வாறு தெரிவித்து மக்களை தொடர்ந்தும் ஏமாற்றி அவர்களின் வாக்குகளை பெறும் நடவடிக்கையில் ஈடுபடக் கூடாது - என்றார். (எ)

# ஐ. எம். எவ்வின் நிபந்தனைகளை மாற்றினால் மீளவும் வரிசை யுகம்!

## எச்சரிக்கிறார் ஜனாதிபதி ரணில்

கொழும்பு, ஓக. 11

"எதிர்க்கட்சிகள் சர்வதேச நாணய நிதியத்தின் (ஐ. எம். எவ்.) நிபந்தனைகளில் மாற்றங்களைக் கொண்டு வர வேண்டும் - அதில் திருத்தங்களை செய்ய வேண்டும் என்று சற்றும் சிந்திக்காமல் பேசி வருகின்றன. அவ்வாறு நடந்தால் என்ன நடக்கும் என்று யோசித்துப் பாருங்கள்? இரண்டு வருடங்களுக்கு முன்பு ஏற்பட்ட வரிசை யுகமே மீண்டும் உருவாகும். ஆகவே, இந்த நிபந்தனைகளை சரியாக முன்னெடுத்து வந்தது யார் என்பதை அறிந்து அவர்களுக்கு உங்கள் ஆதரவை வழங்குங்கள் என்று ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தெரிவித்தார்.

மஸ்கெலியாவில் நடந்த நிகழ்வு ஒன்றிலேயே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அத்துடன், இரண்டு வருடங்களுக்கு முன்பு எமது நாடு எப்படி இருந்தது என்பதை நான் புதிதாக கூறத் தேவையில்லை. இப்போது நாடு இயல்பு நிலைமைக்கு வந்துள்ளது. ஆனால், முழுமையாக நாம் மீளவில்லை. உலக நாடுகள் மற்றும் சர்வதேச நாணய நிதியத்தின் ஊடாக நாம் கடன்களை பெற்றோம். அவற்றை முறையாக திருப்பி செலுத்துவதற்கான நிபந்தனைகளை மிகவும் கவனமாக நிறைவேற்றினோம்.

அந்த நாடுகளுடனும் நாணய நிதிய அதிகாரிகளுடன் ஒப்பந்தங்கள் குறித்து மிகவும் சுமுகமாக கலந்தரையாடினோம். இந்த ஒப்பந்தங்களை நாம் கவனமாக கடைப்பிடித்தால் எதிர்காலத்தில் மேலும், உதவிகளைப் பெறலாம். ஆனால், அவற்றை மீறினால் எதிர்காலத்தில் எமக்கு எந்த வித உதவிகளும் கிடைக்காது.

நாம் 17 தடவைகள் நாணய நிதிய ஒப்பந்தங்களை மீறியுள்ளோம். இனி அப்படி இடம்பெற்றால் எமது எந்த அனுதாபங்களையும் எவரும் காட்டமாட்டார்கள். ஆனால், எதிர்க்கட்சிகள் இதை விளங்கிக்கொள்ளாமல் அவற்றில் திருத்தங்களை கொண்டு வர வேண்டும் என்று பேசுகின்றனர். குறித்த நிகழ்ச்சி திட்டத்துக்கு அமையவே நாம் பயணிக்க வேண்டியுள்ளோம். மீறினால், மீண்டும் வங்குரோத்து நிலைமைக்கே செல்ல வேண்டும்.

ஆகவே எதிர்வரும் காலத்தில் நாம் மிகவும் கவனமாக செயல்பட வேண்டும். இங்கே எம்மத்தியில் உள்ள கேள்வி என்னவென்றால் கடின நிலைமையிலிருந்து மீண்ட நாம் மீண்டும் வரிசை யுகத்துக்கு செல்ல வேண்டுமா இல்லையென்றால் முன்னேற்றத்தை நோக்கி செல்லப்போகின்றோமா என்பதுதான்.

எமக்கு போதுமான வருமானம் இல்லாத காரணத்தாலேயே அந்நிய செலாவணியை நம்பியிருக்கின்றோம். பொருட்களை இறக்குமதி செய்கின்றோம். ஆனால் அடுத்த பத்து வருடங்களில் நாம் ஏற்றுமதிசார் பொருளாதாரத்தில் தன்னிறைவை அடைய முடியாவிடின் மீண்டும் எமது நாடு பொருளாதார சிக்கல்களுக்கு முகங்கொடுக்கும்.

சிந்தித்துப்பாருங்கள், நாம் பழைய கடனையும் செலுத்த வேண்டியுள்ளது, எதிர்காலத்தில் பெற வேண்டிய கடன்களையும் செலுத்த வேண்டியுள்ளது. இதுவே தற்போது எம்மத்தியில் இருக்கக் கூடிய பிரதான இரு பிரச்னைகள். இவை உங்களுடைய எதிர்காலத்தைப் பாதிக்கக்கூடிய பிரச்சினைகள். ஆகவே தப்பித்து ஓடியவர்கள் இந்த பிரச்னைகளுக்கு முகங்கொடுக்க முடியுமா என்பதை சிந்தித்துப்பாருங்கள்.

தேர்தலில் யாருக்கு ஆதரவு:

# மக்களின் கருத்தறியும் முயற்சியில் ரிஷாத் கட்சி!

வவுனியா, ஓக. 11

அகில இலங்கை மக்கள் காங்கிரஸ் ஜனாதிபதித் தேர்தலில் நாம் யாரை ஆதரிக்க வேண்டும் என்பது தொடர்பாக வவுனியா மக்களின் கருத்தை அறியும் சந்திப்பு சாளம்பைக்குளம் பள்ளிவாசலில் நேற்று சனிக்கிழமை நடைபெற்றது.

இதன்போது, பொதுமக்களிடம் அகில இலங்கை மக்கள் காங்கிரஸ் யாரை ஆதரிக்க வேண்டும் என்ற விடயம் தொடர்பாக மக்கள் பலரும் கருத்து தெரிவித்திருந்தனர்.

கட்சியின் பிரதி தவிசாளர் கலாநிதி முத்து முகமது தலைமையில் நடந்த இந்நிகழ்வில் கட்சியின் தலைவரும் வன்னி பாராளுமன்ற உறுப்பினருமான ரிசாத் பதியுதீன் உட்பட பலர் கலந்து கொண்டனர். (ஐ)

# இளைஞர் கடத்தப்பட்டு தாக்குதல் சந்தேகத்தில் 7 இளைஞர்கள் கைது!

வவுனியா, ஓக. 11

வவுனியா இளைஞன் கடத்தப்பட்டு தாக்கப்பட்ட சம்பவத்துடன் தொடர்புடையவர்கள் என்ற சந்தேகத்தில் 7 பேர் நேற்று கைது செய்யப்பட்டனர். அத்துடன், 3 மோட்டார் சைக்கிள்களும் கைப்பற்றப்பட்டன என்று வவுனியா பொலிஸார் தெரிவித்தனர்.

இந்தச் சம்பவம் தொடர்பில் மேலும் அறிய வருவதாவது,

கடந்த வியாழக்கிழமை அதிகாலை வவுனியா பூந்தோட்டத்தை சேர்ந்த இளைஞர் ஒருவரை காணவில்லை என வவுனியா பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்யப்பட்டிருந்தது.

குறித்த இளைஞர் கடந்த புதன் கிழமை தனது வீட்டில் பிறந்தநாள் நிகழ்வை கொண்டாடினார். இதன்போது, இளைஞர்கள் சிலர் சேர்ந்து மதுவும் அருந்தியுள்ளனர். இந்த நிலையில், மது அருந்தியிருந்த இளைஞர்கள் அங்கு வந்திருந்த பெண்கள் சிலருடன் நடனமாட முற்பட்டனர். இதனை குறித்த இளைஞர் தடுத்துள்ளார்.

இதையடுத்து, அவர்களுக்குள் மோதல் ஏற்பட்டது. இந்த மோதலைத் தடுத்து மோதலில் ஈடுபட்டவர்களை அங்கிருந்தவர்கள் சமரசம் செய்து வைத்தனர்.

இதைத் தொடர்ந்து வியாழக் கிழமை அதிகாலை மோட்டார் சைக்கிள்களில் வந்த இளைஞர்கள் பிறந்தநாள் கொண்டாடிய இளைஞரை கடத்திச் சென்று பாழடைந்த வீடு ஒன்றில் வைத்து கடுமையாக தாக்கினர். இதில் படுகாயமடைந்த இளைஞர் மீட்கப்பட்டு மருத்துவமனையில் சேர்க்கப்பட்டார்.

அவர் அளித்த வாக்குமூலத்தைத் தொடர்ந்து 7 இளைஞர்கள் கைது செய்யப்பட்டனர். கைதானவர்கள் 20 - 22 வயதுடையவர்கள் என்று தெரிவிக்கப்பட்டது.

அவர்களிடம் கடத்தலுக்கு பயன்படுத்தப்பட்ட 3 மோட்டார் சைக்கிள்களும் பொலிஸாரால் கைப்பற்றப்பட்டுள்ளன. (ஐ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்பத்திரிகை 707, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம் என்ற முகவரியில் அமைந்துள்ள ஈழநாடு பிறைவேற் லிமிட்டெட் நிறுவனத்தினரால் 11.08.2023 அன்று ஏ9 வீதி, நாவற்குழியில் உள்ள ஈழநாடு பிறைவேற் லிமிட்டெட் அச்சகத்தில் அச்சிட்டு வெளியிடப்பட்டது.